தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்—12

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ. ஆ. ப.
GIFTED BY
MR. TIRUMALAI I.A.S. (Late)

# நன்னிலம் கல்வெட்டுக்கள்

## (முதல் தொகுதி)

810

தொகுப்பாசிரியர்
திருமதி. ஆ. பத்மாவதி, எம். ஏ.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை
1979

முதற் பதிப்பு 1979

தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் 6

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10427
LIBRARY.
Acc. No.
Date
MADRAS.

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

4177095482

நன்னிலம் கல்வெட்டுக்கள் - முதல் தொகுதி

திருமதி. ஆ. பத்மாவதி, எம்.ஏ. - தொகுப்பாசிரியர்

விலை : 15-00

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

# முன்னுரை

தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் அனைத்தையும் படியெடுத்து அச்சிடவேண்டும் என்ற தமிழக அரசின் ஆணைக்கு இணங்க, இத்துறை தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலுமுள்ள கல்வெட்டுக்களையும் படியெடுத்துப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப்பணியின் முதல் கட்டமாகச் சென்னை மாவட்டக் கல்வெட்டுக்கள் படியெடுத்து அச்சிடப் பெற்றன. தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் மூன்று பகுதிகளும், தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்கள் இருபகுதிகளும் அச்சாகி உள்ளன.

இந்த வரிசையில் தற்போது தஞ்சை மாவட்டக் கல்வெட்டுக்கள் தொகுக்கப்பெற்றுப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. அதில் முதலாவதாகத் 'திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுக்கள்' வெளியிடப்பட்டது. இத் தொகுதியில் அடுத்து 'நன்னிலம் வட்டக் கல்வெட்டுக்கள்' முதல்பகுதி வெளியிடப்படுகிறது.

கல்வெட்டுக்கள் தொகுக்கப்பெற்று வரிசை எண்ணும், ஊர்க் கல்வெட்டு எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன. மத்தியத் தொல்பொருள் துறையினர் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அவ்வூர்க் கல்வெட்டுகளும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

''உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'' என்றான் புறநானூற்றுப் புலவன். தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியமாக விளங்குவதற்கு அன்று சோழப் பெருமன்னர்கள் நீர் பாசனத்துக்கு செய்த அருந்தொண்டே காரணம். எவ்வளவு கால்வாய்களையும் வாய்க்கால்களையும் வெட்டி அவர்கள் வளம் பெருக்கியுள்ளார்கள் என்பதற்கு இந்நூலிலுள்ள கல்வெட்டுகளில் பல சான்றுகள் உள்ளன. இதோ இந்தப் பெயர்களைப் பாருங்கள்.

செம்பியன் மாதேவிப் பேராறு
முடிகொண்ட சோழப் பேராறு
வீரராஜேந்திர சோழப் பேராறு
புத்தாறான குலோத்துங்க சோழப் பேராறு
(புதிதாக பெருங்கால்வாய் வெட்டி சோழன் தன் பெயரிட்டான் என்பதை இது தெரிவிக்கிறது.)
பாண்டி குலபதிப் பேராறு

இவையெல்லாம் பெருங்கால்வாய்களாகப் புதிதாக வெட்டப்பட்டவை.

இராஜராஜன் வாய்க்கால்
சனநாதன் (இராஜராஜன் பெயரில் ஒன்று) வாய்க்கால்
இராஜேந்திரசோழன் வாய்க்கால்
கங்கைகொண்ட சோழன் வாய்க்கால்
இராஜகம்பீரன் வாய்க்கால்
விக்கிரம சோழ வாய்க்கால்
தானதுங்க வாய்க்கால்
அம்மை அப்பன் வாய்க்கால்
திருவாஞ்சியதேவன் வாய்க்கால்
சோமநாததேவன் வாய்க்கால்
முன்னூற்றுவன் வாய்க்கால்
மூவாயிரவன் வாய்க்கால்
கூற்றங்குடி வாய்க்கால்
பாம்பூர் வாய்க்கால்
தளி வாய்க்கால்
உட்சிறு வாய்க்கால்

நன்னிலம் வட்டத்தில் ஒரு பகுதியிலுள்ள கல்வெட்டுக்களே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வொரு பகுதியிலேயே இவ்வளவு பேராறுகளும் வாய்க்கால்களும் உள்ளன எனில் எவ்வளவு நீர்வளம் செழிக்கச் சோழர் அடிகோலினர் என ஊகிக்கலாம்.

இப்பகுதியில் கீழ்வரும் நான்கு வளநாடுகள் குறிக்கப்படுகின்றன.

அருமொழி தேவ வளநாடு
உய்யக்கொண்டார் வளநாடு
குலோத்துங்க சோழ வளநாடு
கேய மாணிக்க வளநாடு

இவற்றில் பெரும் பகுதி குலோத்துங்க சோழ வளநாட்டிற்குள் இருந்தன. இதன் கீழ் அம்பர் நாடு, பனையூர் நாடு, திருமருகல் நாடு, இங்கநாடு, ஆகியவை இருந்தன. அடுத்து உய்யக்கொண்டார் வள நாட்டின் கீழ் அம்பர் நாடும், பாம்பூர் நாடும் இருந்தன. அருமொழி தேவ வளநாட்டின் கீழ் மங்கல நாடு திகழ்ந்தது. கேய மாணிக்க வளநாட்டில் மருகல் நாடு இருந்தது. இக்கல்வெட்டுக்களிலிருந்து ஒரே வளநாட்டின் கீழ் இரு நாடுகள் இருந்ததைக் காண்கிறோம். இது மேலும் ஆராய்தற்கு உரியது.

இக்கல்வெட்டுக்களிலிருந்து சில பொருளாதாரச் செய்திகளையும் அறிகிறோம். சோழர் காலத்தில் தனியார் மிகவும் பரந்த அளவில் தான் நிலம் கொண்டிருந்தார்களா, சிறிய அளவு நில உடமை பெற்றிருந்தார்களா என்ற ஐயம் எழலாம். ஒரு சில கல்வெட்டுக்களிலிருந்து மிகச் சிறிய அளவில் நிலம் உடையவர்கள் இருந்தார்கள் என்று அறிகிறோம். ஒரு வேலியில் $\frac{1}{160}$ பாகம் (அரைக்காணி) நிலம் கொண்டவரும் இருந்தனர் என்று அறிகிறோம். நிலம், குழி, மா, காணி,

அரைக்காணி, முந்திரி என்ற அளவுகளில் அளக்கப்பட்டது. சில நிலங்களின் விலையையும் அறிய முடிகிறது. 13-ஆம் நூற்றாண்டில் $\frac{7}{20}+\frac{1}{40}$ வேலி நிலம் 6 பணத்துக்கு விற்கப்பட்டது. அதே காலத்தில் $\frac{2}{60}$ வேலி நிலம் 230 பணத்துக்கு விற்கப்பட்டது. மற்றுமொரு நிலம் $3\frac{6}{20}+\frac{1}{40}$ வேலியும் 500 குழி மனையும் 250 பணத்துக்கு விற்கப்பட்டன. 1 வேலி நிலம் சற்றேறக்குறைய 70 பணத்துக்கு விற்கப்பட்டது என்று அறியலாம். இப்பகுதியிலிருந்த நிலத்தை அளக்கப் பயன்பட்ட கோலுக்குத் 'திருவுலகளந்த தஞ்சாவூர் இ[மூவை]ந்த படி கோல்' என்ற பெயர். அக்கோலின் அளவும் நமக்குத் தெரிகிறது.

இக்கல்வெட்டுக்களில் திருமீய்ச்சூர், எண்கண், திருவாஞ்சியம் திருசெங்காட்டாங்குடி, திருப்பாம்புரம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் சிறந்தவையாய் உள்ளதைக் காணலாம்,

திருச்செங்காட்டாங்குடிக் கோயிலில் சிவபெருமானுக்குச் சீராள தேவர் என்று பெயர் என்று அறிகிறோம். இவ்வூரில் சிறுத்தொண்டருக்கு எடுக்கப்பட்ட பல விழாக்களைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சிறுத்தொண்டரின் மகனுக்குச் சீராளன் என்னும் பெயர், அவ்வூர் தெய்வத்தின் பெயரால் வந்தது என அறிகிறோம்.

இத்தொகுப்பில் பல சுவையான கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தில் 12-ஆம் நூற்றாண்டில் கோட்டூர் கோயிலில் சாந்திக் கூத்தாட இராமன் திருச்சிற்றம்பலமுடையான் என்பவன் இருந்தான். இவனுக்கு 'விக்ரமசோழ வாசய்யன்' என்ற பட்டப் பெயர் இருந்தது. இஞ்சிக்குடி என்ற ஊரிலிருந்து கிடைத்த இரண்டு கல்வெட்டுக்கள் கவனத்துக்குரியவை. இரண்டாம் இராஜேந்திர சோழன் சாளுக்கிய ஆஹவ மல்லனுடன் இட்ட போரில் ஒரு வீரன் மாற்றான் யானை முகத்தின் மீது தனது குதிரையைப் பாய்ச்சி அப்போரில் வீழ்ந்தான். அதைக் கல்வெட்டு அழகாக "இரட்டராச்சியந் துமிச்சு பேராற்றங் கரைக்கேய் வந்து ஆகோமல்லனோடு பொருத பூசலில் ஆனைமுகத்தில் குதிரை பாச்சிபட்ட சங்கரன் பெரியானான கல்லியாணபுரங்கொண்ட சோழ பிரமாதராயன்" என்று கூறுகிறது. அவன் மகன் இராஜாதிராஜனுக்கு நிலம் அளித்ததை கூறுகிறது அந்தக் கல்வெட்டு. போரில் இறந்த வியாபாரி ஒருவனைக் குறிக்கிறது மற்றொரு கல்வெட்டு. "துவராபதி பேரிளமை ஏரிஇன் சென்று போர் நடத்தி நன்றி செய்து பட்ட கோணல் தில்லை அழகனுக்கும்" என்று கூறுகிறது ஒரு கல்வெட்டு. மற்றொரு முக்கிய கல்வெட்டும் இவ்வூரிலிருந்து வருகிறது. இக்கல்வெட்டு 'ஓவாத கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள்' என்பவரைக் குறிக்கிறது. மூவருலாவும் தக்கயாகப்பரணியும் பாடிய ஒட்டக் கூத்தரை கவிச் சக்கரவர்த்தி என்று கூறுவர். இக்கல்வெட்டில் உள்ள ஓவாத கூத்தனுக்கும் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் இருந்தது என அறிகிறோம்.

இதுபோன்ற இன்ன பிற கல்வெட்டுகளை இத்தொகுதி தாங்கி உள்ளது.

இக்கல்வெட்டுகளைப் படியெடுப்பதிலும், படிப்பதிலும், தொகுப்பதிலும், அச்சிடுவதிலும் ஈடுபட்டு அயராது பணிபுரிந்த இத்துறையின் ஊழியர்கள் பாராட்டுக்குரியோர். இக்கல்வெட்டுத் தொகுதியை திறனுடன் பதிப்பித்த திருமதி பத்மாவதி நமது பாராட்டுக்குரியவர்.

**இரா. நாகசாமி**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| கண்கொடுத்தவனிதம் | ... | 1 |
| திருமெய்ச்சூர் | .... | 3 |
| திருவாஞ்சியம் | ... | 19 |
| திருச்செங்காட்டங்குடி | ... | 55 |
| எண்கண் | ... | 98 |
| கோட்டூர் | ... | 124 |
| புத்தகளூர் | .... | 133 |
| திருப்பாம்புரம் | ... | 134 |
| விற்குடி | ... | 162 |
| இஞ்சிக்குடி | ... | 167 |
| ஆண்டியூர் | ... | 187 |
| சிறுபுலியூர் | ... | 188 |
| கோட்டம்பாடி | ... | 190 |
| பத்தார் | ... | 191 |
| சிமிழி | ... | 193 |
| துறையூர் | ... | 194 |
| பாவட்டாக்குடி | ... | 195 |
| திருபள்ளிமுக்கூடல் | ... | 196 |

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 7-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1185 ஆம் ஆண்டு |
| ஊர் : | கண்கொடுத்தவனிதம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : நயனவரதேஸ்வரர் கோயில் மகாமண்டபத் தென்புற அதிட்டானத்திலுள்ள பட்டிகையிலுள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கச் சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில், நல்லூருடையான் இராமன் ஸ்ரீ கயிலாசமுடையான் என்பவன் ஜயதுங்க சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பகுதியான (பிடாகை) ஆலத்தாங்குடியில் புகழாபரணீஸ்வரமுடையாரை எழுந்தருளிவித்த செய்தியும், எழுந்தருளுவித்தபின் இக்கோயில் ஆதிசண்டேசுவரதேவர் பெயரில் தேவதானமாக நிலம் கொடுத்த செய்தியும் தெரிய வருகிறது. இவ்வாறு நிலம் கொடுத்த நல்லூருடையான் இராமன் ஸ்ரீகயிலாசமுடையான், சுமார் நாற்பத்தொருவரிடமிருந்து நிலம் வாங்கியிருக்கின்றான். கல்வெட்டின் இறுதிப் பகுதி காணப்படவில்லையாதலால் மேலும் எத்தனை பேரிடம் நிலம் வாங்கினான், அந்நிலத்தில் வரும் வருமானம் கொண்டு இறைவனுக்கு என்னென்ன வழிபாடு செய்தார்கள் போன்ற விவரங்கள் தெரிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ புயல் வாய்த்து வள[ம்] பெருக பொய்யாத நான் மறையின் செயல் வாய்ப்பத் திருமகளுஞ் செய மகளுஞ் சிறந்து வாழ வெண்மதி போற் குடை விளங்கவேல் வேந்தரடி பணிய மண்மடந்தை மனங்களிப்ப மனுநீதி தழைத்தோங்கச் சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செல நடாத்தக் கற்பகாலாமே வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பற்மரான

2 திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராஜேந்திர தேவர்க்கு யாண்டு ஏழாவது மேஷநாயற்று அபர பக்ஷத்து துவாதசியும் வெள்ளிக்

(திருப்பவும்)

கிழமையும் பெற்ற சதையத்திளுள் அருமொழி தேவ வளநாட்டு மங்கல நாட்டுப் ப்ரூஹ்மதேயம் ஸ்ரீ ஜயதுங்கச் சதுபேதி மங்கலத்துப் பிடாகை ஆலத்தாங்குடியில் நல்லூருடையான் இராமன் ஸ்ரீகயிலாஸமுடையான் எழுந்தருளுவித்த உடையார் புகழாபரணீஸ்வரமுடையார்க்கு இக்கோயில் ஆதிசண்டேசுரதேவர் திருநர்மத்தில் இ நல்லூருடைான்

3 இராமன் ஸ்ரீகயிலாஸமுடையான் பலர் பக்கலும் வி[லை கொ]ண்டு விட்ட நிலத்துக்கு ஸ்ரமாணப்படி பாரத்துவாசி திருமாலிருஞ் சோலை திருப்புல்லாணி பட்டனும் இவன் தம்பி திருநாடுடையான் பட்டனும் பக்கற் கொண்டு விட்ட குழி ஐம்பதும்மாய்க் கூத்தப்பட்டன் பக்கற் கொண்ட குழி [அறுபத்து]நாலும் உலோகிதன் கோவிந்தன் சி[ராம]பட்டன் [பி]ராம்ம[ணி] உமையாண்டாட்சாணி பக்கற்கொண்ட குழி நாற்பத்தஞ்சும் உலோகிதன் திருமாலிருஞ் சோலை [ஆண்டான்] பட்டன் பிராம்மணி துற்கையாண்டாட்சாணி பக்கற் குழி நாற்பத்தைஞ்சும் ஆட்கொண்ட வில்லி

4 பட்டன் மகன் பெருமாள் பிராம்மணி துற்கை யாண்டாட்சாணி பக்கற் கொண்ட குழி நாற்பதும் பட்டணப் பெருவழி திருத்தாய ஸபை நியோகப்படி குழி ஐம்பத்தாறும் உலோகிதன் மணிவண்ணன் பெரிய நம்பிபட்டன் பிராமணி கற்பகங் கொண்டாட்சாணி பக்கற்கொண்ட குழி நாற்பதும் பாரத்து வாசி ஆளவந்தான் சிராமபட்டன் பக்கற் கொண்ட குழி அறுபத்து நாலும் திருப்புல்லாணிப் பட்டனும் திருநாடுடையான் பட்டனும் தன்மதானம் விட்ட குழி எண்பத்திரண்டும் இவ்வூரில் விளை நிலங் கவுசிகன் ஸ்ரீ பரதன் தாமோதர பட்டன் பிராமணி ஆண்டாட்சாணி பக்கற் கொண்ட நிலம் முக்காணியும் பாரத்து

5 வாசி கோவிந்தன் வல்லானைகொன்றான் பட்டன் பக்கற் கொண்ட நிலம் முக்காணியும் கவுசிகன் ஆளுடையான் பட்டன் பக்கற் கொண்ட நிலம் ஒருமா அரைக்காணியும் மங்கலமான இராஜேந்த்ரச் சதுர்வேதி மங்கலத்து உலோகிதன் வடகோபுர முடையான் ஆள வந்த பட்டநும் இவன் தம்பி பெரிய நம்பி பட்டனும் பக்கற் கொண்ட குழி நாற்பதும் ஆள வந்தான் உருத்திர கோடீஸ்வரமுடையான் பக்கற் கொண்ட குழி நாற்பத்தைஞ்சும் பாரத்து வாசி சிராமன் ஆளவந்தான் பட்டன் பக்கற் கொண்ட குழி நூற்று முப்பத்தொன்றும் உருத்திரகோடீஸ்வர முடையான் ஆளவந்தான் பட்டனும் இவன் தம்பி பெரிய நம்பிசன்மனும் பக்கல் கொண்ட குழிநா

6 ற்பத்தெட்டும் மணிவண்ணன் பக்கல் கொண்ட குழி இருபத்தொன்றும் ஆளுடையான் திருநீலகண்ட பட்டன் பக்கற் கொண்ட குழி மூன்றரையும் ஆளவந்த பட்டன் பக்கற் கொண்ட குழி மூன்றரையும் மணிவண்ணன் உய்ய வந்தாட்

சானி பக்கற் கொண்டகுழி பதினொன்றேகாலும் இவ்வூர் விளை நிலம் பாரத்துவாசி சீரிளங்கோ திருவெண்காடுடையான் சன்மனும் இவன் தம்பி ஆளுடையான் சன்மனும் பக்கல் கொண்ட நிலம் ஒருமாவும் உலோகிதன் மணிவண்ணன் குமாரஸ்[வா]மி பட்டன் பிராம்மணி ஆட்கொண்டாட்சானி பக்கற் கொண்ட நிலம் அரைமாவும் உலோகிதன் திருநீலகண்டன் ஆளுடையான் பட்டன் பக்கல் கொண்ட நிலம், அரைமா

7 வின் கீழே மும்மாவரையும் உலோகிதன் ஆளவந்த பட்டன் பக்கற்கொண்ட நிலம் அரைக்காணியும் சங்கருதி பெரிய நம்பி திருவரங்க நாராயண பட்டன் பக்கற் கொண்ட நிலம் காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மாகாணியும் உலோகிதன் மணிவண்ணன் குமாரஸ்வாமிபட்டன் பக்கற் கொண்ட நிலம் முக்காணிக் கீழரையே மூன்று மா அரைக்காணியும் ஐயதுங்கப்ப்ரூஹ(ா)ராயன் பக்கல் கொண்ட நிலம் முக்காணிக் கீழரையும் இந்நாட்டுச் சம்பந்தன் பாடியான செம்பியன் சுராயங்குடியிற் குறும்பிறுடையான் வைகுந்தன் பாரியை நம் . ாண்டி பக்கற் . . .

8 டையான் வீரசோழன் பக்கற் கொண்ட குழி ஒன்றேகாலும் இந்நாட்டுத் தக்களூர் நாட்டு விடையபுரமான விருதராஜ பயங்கரபுரத்துக் குழிச் சாறுடையான் திருவேகம்பமுடையான் தேவாண்டான் பக்கல் கொண்ட நிலம் காலும் இந்நாட்டுத் தக்களூர் நாட்டுத் தக்களூரான தரணிவிச்சாதிரபுரத்துத் தரமிலி நிலங்காலும் படக் கொண்ட நிலம் அரையே சின்னமும் இவ்வூரிற் [பாண்டிவா]யாற்றங்கரையிற் படுகையிற் திருநந்தவனமாக்க கொண்ட குழி நூற்றெண்பத்திரண்டும் இந்நாட்டு அலைவாயான பா (ண)

9 நல்லூருடையான் கரிகால் சோழப் பல்லவரையன் பக்கலும், கொண்டனிலம் ஒந்றரையும் குமாரமங்கலமுடையான் திருநாகீஸ்வரம்முடையான் பக்கற் கொண்ட குழி ஐம்பத்தொன்பதும் குமாரமங்கலமுடையான் வேளார் ஆண்ட கூ(த்*)தன் பக்கற் கொண்ட கோவில் குழி முப்பத்தைஞ்சே சின்நமும் இவ்வூரிற் [காணி கிழான்] பொன்னூர் மார்[ப]ன்பாரியை சென்தாண்டி பக்கற் கொண்ட குழி முப்பத்தைஞ்சே சின்நமும் இவ்வூரிற் அரசூருடையான் ஆதித்தன் கூத்தன் . .

10 நிரண்டரையும் இவூரில் நாஞ்சில் உடையான் அரையன் (சோறுடையான்) சோறுடையான் பக்கல் கொண்ட குழி மாற்று முப்பத்தைஞ்சும் மங்கலமான ராஜேந்திர சதுவேதி மங்கலத்து உலோகிதன் ஆளுடையான் ஆள வத்த பட்[ட]ன் தன்மதானமாக மேலை நாலு மாவில் மேல்க்கடைய னீர் வார்த்த நில அரைமாவின் கீழே மூமாவரையும் . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 36-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1298-ஆம் ஆண்டு |
| ஊர் : | கண்கொடுத்தவனிதம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் | | |

இடம் : நயன வரதேஸ்வரர் கோயில் வடபுறத்திலுள்ள பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : ஆலத்தாங்குடியில் உள்ள புகழாபரணீஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிகள் (கோயில் நிர்வாகத்தினர்) இக்கோயில் நாச்சியார் தேவத்தம்பிராட்டியார்க்கு, பலரிடம் நிலம் வாங்கி அளித்ததாகக் கூறப்படுகிறது. யார் யாரிடம் எவ்வளவு நிலம் வாங்கப்பட்டது எனக் கூறுகிறபோது, மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 36– ஆவது ஆட்சியாண்டிலும், சுந்தரபாண்டியனின் 3–ஆவது ஆட்சியாண்டிலும், அவனது 8-ஆவது ஆட்சி நாளிலும், விக்கிரமபாண்டியனின் 3–ஆம் ஆட்சியாண்டிலும், வீரபாண்டியனின் 20–ஆம் ஆட்சியாண்டிலும் யார் யாரிடம் நிலம் வாங்கப்பட்டது என்றும் கூறப்பட்டிருப்பது மிகவும் சுவையான செய்தியாகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு ப்ரஹ்மதேயம் [ஜ]யதரனை ஜயதுங்கச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை ஆலத்தாங்குடியில் உடை[யார் புகழா] பரணீஸ்வரமுடையான் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர் கன்மிகளோம் இந்நாயனார் கோயில் நாச்சியார் தெவத்தம்பிராட்டியார்க்கு பலர் பக்கலும் சண்டேஸ்வரப் பெருவிலை கொண்டும் பி . வாணிகளாலும் திரு ம . . . . ணியான கோமாற பன்மரான திரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு ௩௰௬ இவ்வூர் பாரத்து வாசி க[ரு] மாணிக்கன்

(திரும்பவும்)

2 நாராயண பட்டனும் கெவு[சி]யன் பெரும்புறக்கடல் பட்டனும் பக்கல் விலை கொண்ட இவ்வூர்ப்பிடாகை ஆலத்தாங்குடி பாண்டிவாய் ஆற்றுக்கு வட[க]ரை ப[ண்ணிய] கொல்லைகளில் நெல்லிக் கொல்லை என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ் பாற்கெல்லை ஆதமங்கலவனமாம் தேசத்துக்கு மேற்கு தென் பாற்கெல்லை கொள்கின்றார் நிலத்துக்கு வடக்கு மெல்பாற் கெல்[லை] [சீராமன்]நா[ராயண]பட்டன் நிலத்துக்குக்கிழக்கு வடபாற்கெல்லை கொள்கின்றார் நிலத்துக்கு தெற்கும் இந்நான் கெல்லையுள்

3 நடுவெட்பட்ட குழிராவுல் ௩௰ இவ்வூர் இலங்கை சென்றான் ஸ்ரீ க்ருஷ்ண பட்டன் பக்கல் கொண்ட இவ்வூர்ப்பிடாகை காவதகுடி பவுத்திரமாணிக்கவதிக்குக் கிழக்கும் வயிரவன் வாய்க்காலுக்கு வடக்கு உகூ௺ச் சதிரத்து வழிக்கரையென்று பேர் கூவப்பட்ட நிலத்து வடக்கடைய குழி ௩ாஎ௰௫ னல் ரூ௯ ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ௩-வது பாரத்து வாசி கரு மாணிக்க நாராயண[பட்ட]னும் பாரத்து வாசி[க]ளும் பிரான் திருக்கண்ணபுரமுடையான் பட்டனும் பக்கல் விலை கொண்ட இவ்வூர்ப்பிடாகை ஆலத்தாங்குடியில்

4 சுந்தரபாண்டியதேவர்க்கு அ-வது நாள் இந்நாட்டு . . சூத்திரு நாமத்துக்காணி[யாக] கொண்டும் யிடவா ஸ்ரீ தேவிவதிக்குக் கிழக்கு மூவாயிரவன் வாய்க்காலுக்கு வடக்கு கூ௰௪ சதுரத்து கிழக்கடைய ரூ௩ .[1] வ இதில் தெற்கடைய காவத குடி . . . காணி கொண்ட பெருமாள் திருவிடையா[ட்ட]த்துக்கு வடக் குப் பொன்படுயடி யென்று பேர் கூவப்பட்ட நிலத்தில் இலங்கை செந்றான் ஸ்ரீ க்ருஷ்ணபட்டன் ரூ௺ .[2] ரு இதில் வடக் கடைய ரூரு .[3] ஸ்ரீ பாரத்து வாசி கோவிந்தன் அழகிய மண வாள பட்டன் பிடவார் தந்த காவதகுடியில் பவுத்திரமாணிக்க வதிக்கு கிழக்கு இராஜராஜன் வாய்க்காலுக்கு

5 வடக்கு ௩௪௨ சதிரத்து மச்சு முறிப்பான் என்று பேர் கூவப் பட்ட நிலத்துக்கு கீழ்க்கடையதடி இரண்டினால் ரூ௨ .[4] ரும் ௩ சதிரத்து கீழ்க்கடைய தடி ஒன்று விட்டு மேற்கடைய ரூ ௨ . ரும் ஆக ரூ௪ . .[5] இவ்வூர் இலங்கை செந்றான் ஸ்ரீக்ருஷ்ணபட்டன் பக்கல் இவ்வூர்க்கைக் கொளரில் நகரி வீரமிண்டன் கொண்டு பிட வாரி தந்த ஆலத்தாங்குடி பாண்டிவாய் ஆற்றுக்கு வட கரைப்பட்ட நெல்லிக் கொல்லையில் கீழ்பாற்கெல்லை சீராமன் நாராயண பட்டன் நிலத்துக்கு மேற்கு தென்பாற்கெல்லை

6 கண்ணப்பிள்ளை நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை காட்டூரான் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இந்நாயனார் தேவதானத் துக்கும் கருமாணிக்கன் [நாராயண]பட்டன் நிலத்துக்கும் தெற்கு நடுவுள் பட்ட குழி கூ௰௫ரு னல் ரூ .[6] ரு இலங்கை செந்றான் க்ருஷ்ணபட்டன் பக்கல் கொண்ட ஆலத்தாங்குடி நெல் லிக்கொல்லை என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்

கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு மேற்கு தென் பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்து

7 க்காணிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு கிழக்கு வடபாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு தெற்கும் நடுவுகுழிரா உ௰௩ வது இவ்வூர் ஊருஷோன் ஸ்ரீ குடந்தையுடையான் ஸ்ரீஸேநாபதி அழகிய மணவாளப் பிரியன் பக்கல் கொண்ட ஆலத்தாங்குடி பாண்டிவாய் ஆற்றுக்கு வடக்குப்பட்ட நெல்லிக் கொல்லையில் தெற்கடையக் கொண்ட கீழ்பாற் கெல்லை தக்களூர் அகரப்பற்று விளை நிலத்துக்கு மெற்கு தென்பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத் துக்காணி[க்கு]

8 வடக்கு மேல்பாற்கெல்லை கண்ணப்பிள்ளை கொல்[லைக்]கு கிழக்கு வடபாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு தெற்கு இந்நான்கு எல்லையுள் நடுவுபட்ட குழிவராவுபட்ட குழி உா௫௰ ஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவர்க்கு ௩-வது பாரத்து வாசி சீராம பட்டன் பக்கல் கொண்ட இவ்வூரில் கீழ்பாற் கெல்லை தெருவுக்கு மேற்கு தென்பாற்கெல்லை திருவீதிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை இ[ந் நா]யனார் திருநாமத்துக் காணிக்கு கிழக்கு வடபாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு தெற்கு நடுவுகுழி ாசம இதன் கி[ழ]க்கு கீழ்பாற் கெல்லை பள்ளி கொண்[ட]

9 பெருமாள் நிலத்துக்கு மேற்கு தென்பாற்கெல்லை உத்தமன் கொல்லைக்கு வடக்கு மேல்பாற்கெல்லை தெருவுக்கு கிழக்கு வடபாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு தெற்கு நடுவுகுழி ா௫ நல்லூருடையான் திருக்கற்றளி சமைத்தான் இராமாண்டான் பக்கல் விலைகொண்ட ஆலத்தாங்குடி ஸ்ரீதேவி வதிக்கு கிழக்கு மூவாயிரவன் வாய்க்காலுக்கு வடக்கு உகூச சதிரத்து கிழக்கு கீழ் ஒ[ன்]று விட்டு மேற்கடைய தடி ங ஞன். ௫௱௬ .7 கூ வது [க]ன்னய்யரில் பக்கமழகிய நாயக்கன் பிடவாரி தந்த ஆலத்தாங்குடியில் உத்தமன்

10 பாண்டிவாய் ஆற்றுக்கு வடக்கு இந்நாயனார் தேவதானத்துக்கு மேற்கு தெருவில் தென் தலைக்கு தெற்கு இந்நாயனார் திருநாமத்துக்காணி படுகைக்கு கிழக்கு நடுவு குழி ௩ா ஆலத்தாங்குடி காவல் பள்ளிகளில் வருத்திராண்டானை கைக்கொள பேரையன் பிடமார் தந்த ஆலத்தாங்குடியில் நெல்லிக் கொல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும் இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு உள்ளு தெற்கு புறக்கடல் திருவேங்கடபட்டன் படுகைக்கு வடக்கு குழி கூ௰௨ ௬ள. பெரும் புறக்கடல் திருவேங்கடபட்டன் பிடவார் தந்த ஆலத்தாங்குடி

11 பாண்டிவாய் ஆற்றுக்கு வடக்கு நெல்லிக் கொல்லையில் கீழ்பாற் கெல்லை இந்நாயனார் விடையபுரப் பற்று திருத்தோப்புக்கு

மேற்கு தென்பாற்கெல்லை பாண்டிவாய் ஆற்றுக்கு வடக்கு மேல்பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக்காணிக்கு கிழக்கு வடபாற் கெல்லை இந்நாயனார் திருநாமத்துக்கு தெற்கு நடுவு குழி ரூா ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௨ ய் கருமாணிக்கன் நாராயணபட்டன் பக்கல் கொண்ட ஆலத்தாங்குடி பாண்டி வாய் ஆற்றுக்கு வடக்கு நெல்லிக் கொல்லையில் கீழ்பாற் கெல்லை தக்களூர் அகர

12 ப்பற்றுக்கும் விநயகப்பிள்ளையார் திருவிருப்புக்கும் மேற்கு தென் பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை இந்நாயனார் திருநாமத்துக் காணிக்கு கிழக்கு வட்பாற்கெல்லை பட்டனப் பெருவழிக்கு தெற்கு நடுவு குழி ருய சீராமன் ஆதித்தபட்டன் பிடவாரி தந்த காவதகுடியில் பவுத்திர மாணிக்கவதிக்கு கிழக்கு மூவாயிரவன் வாய்க் காலுக்கு வடக்கு ௲ கூம சகூம் நிரவினி துண்டத்து வடக் கடைய திருவிடை யாட்டம் விட்டு தெற்கு ரூ கூ௨ இதில் இந்நாயனார்க்கு முன்னாள் நல்லூருடையா[ன்]

13 கொண்டு விட்ட திருநாமத்துக் காணி நிலம் விட்டு வடக்கு என்னுதான ரூ ரூா இதில் வடக்கடைய ரூ௨ ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யரு விசையாலையபுரத்து பிடவாரி புகுந்த பாணலூர் கிழவன் இராமாண்டானை மருதாண்டான் தந்த நீலனூர் பழநிலம்

14 அறுபது வரிசையாக . . . வீர . . . . . இந்தை நூறு காசுக்கு த . . . . க்கு நெல்லு . . . . . . . ந்தாரம் . . . . . ரும் இசைந்து விற்று நகரத்து . . . குபரிய . . . . . . . . . . . . . . . . . விக்கிரம சோழபுரத்து நகரத்தோம் இவர்கள் சொல் . . [செ]ட்ட போசன் ஸ்ரீகுமாரபட்டன் எழுத்து இப்ப டிக்கு வங்கிப்புறத்து செட்ட போசன் உக்ஷிணமூர்த்தி பட்டன் எ[ழு*]த்து . . . . . . . . . . [பி]ளை பாணி பட்டன் எழுத்து இப்படிக்கு வங்கிப் புரத்து . . . . . . . . . . . .

15 இவ்வூர் உஜ்ஜூஹன் ஸ்ரீ குடந்தை உடையான்

16 . . . . . . . . இந்த விலைப் பிரமாணங்கள் பண்டு

17 . . . . . . . . . . இந்நாட்டு ச் . . . . . . . .

18 . . . . . புகுந்த பின் மாணிக்கன் . . . .

19 செயதுங்கச் சதுவெதி மங்கலத்து . . . . .

20 . . . . . . படி கல்வெட்டிவித்துக் குடுத்தேன் . . . . .

---

1, 2, 3, 4, 5, 6, 7–புள்ளியிடப்பட்டுள்ள இவ்விடங்களில் நிலத்தின் அளவுகள் எண்ணல் குறிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 9-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 916-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 635 of 1902 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII No. 239 p. 131 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரிவர்மன் முதல் பராந்தகச் சோழன் | | |

இடம் : மிகிராருனேஸ்வரர் கோயில் சாந்தநாயகி அம்மன் சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத் தூணில் உள்ளது.

குறிப்புரை : கோப்பரகேசரிவர்மனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் திருமெய்ச்சூரிலுள்ள மூலஸ்தானமுடைய மஹாதேவருக்கு நித்தம் இரண்டு தொந்தா விளக்குகள் எரிப்பதற்கு வே(ம்)ட்க் கோவன் புகழன் முன்னூற்றுவன் என்பவன், இவ்வூர் சபையாரிடம் ஒன்பது மாவரை அரைக்காணி நிலம் வாங்கி கோயிலுக்கு அளித்த செய்தியும், அந்நிலத்திற்கு எல்லையும், கோயிலில் பணி புரியும் மூன்று குடும்பத்தினரும் இந்நொந்தா விளக்குகள் எரிக்க சம்மதித்த செய்தியும் கூறப்படுகின்றன. புகழிவேடையார் நொந்தா விளங்குக்காக முன்னர் நிலம் அளித்துள்ளார். எல்லைகள் கூறப்படும் பொழுது, அந்த நிலமும் எல்லைகளுள் ஒன்றுகக் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு

I

1 ஸ்வஸ்தி
2 ஸ்ரீ [||*] கொப்பர
3 கெஸரிபந்[மர்*]க்கு
4 யாண்டு கூ-ஆ
5 வது அம்ப[ர்]
6 நாட்டுத் தெவர்
7 தானம் திருமி
8 ய்ச்சூர் வெ
9 [ம்]ட்க் கொவன்
10 புகழன் மு
11 ன்னூற்று
12 வன் இவ்வூர்
13 ஸ்ரீ மூலஸ்தா
14 னமுடைய
15 ம[ா]ஹ[ா*]தெவ
16 ர்க்கு நொந்தா

(திருப்பவும்)

17 விளக்கு நிசதம் உ
18 ரியநெய் கொண்டு
19 விளக்கு இரண்
20 டுக்கு இவ்வூர்
21 ஸபையாரி
22 டைச் ஸ
23 பெய் விலே
24 கொண்டு இறை
25 இழிச்சின நி
26 லந் கீழூர்
27 [யி] அம்பரவர
28 சென் வடகரை செ
29 ம்பியன்
30 உஹாதெவி மய
31 க்கலான நி
32 லத்தில் வி
33 ளக்கு இர
34 ண்டுக்கு

II

35 குடுத்த நில
36 ம் . . .[1]
37 இந்நில
38 ம் ஒன்பது
39 மா வரை அ
40 ரைக்காணி
41 க்கு[ம்] எல்
42 லே கீழ் பா
43 ற் கெல்லே
44 [ய்] பாட[ந்] பங்
45 குக்கு மெ
46 ற்கு[ந்] தெ
47 ன் பாற்கெ
48 ல்லே அ
49 ம்பர் [வாய்]
50 க்கு வடக்கு
51 ம் மெல்

III

52 52 to 55 damaged
56 கெல்லேய்
57 புகுழிவெ
58 டயார் வைய்
59 ச்ச நொன்தா
60 விளக்குச் செ
61 ய்க்குத் தெ
62 ற்கும் இவ்
63 விசைத்த இ
64 ஞ்ஞான் கெ
65 ல்லேயிலு
66 ம் அகப்பட்ட
67 நிலம் . .
68 . .[2] இன்
69 நிலம் ஒன்
70 பது மாவ
71 ரை யரைக்
72 காணியுங்
73 கொண்டு சந்
74 திராதிச்சவ
75 ல் நிசதம்
76 இரண்டு
77 ஞெந்தா வி
78 ளக்கு எரி
79 ப்பொமா(ந்)
80 ஞெம் இ
81 வ்வூர் ஸ்ரீ
82 கொயிலுடை
83 ய மூன்று
84 குடியிலொ
85 ம் [ ] இது பன்ழ[ா*]ஹெ
86 ஷ்ர இரக்ஷெ
87 ய் [।*] அறமறவ
88 ற்க அறமல்
89 லது துணேயி
90 ல்லேயே [।।*]

---

1, 2. புள்ளியிட்டுள்ள இடங்களில் நில அளவுகள் எண்ணிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 2-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 873 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 636 of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII. No. 240 p. 132 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | ராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயில் சாந்தநாயகி அம்மன் சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத் தூணில் உள்ளது.

குறிப்புரை : ராஜகேசரிவர்மனின் இரண்டாம் ஆட்சியாண்டில் பிரமதேயமாகிய திருமெய்ச்சூர் மூலஸ்தானமுடைய மஹாதேவர் கோயில் திருவுத்ஸவம் வைகாசி உத்திரத்துக்கு வந்த சிவயோகிகளுக்கும், பன்மாஹேஸ்வரர்களுக்கும் ஏழு நாட்கள் வந்த அடியார்க்கும் உண்பதற்கு திருப்பாச்சூர் கிழவன் அழுதாள்வாந் என்பவன் மாணிக்குடியில் நிலம் வாங்கிக் குடுத்த செய்தியும் அந்நிலத்திற்கு எல்லைகளும் கூறப்பட்டுள்ளன. வைகாசி உத்திரம் என்ற உத்ஸவம் ஏழு நாட்கள் நடந்தது என்றும் அதற்காக வெவ்வேறு ஊர்களிலிருந்து சிவயோகிகள், பன்மாஹேஸ்வரர்கள், அடியார்கள் வந்து செல்வார்கள் என்றும், அவர்கள் உண்பதற்கு கோவிலிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் தெரிய வருகிறது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 கொராஜ கெஸரி
3 வெந்மற்கு யாண்டு
4 உ-ஆவது அம்[ப]
5 ர் நாட்டு ப்ரஹ்மதெய
6 ம் திருமிகைச்சூர்
7 ஸ்ரீ மூலஸ்தானமு
8 [டை]ய மஹாதெவ

(திருப்பவும்)

9 ர் திருவுத்ஸவம்
10 வைகாசி உத்திர
11 த்துக்கு வஞ ஶிவ
12 யொமிகளுக்கும்
13 பன்மாஹெஶ்வ
14 ர[ர்*]க்கும் எழுநாளும்
15 வஞ[அ]டியார்க்கு[ம்*] உ[ண்]
16 ண இ[ந்]நாட்டுஸமூஹெ
17 ஒயம் ஆலத்தூ . . . .
18 [ரு] க்கு ஷிருப்பாச்சூர் கி[ழ]
19 [வ]ன் அமுதாள் [வாநு]
20 ம் இந்நாட்டு ஸமூஹ [தெ]
21 ய மாணிகு [டிஊளெ . . .]
22 [விலை] கொண்டு [டை]
23 ய எத்த[ச்] செய் . .
24 [ண்டு மெ]லை ஒ[ரு]
25 மாவுக்குக் கீழ்பாற்
26 க்கொ[ல்லை] . . . த[ளி] வ[ா]
27 ய்க்காலுக்கு [மெற்]க்
28 [கு]ம் தென்பாற் [கெ]
29 [ல்லை]காற்ற[ங்] கு[ ]
30 [நில]த்துக்கு வட[க்கு]
31 ம் மெல்பாற்[க்கெ]
32 [ல்லை கீழ்பிலாற்று]
33 நிலத்துக்குக் கி[ழக்]
34 கும் வட[பா]ற்க் கெ[ல்]
35 லை இம்மாணி கு[டி]
36 ப்[பு]றத்[து]டவைக்
37 குத் தெற்கும் கிை[ழ]
38 எத்தச் செ[ய்*]க்கு கீழ்பா
39 ற்க் கெல்லை தளிவா
40 ய்க் காலுக்கு மெற்க்கு
41 ம் தென் பாற்க் கெல்
42 லை மாடலன்[ெ]க[ா]
43 வஞ்ச[ன்*] நிலத்துக்கு
44 ம்ஊஹாதெவர் நிலத்
45 துக்கும் கவுசியன்[ன்]
46 நாரா[ய*][ண]ன் சாத்த[ன்*] [னி]

47 லத்துக்கும் கவிசி[ய]

48 ன் கண்ணங்குடி [னி]

49 [லத்]துக்கும் வடக்கும்

50 மெல் பாறக் கெல்லை

51 தளி வாய்க்காலுக்கு கி

52 [ழ]க்கும் வடபாறக் கெ[ல்]

53 லை தளிவா[ய்*]க் காலு[க்கு]

54 த் தெற்கும் இவ்வி[சை]

55 த்த இன்[ஞன் கெல்லை][1]

---

1. The continuation of the Inscription on the other side of the Pillar is built in.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 911-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 637 of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII No. 241 p. 132 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் முதல் பராந்தகச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயில் சாந்தநாயகி அம்மன் சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தில் உள்ள தூணில் உள்ளது.

குறிப்புரை : கோப்பரகேசரிவர்மனின் நான்காம் ஆட்சியாண்டில் ஆலத்தூரிலுள்ள ஆளுங்கனத்தானுகிய அத்திகாடு கருப்பிடவூர் ஸ்வாமி என்பவனிடமிருந்து அதே ஊரில் வாழும் வெள்ளாளந் சிங்கந் என்பவன், இக்கோயில் திருநந்தாவனத்திற்கு நீர் இறைப்பார்க்கும், திருமெழுக்கு இடுவார்க்கும் நிலம் வாங்கிய செய்தியும், ஆலத்தூர் சபையாரே அந்நிலத்திற்கு விலை நிர்ணயம் செய்து அவ்வாறு நிர்ணயம் செய்த விலையாக பொன் பெற்றுக் கொண்டு வரி நீக்கிக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றன. நிலத்திற்கு எல்லைகளாக ஆற்று வாய்க்கால், உட்சிறு வாய்க்கால், ஆகிய வாய்க்கால்களும் தேவஸ்வாமி கிரமவித்தன் நிலம், திருவேங்கடகிரமவித்தன் நிலம், குணவந்தாழி நிலம் ஆகிய மூன்று பேர்களுடைய நிலமும் கூறப்படுகின்றன.

கல்வெட்டு :

North face

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*]

West face

2 கொப்பரகெ

3 ஸரி [வ(ர்)ம(ர்)க்]

4 கியா

5 ண்டு ளுந்

6 க[ா]வது

7 அம்பர்

8 நாட்டு ஸ்ரு

9 ஹதெய

10 ம் ஆலத்

11 தூர் ஸ

12 ஹெயொ

13 ம் இவ்வூ

14 ர் யா[ளு] ங்

15 கணத்தா[ன்]

16 அத்தி க[ா]டு

17 கருப்பிடவூ

18 ர்ஸ்வாமி பக்

(திருப்பவும்)

19 கல் இவ்வூ
20 ர் இருன் து வ[ா]
21 [மு]ம் வெள்ள[ா]
22 [ள]ந் [சி]ங்க[ந்]
23 [பூ] விலே கொ
24 ண்ட நிலம்
25 ஆ[ற்]றுவா
26 . [க்] கால் நி[ந்]று
27 ம் மெக்கு
28 நொக்கிந
29 உள்சிறுவ[ா]
30 ய்க்கா [லிந்]

North face

31 [நி]லந்க
32 ரெரகூா .[1]
33 கும் மெல்
34 லே கிழ்பா
35 ர் [க்*] கெல்லே
36 உறுப்பி
37 ட்டுர் தெவ
38 ஸூரி கூ
39 ம[வி] [த்*] தந்
40 நில[த்*]துக்கு
41 மெக்கு தெ
42 ந் பார்[க் கெல்லே *] புள்ளூ
43 ர் திருவெ[ங்]
44 கடகூ௨ [வி]
45 [த்*] தன் நிலத்து
46 [க்*]கு வட க்கு[ம்]
47 [ெ] மல்பார்
48 க் கெல்லே
49 குணவந்தா
50 மி நிலத்து
51 க்கு கிழ[க்]
52 கும் வடபா
53 ர் [க்*] கெல்லே
54 உள்ச்சிறு
55 வாக்கா(ல்)
56 லுக்கு தெ[ர்*] க்
57 கும் யிநா
58 ங் கெல்லே
59 யி(ல்)லும்
60 நடுவுப[ட்*]ட

East face

61 நிலம் ந
62 . [2] அ [வா]
63 சந்து றெ
64 தெவர்க்கு
65 திருநஞவா[ந]
66 ம் யிறைப்
67 பார்க்கும் தி
68 ரு மெழுக்கு
69 யிடுவா[ர்*]க்கு[ம்*]
70 செயிது கு
71 டு[த்*]த மெ
72 யில் ஸ
73 ஹெயொம்
74 யி நில[த்*]து
75 க்கு [எ] [ம்*] மில்
76 யிசெஞ்ச
77 விலேப்பொ
78 [ரு]ள் யிவந்
79 நிடெ எம்
80 மிலி[டெ]ச
81 [ஞ்*]ச பொன்
82 கொண்
83 டு சஷி ர[ா] (தி)
84 திச்சவல்
85 யிறையிழி
86 ச்சி கு[டு]த்
87 தொம் [ஆ]
88 லத்து ந ஸ
89 ஹெயொ
90 ம் [|*] ப

South face

91 ஹாயெ
92 ஸ்ரூ [ர*] ரடெ
93 க்ஷ || உ

---

1, 2. புள்ளியிட்டுள்ள இவ்விடங்களிலும் நில அளவுகள் எண்ணல் குறிப்பிடப்பட்டிருக் கின்றன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 875 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 638 of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | S.I.I. vol. VIII. No. 242 p. 133 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | ராஜகேசரிவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயில் சாந்தநாயகி அம்மன் சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தின் மூன்ருவது தூணில் உள்ளது.

குறிப்புரை : ராஜகேசரிவர்மனின் நான்காம் ஆட்சியாண்டில் திருமெய்ச்சூருடைய மஹாதேவருக்கு இவ்வூரைச் சேர்ந்த வியாபாரியாகிய தாழிமாணிக்கன் என்பவன் நொந்தாவிளக்கிற்காக தென்குடியில் நாலுமா நிலம் குடுத்த செய்தியும், தினம் உழக்கு நெய் கொண்டு விளக்கு எரிப்பதாக இக்கோயிலைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர்களும் சம்மதித்த செய்தியும் கூறப்பட்டுள்ளன.

கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*]
2 கொராஜகெ
3 சரிபந்மற்கு யா
4 ண்டு ச—ஆவது
5 திருமிய்ச்சூரு
6 டைய உஹ[ா*] தெ
7 வர்க்கு இவூர் [வி]
8 யாபாரி தாழி மா
9 ணிக்கன் நொன்
10 தா விளக்கிநுக்
11 கு வைத்த நில

(திருப்பவும்)

12 ம் தெந்குடி நா[ன்]
13 மா[யி] நிலம் கொண்
14 டு நாள்வா யுழக்கு
15 நெய் கொ
16 ண்டு சந்
17 திராதி
18 த்தவ
19 ல் நொ
20 ந்தாவி
21 ளக்கு எ
22 ரிப் பெ[ர]
23 [ம்*] ஆநொ
24 ம் இத்
25 திருக்
26 [கொ]காயி
27 லுடை[ய*]
28 மூன்[று]
29 குடி இ
30 லொமு
31 ம் [ *] இ
32 து பன்
33 மாயெ
34 சுவர
35 ரக்ஷை [||*]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 21-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1289-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 639 of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII No. 243 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | மாறவர்மன் குலசேகர பாண்டியன் | | |

இடம் : மிகிராருனேஸ்வரர் கோயில் கருவறையின் முன்புறமுள்ள மண்டபச் சுவரில் கிழக்கு, வடக்குப் புறங்களில் உள்ளது.

குறிப்புரை : மாறவர்மன் குலசேகரபாண்டியனின் இருபத்தொன்றுவது ஆட்சியாண்டில் அம்பர் நாட்டுக் கொற்ற வாசலில், தில்லை நாயகன் தொண்டைமான் உடையான் புவனேக வீரன் அகளங்க நாடாழ்வான் என்பவன், அதே அம்பர் நாட்டைச் சேர்ந்த எண்ணுகுடி என்ற ஊரிலுள்ள நெடுவாயிலுடையார் தேவர் கண்டப் பெருமாள் என்பவனிடமிருந்து மனைக்குழியும், விளைநிலமும் வாங்கிய செய்தியும் சீவல்லபபாண்டியனின் இருபத்தைஞ்தாவது ஆட்சியாண்டில் மனைக்குழி படுகைக்குழி, விளைநிலம் ஆகியவை வாங்கிய செய்தியும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு புவனேகவீரன் அகளங்கநாடாழ்வான் என்பவனுக்கு தேவர்கண்டப் பெருமாள் என்பவன் மொத்த விளைநிலம் ஒன்றே அறுமாவும், மனைகுழி நாற்பதும், படுகைகுழி முன்னூறும் விற்றுக் கொடுத்து, அகளங்கத்தட்டான் திருவாய்க் குலத்துப்பிள்ளை ஆகியோர் காட்சியாக நூற்றுமுப்பத்து நாலு காசுகள் பெற்றுக் கொண்ட செய்தியும் கூறப்படுகிறது. புவனேகவீரன் காசு, ஆகவராமன் காசு ஆகிய பெயர்களில் காசுகள் வழக்கத்திலிருந்தன எனத்தெரிய வருகிறது. இக்கல்வெட்டிலிருந்து சந்திரசேகரமயக்கல் முக்காற்கண்டம், அத்திச்செய், மூன்று நாட்டான் படுகை ஆகிய நிலங்களின் பெயர்களும் முக்கால் வாய்க்கால், அம்மையப்பன் வாய்க்கால் முள்ளிக்கால், கூற்றங்குடி வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களின் பெயர்களும், வீரராஜேந்திர சோழப் பேராறு பாண்டிகுலப்பதிப்பேராறு ஆகிய ஆறுகளின் பெயர்களும் தெரிய வருகின்றன.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ [ ||* ] கொமாறபன்மர் திருபுவனச்சக்கரவர்த்திக[ள்] ஸ்ரீ குலசெகர தெவர்க்கு யாண்டு உயக இருபத்தொன்றுவது மிதுநநாயற்று பூறுவபக்ஷத்து துவாதசியும் திங்கட்கிழமையும்

(திருப்பவும்)

பெற்ற சொதிஞள் குலொத்துங்க சொழவளநாட்டுக் கிழ்கூற்று அம்[பர்]நாட்டுக் கொற்ற வாசலில் தில்லைநாயகன் தொண்டை மான் உடையான் புவனெகவீர அகளங்க நாடாழ்வார் உய்ய கொண்டார் வளநாட்டுக் கிழ்கூற்று அம்பர்நாட்டு எண்ணுகுடி யில் நெடுவாயிலுடையார் தெவர் க

2 ண்டப் பெருமாள் பக்கல் கொண்டுடையதான திருவெகம்ப மயக் கல் என்று பெர்கூவப்பட நிலத்துக்கு மெல்பார்க்கெல்லை உட் சிறுவாய்க்காலுக்கு கிழக்கும் வடபார்க்கெல்லை விதானத்துக்கும் ஆற்காடு கிழார் நிலத்துக்கு[ம்*] தெற்கும் கிழ்பாற்கெல்லை வழிவரம்புக்கு[ம்*] [பள்]ளத்துக்கும் மெற்கும் தென்பாற் கெல்லை நாயநார் வீற்றிருந்த பெருமாள் திருவிளையாட் டத்துக்கு வடக்கும் இன்ஞன் கெல்லைஉள் நடுவுபட நிலம் வ இந்நிலம் காலும் சந்திரசெகரமயக்கலென்று பெர் கூவப் பட்ட நிலத்துக்கு மெல்பாற்கெல்லை முதலி

3 யார் திருநாமத்துக் காணிக்கும் ஆற்காடு கிழார் நிலத்துக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை மணக்குன்றுக்குத் தெற்கும் கிழ்பாற் கெல்லை ஆற்காடு கிழார் நிலத்துக்கு மெற்கும் தென்பாற்கெல்லை முக்கா[ல்]வாய்க்காலுக்கு வடக்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட் பட்ட நிலம் கூக இந்நிலம் நான்மா வரையும் முக்காற் கண்ட மென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு மெல்பாற்கெல்லை ஆற்காடு கிழார் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை முக்கா[ல்வா]

4 ய்க்காலுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை வழிவரம்புக்கு மெற்கும் தென்பாற்கெல்லை விரராசெந்திர [சொழப்பெ]பராற்றுக்கு வடக்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் கூ இந்நிலம் நாலுமாவும் கள்ளிச் செய்யென்று பெர் கூவப்பட்ட நிலத் துக்கு மெல்பாற்கெல்லை வழிவரம்புக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை திருமிகைச்சூருடையார் தெவதானத்துக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை இந்நாயிஞர் தெவதானத்துக்கு மெற்கும் தென்பாற்கெல்லை நெடுவாயலுடையார் நிலத்து[க்கு வ]ட

5 க்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் உஉ இந்நிலம் இரண்டுமாக் காணியும் ஆக நிலம் ஞ ரூ இந்[நி]லம் முக்காலெ முக்காணியும் நத்த[த்*]திற் கொண்ட விரராசெந்திரசொழப் பெராற்றுக்குத் தெற்குப் பெருஞூர்கிழவர்மனை யென்று பேர் கூவப்பட்ட மனைக்கு மெல்பாற்கெல்லை நாயிஞர் திருமிகைச் சூருடையார் தெவதானத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை யும் கிழ்பாற்கெல்லையும் தென்பாற்கெல்லையும் விற்கின்றூர்—மனைக்குத் தெற்கும் மெற்கும் வடக்கும் இந்நான்கெல்லைக்குள் நடுவுட்பட்டமனை குழி இ

6 க்குழி நாற்பதும் ஆக மனை குழி விளை நிலம் ஞ ரூ இம்மனை குழி நாற்பதும் விளை நில[ம்*]முக்காலெ முக்காணியு[ம்] சின்னமும் இவர் பக்கல் கொண்ட கொற்சடைபன்மரான திரிபுவனச்ச[க்]கரவத்திகள் ஸ்ரீ [சி]வல்ல[வ*] தெவற்கு யாண்டு

உ௰ரு-வது இருபத்தஞ்சாவது வரஷீக நாயற்று அபரபக்ஷத்து வெளமெணெ-ஏயும் புதன் கிழமையும் பெற்ற ரொசணி நாள் துண்டம் அத்திச்செய்யென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு தென்பாற்கெல்லை அம்மை அப்பன் வாய்க்காலுக்கு வடக்கு மெல்பாற்கெல்லை முதலியார் திருநாமத்துக் காணிக்குக் கிழக்கு வடபாற்கெ

7 ல்லை பாண்டிகுலப்பதிப்பெராற்றுக்குத் தெற்கும் கிழ்பாற்கெல்லை முதலியார் திருநாமத்துக்காணிக்கு மெற்கும் இந்நான்கெல்லை யுள் நடுவுட்பட்ட நிலம் ப௨ இந்நிலம் காலெ காணியும் விரராசெந்திர சொழப் பேராற்றுக்குத் தெற்கு முள்ளிக்கா லென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு கிழ்பாற்கெல்லையும் வட பாற்கெல்லையும் கொள்கின்ற[ன்*] னிலத்துக்கு மெற்கும் தெற்கும் மெல்பாற்கெல்லையும் தென்பாற்கெல்லையும் கூற்றங் குடிவாய்க்காலுக்கு கிழக்கும் வடக்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் ப இந்நிலம் க

8 ாலும் முன்று நாட்டான் படுகை யென்று பெர் கூவப்பட்ட நிலத் துக்குக் கிழ்பாற்கெல்லை நெடுவாயலுடையான் திருவிடைமரு தூருடையாரும் திருப்பாம்புரமுடையார் தெவதானப் படு கைக்கும் மெற்கும் தென்பாற்கெல்லை [விரரா*]செந்திரசொழப் பேராற்றுக்கு வடக்கும் மெல்பாற்கெல்லை இறைவான் செரி எல்லைக்குலைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை பாண்டிகுலபதிப் பெராற்றுக்குத் தெற்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட படுகை கு² ஙா இக்குழி முன்னூறும் ஆக விளைநிலம் அரையே காணியும் படுகை குழி முன்னூறும் ஆக விளை நிலம் கசூப மனை குழி ச௰ படுகை

9 கு² ஙா இந்த விளைநிலம் ஒன்றெ ஆறுமாவு[ம்*] மனைகுழி நாற் பதும் படுகை குழி முன்னூரும் விற்றுக்குடுத்துக் கொள்வ தான எம்மிலிசை[ச]ந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினுல் புவனெகவிரன் ப அ௰ங-ம் ஆகவராமன் ப ரு௰க-ம் ஆக ப ௱ங௰ச இப்பணம் நூற்று முப்பத்து நாலும் அகளங்கத்தட் டானும் திருவாய்க்குலத்துப் பிள்ளையும் காட்சியாகப் பொரு ளறக் கைக்கொண்டு விலக்குற விற்று விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தென் உடையான் புவனெகவிர வகளங்கநாடாழ் வாற்கு நெடுவாயலுடையான் தெவர் கண்டனென் ||
இப்படிக்கு இவை நெடுவாயலுடையான்

10 தெவர்கண்டப் பெருமாள் எழுத்து || இப்படிக்கு இவை நெடு வாயலுடையான் திருவிடைமருதூருடையான் எழுத்து || இப்படி அறிவேன் புறக்குடையானென் || இப்படி அறிவென் புதுச்செரிக் குடையான் அம்பலப்பெருமாளென் || இப்படி அறிவென் திருநல்லூருடையாரென் || இப்படி அறிவென் திருமிகைச்சூரு டையார் கொயிலில் காணியுடைய சிவப்பிராமணரிற் செல்லப் பிள்ளையான் தற்குறியானமைக்கு உடையார் எழுத்து உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1290-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 639-A of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII. No. 244, p. 135 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | முதல்மாறவர்மன் குலசேகரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயில் கருவறையின் முன்புறமுள்ள மண்டபச் சுவரில் கிழக்கு வடக்குப் புறங்களில் உள்ளது.

குறிப்புரை : குலசேகர பாண்டியனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், சிற்குற் காட்டுக்கிழான் அரையன் மன்றுளாடும் பெருமாள் குலசேகரவாணாதராயன் என்பவன் அம்பர் நாட்டு கொற்ற வாசலில் தில்லை நாயகன் தொண்டைமான் உடையான் புவனேகவீர அகளங்க நாடாழ்வான் என்பவனுக்கு, அதே அம்பர் நாட்டு எண்ணுகுடி என்ற ஊரிலுள்ள தன்னுடைய மனைக் குழிகளை விற்றுக் குடுத்த செய்தி கூறப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டு முற்றுப் பெறாமல் நின்று விட்டது. அண்டக்குடையான் மனை, நெடுவாயலுடையான்மனை, உய்ய கொண்டார் மனையிருப்பு, காலிங்கராயன்மனை, குன்றப்பெருமாள்மனை. பாம்பூர் நாட்டுக்கோன் மனையிருப்பு, காளிக்கோன் மனையிருப்பு. ஏடெதிரிட்டான் மனை யிருப்பு ஆகிய மனையிருப்புகளின் பெயர்கள் எல்லைகளாக கூறப்பட்டிருக்கின்றன. இதில் நெடுவாயலுடையான்மனை என்று இரு இடங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த நெடுவாயலுடையான் என்பவன் கல்வெட்டு எண் ஐந்தில் நிலம், மனை, படுகை விற்றுக் கொடுத்தவனாக இருக்கலாம். இக்கல்வெட்டில் நிலம் கொடுத்த மன்றுளாடும் பெருமாள் வாணாதராயன் என்பவனின் முன்னர் விற்கப்பட்ட நிலங்களும் எல்லைகளாக கூறப்படுவதால், தன் நிலத்தையும் விற்றிருக்கின்றான் என ஊகித்து உணரலாம். புவனேகவீர அகளங்க நாடாழ்வான் என்பவனே எண்ணுகுடியைச் சேர்ந்த இருவரிடம் நிலம், மனை விலைக்கு வாங்கியிருக்கிறான் எனத் தெரிய வருகிறது. இந்த புவனேகவீரன் தில்லை நாயகன் எனக் கூறப்படுவதால், பாண்டிய மன்னனுக்கு அடங்கிய சிற்றரசனாக வாழ்ந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ [||*] கொமாற பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசெகர தெவற்கு யாண்டு உ௰உ-வது இருபத்தி

(திருப்பவும்)

ரண்டாவது ஸிஂஹ நாயற்று அவர வக்ஷத்து த்ரயோதஶியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் பாண்டிகுலா[ச]னி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்துச் சிற்றுற்காட்டு கிழான் அரையந் மன்றுளாடும் பெருமாள் குலசேகர வாணதராயனென் குலொத்துங்க சொழ வளநாட்டு கீழ்கூற்று அம்பர் நாட்டுக் கொற்ற வாசலில் தில்லை நாயகன் தொண்டைமான் உடையான் புவனெகவீரவகளங்கநாடாழ்வாற்கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்

2 த பரிசாவது [|*] உய்யக்கொண்டார் வளநாட்டு கீழ்கூற்று அம்பர் நாட்டு எண்ணுகுடியில் என்காணியாய் விற்ற நத்தத்தில் அண்டக்குடையான் மனை இருப்பென்று பெர் கூவப்பட்ட மனைக்கு மெல்பாற்கெல்லை நெடுவாயலுடையான் மனைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை என்பக்கல் கொள்கிறர் கொண்ட மண்ணிட்டுக்கும் விளைநிலத்துக்கும் தெற்கும் கீழ் பாற்கெல்லை நாயினர் திருமிகைச்சூருடையார் தெவதான மனைக்கு மெற்கும் தென்பாற்கெல்லை தெருவுக்கு வடக்கும் இந்நான் கெல்லையுள் நடுவுட்பட்ட மிகுதிக் குறைவுட்பட மனை கு ா இக்குழி நூறும் உய்யக்கொண்டார் ம

3 னையிருப்பென்று பேர் கூவப்பட்ட மனைக்கு மேல் பாற்கெல்லை நெடுவாயலுடையார் மனைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மேற்படியார் மண்ணிட்டுக்கும் விளைநிலத்துக்கும் தெற்கும் கீழ்பாற்கெல்லை நாயினர் திருமிகைச்சூருடையார் தேவதான மண்ணிட்டுக்கும் விளைநிலத்துக்கு[ம்*] மேற்கும் தென்பாற் கெல்லை தெருவுக்கு வடக்கும் இந்நான்கெல்லையுள் நடு[வு]ட்பட்ட மிகுதிக்குறைவுட்பட மனை கு ா இக்குழி நூறும் தெற்கிற் சிறகில் திருமஞ்சன மழகியான் மனையிருப்பென்று பெர் கூவப்பட்ட மனைக்கு மெல்பாற்கெல்லை உடையார் திருமிகைச் சூரு[டையார்]

4 தெவதானமனைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை தெருவுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை விடங்கொண்டார் மனைக்கு மெற்கும் தென்பாற்கெல்லை உடையார் திருமிகைச்சூருடையார் திருநாமத் துக்காணி விளைநிலத்துக்கு வடக்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட [மி]குதிக்குறைவுட்பட மனை கு ாருயு-ல் மேற் கடையத் திரு[முலஸ்ரீ]தானமுடையார் தெவதான மனை கு யஉ [நீக்கிகு] [ள] கயஅ இக்குழி நூற்றுமுப்பத்தெட்டும் அம்பர் நாட்டுக் கொனர் மனையென்று பெர் கூவப்பட்ட மனைக்கு

5 மெல்பாற்கெல்லை கொள்கின்றர் என் பக்கல்(க்) கொண்ட விளை நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை தெருவுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை நெடுவாயலுடையார் மனைக்கு மெற்கும் தென் பாற்கெல்லை கொள்கின்றர் என்பக்கல் விலை கொண்ட விளை நிலத்துக்கு வடக்கும் இன்னுன்கெல்லையுள் நடுவுட்பட்ட மிகு திக்குறைவுட்பட மனை கு கய இக்குழி முப்பதும் காலி[ங்]க

ராயர் மனையென்று பெர் கூவப்பட்ட மனைக்கு மெல்பாற் கெல்லை முதலியார் திருநாமத்துக் காணி மனைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை தெருவுக்குத் தெற்கும் கீழ்

6 பாற்கெல்லை கொள்கின்றார் என்பக்கல் விலைக்கொண்ட விளை நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை இந்நிலத்துக்கு [வட]க்கும் இந்நான் கெல்லையுள் நடுவுட்பட்ட மிகுதிக்குறைவுட்பட மனை குீ ௩௰ இக்குழி முப்பதும் குன்றப்பெருமாள் மனையிருப் பென்று பெர்கூவப்பட்ட மனைக்கு மெல்பாற்கெ[ல்லை கொள்]கின்றார் என்பக்கல் விலைக்கொண்ட விளைநிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை தெருவுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை நாயினார் திருமெய்ஞ்ஞானமுடையார் தெவதான மனைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை கொள்கின்றார் 'என்பக்கல் [வி*]லைகொண்ட விளைநிலத்துக்கு வடக்கும் இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட மிகுதிக் குறைவுட்பட மனை குீ ௨௰ இக்

7 குழி இருபதும் பாம்பு[ர்*] நாட்டுக்கொன் மலையிருப்பென்று பெர் கூவப்பட்ட மனைக்கு மெ[ல்பாற்கெ[1]]ல்லை முதலியார் திருநாமத் துக் காணி மனைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இந்நாயினார் [திருநாமத்து]க் காணி விளைநிலத்துக்கும் கொள்கின்றார் என் பக்கல் விலைகொண்ட விளைநிலத்து[க்கும் தெற்[1]]கும் கீழ்பாற் கெல்லை இந்நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை தெருவுக்கு [வடக்கும்[1]] இன்னான்கெல்லையுள் நடுவுட்பட்ட மிகுதிக் குறை வுட்பட மனைக் குீ [௱ இ]க்குழி நூ . . . . .[2] காளிக்கோன் மனையிருப்பென்று பெர் கூவப்பட்ட மனைக்கு மேல்பாற்கெ[ . . . .[2]]யார் திருநாமத்துக் காணி மனைக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை கொள்கின்றார் என்

8 பக்கல் விலைகொண்ட விளைநிலத்துக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை முதலியார் திரு[நாமத்துக்[3]] காணி விளைநிலத்துக்கு மெற்கும் தென்பாற்கெல்லை குளத்துக்கு வடக்கும் இன்னான் கெ[ல்லையுள் ந[3]]டுவுட்பட்ட மிகுதிக் குறைவுட்பட மனை குீ ௱ இக்குழி நூறும் ஏடெதிரிட்டான் மனையெ[ன்று பெர் கூ[3]]வப்பட்ட மனைக்கு மேல்பாற்கெல்லை நாயினார் திருமெஞ்ஞானமுடையார் குடி[நிங்கா தெ]வதானம் விளைநிலத்துக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை கொள்கின்றார் என் பக்[கல் விலைெ[3]]காண்ட விளைநில துக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை முதலியார் திருநாம[த்துக் காணி[3]] மனைக்கு மே[ற்]கும் தென்பாற்கெல்லை குளத்துக்கு வடக்கும் இன்னான் கெ[4] . . . . .

---

1. The space for this expression is left unengraved on the stone.
2. Space for about five letters is left blank.
3. The space for this expression is left blank on the stone.
4. The Inscription is incomplete.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு | கி.பி. 1261-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 640 of 1902 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII No. 245, p. 136 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் சுந்தர பாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயிலில் உள்கோபுரத்தில் இடப்புற நுழை வாயிலில் உள்ளது.

குறிப்புரை : சுந்தரபாண்டியனின் பத்தாவது ஆட்சியாண்டில் திருமிகைச்சூருடைய நாயனார் கோயில் திருக்காமக் கோட்டமுடைய சிவகாமசுந்தரி நாச்சியாருக்கு சாத்துபடி, பரிவட்டம், விஞ்சனம் ஆகியவற்றுக்கு இறையிலியாக, விரையாவிடங்க நல்லூரிலும் பொன்மேய்ந்த பெருமாள் நல்லூரிலும் பல பட்டடை, தறிஇறை. தட்டார் பாட்டம், செக்கடை, வேட்டைக்காரர்கடை, குளவடை, மீன்பாட்டம், செக்காயம், வண்ணார் கற்காசு, உப்புவழிச்சாரிகை உள்ளிட்ட வரிகளை மார்கழி மாதம் முதல் இவ்வூர் சபையாரும், நாட்டாரும், உடையார் காலிங்கராயரும், ஆதித்ததேவரும் அளித்தனர் என்று இக்கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ [||*] கொற்சடைபன்மர் திரிபுவநச்ச[க்*]கரவத்திகள்
2 ஸ்ரீ சுந்தரபாண்டிய தெவர்க்கு யாண்டு பத்தாவது
3 மார்கழி மாதத்து நாள் உய்யக்கொண்டார் வளநா[ட்*]டு திரு
4 மிகைச்சூர் உடையார் திருமிகைச்சூருடைய நாயனார் திரு
5 க்காமகொட்டமுடைய சிவகாமசுந்தரி நாச்சியார்
6 க்கு உடையார் காலிங்கராய(ர)ரும் கடைக்கூட்டு பிள்
7 ளை ஆதித்ததேவரும் ஸபையாரும் நாட்டாரும் சாத்துப்படி பரிவட்
8 டம் படி விஞ்சனத்துக்கும் முதல் அடங்க இறையிலி ஆகவிட்ட

(திருப்பவும்)

9 திருநாமத்துக்காணி விரையாவிடங்க நல்லூரிலும் பொன்மெந்த

10 பெருமாள் நல்லூரிலும் ௰-ஆவது காத்திகை மாதவரை நாட்டில்

11 வகுப்பில் கூட்டிக் கிடந்த ஆயமுதலும் மார்கழி மாத மு[த*]ல் எற்றி

12 க் கொள்ளும் செட்டிகள் பலபட்டடையும் தறிஇறை தட்

13 டார் பாட்டம் செனைக்கடை வெட்டைக்காறர் கடையு

14 ம் குளவடை ஒழுக்கு நீர் [மின்] பாட்டம் செக்காயம் வண்ணார் கற்கா

15 சு பலக[ணி]மாலைகளும் உப்பு வழிச்சாரிகை உள்ளிட்ட அனை

16 த்து ஆயவற்க[ங்க*]ளும் குடிஎற்றிக் கொண்டு இந்த ஆயவற்க[ங்க*]ளாலுள்

17 ள முதல்களும் இந்த நாச்சியா[ர்*]க்கு சாத்துப்படி திருப்பரிவட்டம் ப

18 டி விஞ்சனத்துக்கும் விட்டது இப்படிக்கு செம்பிலும் கல்லிலும் வெ

19 ட்டிக் கொள்க இப்படிக்கு சந்திரர் (ஆ)தித்த வரையும் இறையிலி ஆக

20 கொள்க[।*]இப்படிக்கு இவை குலசெகரகாலிங்கராயர் எழுத்து[।*] இப்படிக்கு

21 இவை ஆதித்த தெவர் எழுத்து இவை மாதெவபட்டர் எழுத்து [।*] இப்படிக்கு

22 இவை புதுச்செரி உடையார் எழுத்து[।*] இப்படிக்கு இவை செ[சாழி]யதரையர்

23 எழுத்து[।*]இப்படிக்கு இவை திருவிடைமருதுடையான் பட்டர் எழுத்து[।*]இப்படி

24 க்கு இவை மாம்பாக்கிழார் எழுத்து [।*] இப்படிக்கு இவை துறையூருடையார் எழுத்து[।*]

25 இப்படிக்கு இவை உதையதிவாகரபட்டர் எழுத்து [॥*]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 28-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1160 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 641 of 1902 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. VIII. No. 246 p. 136 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | மாறவர்மன் சீவல்லப பாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |

இடம் : மிகிராருணேஸ்வரர் கோயிலில் இரண்டாம் பிரகாரத்தில் உள்ள தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. ஆரம்பம் மட்டுமே உள்ளது.

கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறு பன்மர் திருபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீசிவல்ல [ப*] தெவர்க்கு யாண்டு உ௰அஉ இருபத்தெட்டாவது அ[ற்*] பிசி மாத[த்*]துளள்

2 உய்யகொண் * . . . . .

* The Inscription is left unfinished.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 910 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 283 of 1950 / 51 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| மன்னன் : | கோப்பரகேசரிவர்மன் முதற்பராந்தகச் சோழன் | | |

இடம் : மேகநாதசாமி கோயில் அம்மன் சன்னதித் தூணில் உள்ளது.

குறிப்புரை : கோப்பரகேசரிவர்மனின் மூன்றும் ஆட்சியாண்டில் திருமெய்ச்சூரைச் சேர்ந்த வேட்க்கோவன் புகழன் முன்னூற்றுவன் என்பவன் இக்கோயிலுக்கு நொந்தா விளக்கு எரிப்பதற்குத் தொண்ணூறு ஆடுகள் கொடுத்த செய்தி தெரிய வருகிறது. இவன், நொந்தா விளக்கிற்காக நிலம் கொடுத்த செய்தி இவ்வூர் கல்வெட்டு எண் 1–இலும் கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்
2 பரகேசரி பந்மர்
3 கு யாண்டு ௩ ஆ
4 வது அம்பர் நாட்
5 டுத் தேவதான
6 ம் திருமெச்சூர்
7 வேட்க் கோவன்
8 புகழன் முன்
9 னூற்றுவன் ஆ
10 ள்வார்க்கு நொ
11 ந்தா விளக்கி
12 னுக்கு குடுத்
13 த ஆடு தொண்
14 ணூறு தொண்
15 ணூற்று . . . .
16 . . . . இ
17 து ப
18 ந்மாஹே
19 ஸ்வர
20 ர் ர
21 க்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 7–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 914–ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 282 of 1950 / 51 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | பரகேசரிவர்மன் முதற்பராந்தக சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் ; மேகநாதசாமி கோயில் அம்மன் சன்னதியில் உள்ளது.

குறிப்புரை : முதற்பராந்தக சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் திருமெய்ச்சூருடைய மகாதேவருக்கு, யாழகன் என்பவன் பயிர் செய்யத் தகுதியில்லாது காடாய்க் கிடந்த நிலத்தை வெட்டிச் சீர்திருத்திப் பயிர் செய்யத் தகுதி வாய்ந்த நிலமாகத் திருத்தி இரண்டு நொந்தா விளக்கு எரிப்பதற்காக அந்நிலத்தை தேவதானமாக அளித்த செய்தி கூறப்படுகிறது. அந்நிலத்தை யாழகன் தன் தாயார், தமக்கையார் ஆகியோர் பெயரில் (சாத்தி) கொடுத்ததாகத் தெரியவருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 [கோப்ப]
3 ரகேசரி பந்ம[ர்]
4 க்கு யாண்டு
5 ஏழாவது அ
6 ம்பர் நாட்டு
7 தேவதானம்
8 திருமீயெச்சூ
9 ர் மஹாதேவ
10 ர்க்கு இன்னுட்டு
11 அண்டுரி மு . . .
12 கள் யாழகன்
13 காடுவெட்டி க
14 ல்லி மசக்கல்
15 லான அரைய்
16 . . . . . . . . .
17 . . . . . . ஸ்ரீ கோ
18 யிலி . . . வட
19 கீழ் மூலேக்கும்
20 . . . கொ

(திருப்பவும்)

21 ண்டு இரண்
22 டு நொந்தா
23 விளக்கு [குடு]
24 த்த் . . யில்
25 மூன்று குடிய்
26 பாட்டும்
27 பட்ட
28 ய்யை [மள]
29 . . . . . வோம்
30 மா . . . .
31 இவ்விளக்
32 கு [தாயாரை]
33 யும் தமக்கை
34 யாரையும் சா
35 த்தி வைச்ச இது
36 . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | 15, 16–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 281 of 1950 / 51 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : ஸ்ரீ மேகநாதசுவாமி கோயில் கட்டைக் கோபுரத்தின் வடபுறம் உள்ளது.

குறிப்புரை : திருமிகைச்சூருடைய நாயனருக்கு, அமுதுபடி சாத்துபடி விஞ்சனத்துக்கும் திருப்பரிவட்டம், திருவிளக்கு எண்ணெய் முதலியவற்றிற்கும் திருமிகைச்சூரைச், சேர்ந்த 'பண்டார வாடை' என்னும் இடத்தில் பூசமண்டபமும், மதில்சலசமுத்திரமும், சமுத்திரத்தைச் சேர்ந்த நாலு கரையிலும் உள்ள தென்னை, மா, பலா, இலுப்பை முதலிய மரங்களும் தானமாக அளிக்கப்பட்டச் செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகிறது. மதிலை உடைய குளமானது சமுத்திரத்தைப் போன்று மிகப் பெரியதாக இருந்ததால் 'மதில் சல சமுத்திரம்' என்று கூறப்பட்டிருக்கிறது. இக்குளமும் பூசமண்டபமும் வீரராஜேந்திர சோழப்பேராறு என்றவொரு ஆற்றிற்கு வடக்கே அமைந்திருந்தது என்றும் இக்கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . .
2 ஊதற்கன . . . . . ண்ட கண்ட . கண்ட
3 பேருண்டச . . . நிம் . ஞயர் பண்டார சூறைகளுற்
4 பளைய தேவ மகா இராசர் உய்யக்கொண்ட சோழ
5 வளநாட்டு மேல்கூறு திருமிகைச்சூர் பற்று (திருமிகைச்சூ
6 உடைய) திருமிகைச்சூருடைய நாயனர்க்கு சாத்துப்படி துப]
7 டி விஞ்சனத்துக்கும் திருப்பரிவட்டம் திருவிளக்கு எண்
8 ணைக்கும் ஆதிசேத்த திருமிகைச்சூர் பண்டார வ[ா]

(திருப்ட

9 டையில் வீரராசேந்திர சோழப் பேர் ஆற்றுக்கு வடக்
10 கு பூச மண்டபமும் மதில்சலசமுத்திரமும் சமுத்திரத்
11 தைச் சூழ்ந்த நாலு கரையும் நாலு கரைக்கும் உள்பட்டதென்ன
12 மாம்பலாமர இலுப்பைப் பற்றும் உண் [டாக்கி] மாந்தலையும்
13 உட்படச் சேத்தப்படியிலே சந்திராதித்தவரையும் சறுவ
14 மான்னியம் ஆக அனுபவித்துக் கொள்ளவும் இந்தத் தன்
15 மத்துக்கு அயிதம் பண்ணினவர்கள் கெங்கைக்
16 கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தி
17 லே போகக் கடவர்கள் ஆகவும் உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 15–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 922 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 284 of 1950 / 51 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |
| மன்னன் : | பரகேசரிவர்மன் முதற் பராந்தகச் சோழன் | | |

இடம் : ஸ்ரீ மேகநாதசுவாமி கோயிலிலுள்ள சாந்தநாயகி அம்மன் சந்நதியின் முன் மண்டப கிழக்குப்புறத்தில் 2–வது வரிசையில் முதல் தூணில் உள்ளது.

Incomplete. States that Solai-Sattan alias Kanjirukkaiparalurudaiyar made a gift of a timiloi (drum) and other instruments to god Mulasthanamudaiyar of Tirumiychur in Ambar nadu.

அம்பர் நாட்டினைச் சேர்ந்த திருமெய்ச்சூரில் உள்ள மூலஸ்தானமுடையாருக்கு சோலைசாத்தன் என்ற கஞ்சிருக்கை பாரலூருடையார், திமிலை மற்றும் பிற இசைக் கருவிகளும் தானமாக கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. கல்வெட்டு முழுதும் கிடைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 285 of 1950/51 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |

இடம் : ஸ்ரீமேகநாதசுவாமி கோயிலில் உள்ள சாந்த நாயகி அம்மன் சன்னதி முன் மண்டப கிழக்குப்புறத்தில் இரண்டாவது வரிசையிலுள்ள முதல் தூணிலுள்ளது.

Contains only the concluding portion of an inscription mentioning boundaries of lands. In character's of about the 10th cent. A.D.

கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டிலிருந்து நிலத்திற்கு எல்லைகள் கூறப்பட்டிருப்பது மட்டுமே தெரியவருகிறது.

மாவட்டம் : தஞ்சை

வட்டம் : நன்னிலம்

ஊர் : திருமெய்ச்சூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 14

இடம் : ஸ்ரீமேகநாதசுவாமி கோயில் வடபுற மண்டப ஜெகதியில் உள்ளது.

குறிப்புரை : துண்டு கல்வெட்டுக்கள். திருவெண்காடுடையாந் என்பவனும் பிராமணி ஆண்டாள்சாணி என்ற பெண்ணும் சந்தி விளக்குகள் எரிக்க உபயமாக காசு அளித்த செய்தியைக் கூறுகிறது இக்கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு :

I

1 . . . . . ந்திருமி[கைச்சூருடை]யார் விஷ்ணு . . . .
2 ட்டனும் திருவெண்காடுடையாந் தேவ . . . மாஹேஶ்வ . . . .
3 கம்பிச்சந்திவிளக்கொந்றுக்கு உபயமாக ஒடு . . . .
4 யன் அங்கணர் சிஙபிராமணி திருமட்டங் கொண . . . .

II

1 . . மிகை நாயஞை . .
2 . . யாகூஷந் திருநிலக் . .
3 . . க்கெரித்து இ . .
4 . . தித்த சதுப்பேதி . .

I

1 மம் ஸ்ரீபாண்டி நாட்டில் பவித்திர . . .
2 பிராமணி ஆண்டாள் சாணி வ . . .

(திருப்பவும்)

3 ந்தருளி இருக்கும் திருவிளங் கோயி . . .

4 ண்டியான அம்பர் நாட்டு வேளா . .

5 செலுத்தக் கடவோமாக ஸம்மதித் . . .

6 க்கொந்றும் ஆகத் திருவி . . . .

## II

1 கச்சூருடையார் விணயா வடங்

2 கந் ஆளுடையான் பட்டனும் இ . . . .

3 திருவெண்காடுடையானும் இக்கு . . .

4 உபையத்தீட்டுக் குடுத்த பரிசாவ . . .

5 நாள் வத்தராயற்கு புக்க சடைமெலி . . .

6 ற்கு இரண்டாவது ளுள் நூற்றெருந்ப . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10, 11–ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | திருமெய்ச்சூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : ஸ்ரீமேகநாதசுவாமி கோயில் வடபுற மண்டப ஜெகதியில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள். மாணிக்க பட்டணத்து வியாபாரி இரும்புதலுடையான் மன்ருடி அண்டந்தேவன், பிராமணி அம்மைப்பிராட்டி, ஆண்டங்கைச் சாணி என்பவர்கள் சந்திவிளக்குகள், திருவிளக்கு எரிக்க காசுகள் உபயமாக வழங்கிய செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டு :

I

1 மங்கலத்து இரண்டாஞ் சோட . . . .
2 மாணிக்க பட்டணத்து வியாபாரி . . .
3 ந்தி விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கிந . . .
4 லுடையார்க்கு ஸந்தி விளக்கெ . . .
5 ணி ஸந்திவிளக் கொன்றுக்கு ஒடு . . . .
6 து உபையத்தீட்டுக் குடுத்தோம் . . . .

II

1 . . . . . . . . . . . . . . . . . . . . . .
2 ளக்கொன்றுக்கு உபையமாக ஒடுக்கிந காசு பத்து . . .
3 தும் மன்ருடி அண்டந்தேவன் ஸந்தி விளக்கொ . . . .
4 இவ்வூர்ப் பிராமணி அம்மைப் பிராட்டி ச . . . .
5 [கா]சு ாகூம்அ நூற்றுத் தொண்ணூற்றெட்டும் மு . . . .
6 தி விளக்குக்கு திருமிகைச்சூரு . . . .

(திருப்பவும்)

## III

1 டையாள் உய்யவ . . .

2 பையத்துக்கு ஒடு . . .

3 முறும் ஆக ஸ்ரீ . . .

4 தப் பேரையன் . . .

5 நாங்களும் எங் . . .

6 . . திருவிளக்கு . . .

## IV

1 கிக் காசு இருபது . .

2 ம் அரையன் சிந் . .

3 றுக்கு உபை . .

4 ணி ஸந்தி வி . .

5 ப்பது வட்டத்தி . .

6 [ஸ]ந்தி வாண . .

## V

1 . . . . . . . . த்து வியாபாரி இரும்புதலுடையான் . . . .

2 கண்டியான அம்பர் நாட்டு வேளான் சந்தி விளக்கு . . .

3 யமாக ஒடுக்கின காசு பத்தும் ஆக ஸந்தி . . .

4 ளக்கு ஒன்றுக்கு காசு பத்தும் கடுவன்குடி மனிச்சரி

5 லே நாங்களே கைக்கொண்டு இந்த சந்தி விளக்கு . . .

6 ந் ஆழ்வாந் மகள் ஆண்டங்கைச் சாணி . . . . .

மாவட்டம் : தஞ்சை

வட்டம் : நன்னிலம்

ஊர் : திருமெய்ச்சூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 10. 11–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 16

இடம் : ஸ்ரீ மேகநாதசுவாமி கோயில் வடபுற மண்டபப் பட்டியில் உள்ளது.

குறிப்புரை : பெருஞ்செல்விச்சாணி, உமையாழ்வி, திருவகஸ்தீஸ்வரமுடையான் ஆகியோர் சந்திவிளக்குகள் எரிப்பதற்கு காசுகள் பத்து, இருபது விதம் கொர்டுக்கப்பட்ட செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. துண்டு கல்வெட்டுக்கள்

கல்வெட்டு :

I

1 பிராமணி . . . [த்து] . .

2 க் குடுத்த பரிசாவது இத்தே . . .

3 பத்துக்கு முதலாக ஒடுக்கின . . .

4 ப் பெருஞ் செல்விச்சாணி சந்திவிள[க்கு] .

II

1 [வீதி] விடங்க தேவர் ெ . . .

2 . . . ர் பட்டனும் கவுசிகன் . .

3 [ஒடு]க்கின காசு பத்தும் பெரிய தேவ . .

4 டாள் சானிசந்தி விளக்கெரி[க்க] . . .

1 ருபதும் கடுவன்குடி மநிச்சரில் ஆதி ச . . .

2 அகம் முடையாள் உமையாழ்வி சந்திவி . . .

3 கு உடைய முதலாக ஒடுக்கிந காசு பத் . . .

4 யத்துக்கும் தனகி ஒடுக்கின காசு பத்து . . .

(திருப்பவும்)

5 இருபது காசுக்கு முதலாக ஒடுக்கின கா[சு] . . .

6 ங் கோயிலுடையார்க்கு ஸந் . . .

## III

1 தேவன் திருவகத்தீஸ்வரமுடையானை முன்னூற்றுவப்பட்ட னு[ம்] . .

2 கு ஸந்தி விளக்கெரிப்[பதற்கு] ஸ்ரீஹஸ்தேயந் திருமிகைச்சூர் பிராமணன் . . .

3 எட்டும் ஆக சந்தி விளக்கு மூன்றும் பலபத் . . . சந்திதிரு விள . . .

4 க் கொந்றுக்கு உபையத்து மு . . . மாண்டர்

## IV

1 . . . . . . .

2 ற்றுக் குடையா . . .

3 கனி ஸந்தி விள[க்கு]

4 தி விளக்கொ[ன்றுக்கு] . .

5 ாலும் ஆக ஸ . . .

6 . . ராயத் . .

1 வர்க்கு பத்தொன்பதாவது அன்ந பட்டரு[ள்] தேவன் உய்ய வந்தான் . . .

2 த்துக்கு முதலாக ஒடுக்கிந காசுக்குக் குடலாக ஸ்ரீஹஸ்தேயந்திரு . . .

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY. Acc No. ... Date ... MADRAS

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 39 ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1109 ஆம் |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 72 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதல் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தட்சிணாமூர்த்தி சன்னதித் தூண்களில் உள்ளன.

குறிப்புரை : முதல் குலோத்துங்கச் சோழனின் இருபத்தாறுவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயிலில் திருவரங்கமுடையான் என்பவன் திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்த செய்தியும், அத்திருப்பள்ளியறை நாச்சியாருக்கு இறையிலியாக ஊர் சபையோர் நிலம் அளித்த செய்தியும் இக்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றன. ஊர்க் கணக்கர் போன்றோர் கையெழுத்திட்டிருக்கிற செய்தியும் தெரியவருகிறது. செம்பியந் மாதேவி பேராறு, குலோத்துங்கப் பேராறு, இராஜேந்திர சோழ வாய்க்கால் ஆகிய ஆறுகளின் பெயரும், வாய்க்காலின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. பவித்திர மாணிக்கவதி, சகாயவதி ஆகிய இரு வழிகளின் பெயரும் கூறப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது வி[ரும்ப]

2 நிலமகணிலவ மலர் மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி [மீனவர் நிலைகெட]

3 வில்லவர் குலைதர ஏனை மந்னவரிரியலுற்றிழிதர [விக்கலன் சிங்கணன் மேல் கடல் பாய] திக்கனைத்

4 துந்தன் சக்கர நடாத்தி [விஜையாபிஷேகம் பண்ணி] வீரசிம்ஹாசனத்து புவன முழுதுடையாளோடும்

5 விற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பந்மரான

6 திரிபுவன சக்ரவத்திகள் குலோத்துங்க சோழ தேவற்கு

(திருப்பவும்)

யாண்டு ௩௰௯ ஆவது குலோத்துங்க சோழ வள
8 நாட்டுப் பனையூர் நாட்டு திருவாஞ்சியத்து தேவ
9 தானம் திருவாஞ்சியமுடைய [நாயனார் கோயிலில்]
10 . . திருவரங்கமுடையான் எழுந்தருளுவித்த
11 திருப்பள்ளியறை நம்பிராட்டியார்க்கு நாங்கள் இறையிலி ச
12 ஸனஞ் செய்து குடுத்த நில
13 மாவது பவித்ர யாணிக்க வதிக்குக்குக் கிழக்கு
14 ராஜேந்த்ர ஸோழ வாய்க்காலுக்குத் தெற்கு இர
15 ண்டாங் கண்ணாற்று இரண்டாஞ் சதுரத்துன்
16 டத்து வடக்கடைய ரூ வஉ .[1] இந்நில நீக்கி
17 த் தெற்கடைஞ்ச நிலத்து மேற்கடைய ரூ ஒ
18 ரு மா நீக்கி இந்நம்பிராட்டியா[ர்*]க்கு நாங்
19 கள் விட்ட ரூ வ .[2] இந்நிலமிருமாவரையும்
20 இந்னம் செம்பிய[ந்] மாதேவிப் [பேராற்று]
21 குலோத்துங்க சோழப் பேராற்று[க்கு*]த்தெற்கு . . .
22 யோடும் மடைய் பா[யும்] ஸகாய வதிக்கு
23 க் கிழக்கடைய ரூ ௩ இந்நில மூன்று மாவு .
24 . . . த்தடி இரண்டினால் . . . இந்நிலங்கா
25 லேயரை[நா] . . டி இந்னம்பிராட்டியார்
26 கு . . . இறையிலியாக விட்டு இக்கொற்றந் ப
27 க்கல் பொன் கருணாகரந் திருவரங்கமுடையான் ப்
28 [பெ]பற்[ற] இந்நிலத்துக்குப் பொலியூட்டாகக் கொண்
29 ட . . . . யாலே நெல்லு இருநூற்றெண்பதி நா
30 யிரமுங் கொண்டு இந்நிலங்காலேயரை மாவு
31 ம் சந்த்ராதித்தவற் ஸாஸ்வதிகபடி இறையிலி
32 செய்து நம்பிராட்டியார்க்கு இறையிலியாக விட்டு
33 க் குடுத்தோம் திருவாஞ்சியத்துப்ரஹ்மதேயத்து ஸபை[யோம்]
34 . . . . . கணக்கு எழுதிநேந் இவ்வூர்கணக்கந்
35 . . . . ங்கிற வைகாஸநாந புத்தந் . . . . எழுத்தும் பெ
36 ருமதிநன் எழுத்தும் . . . . . . . . . . .
37 காணி உடையார் எழுத்தும் திருவாஞ்சிய
38 முடையார் எழுத்தும் . . . . . . . . . . . .

---

1, 2 புள்ளியிடப்பட்டுள்ள இவ்விடங்களில் நிலத்தின் அளவு குறியீட்டால் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 18–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | 13–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 70 of 1911 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜ சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகா மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : திருவாஞ்சியமுடையனார் கோயிலில் காமக்கோட்டமுடைய நாச்சியாராகிய இறைவியை எழுந்தருளுவிக்க வேண்டுகோள் விடுத்து, கோயில் எடுப்பித்து இறைவியை எழுந்தருளுவிக்கும்போது, இக்கோயிலுக்கு வடக்குத் திருவீதியிலே நாலே சின்னங்கோல் மனையை காணியாகவும் இறையிலியாகவும், இக்கோயில் எடுத்து கும்பிட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆண்டார் புதுவூருடையார் வினயக தேவரான தையல் பாரமுடையார் என்பவர், நிலம் தானமாக கொடுக்கப்பட்ட செய்தியும் கூறப்படுகிறது. முடிகொண்ட சோழப் பேராறு, கங்கை கொண்ட சோழ வாய்க்கால் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. கல்வெட்டின் இறுதிப் பகுதி காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு ௰அ ட்டாவது ஆடி மாஸத்தொரு

2 நாள் குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடையநா

3 யனாற்கு திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாரையும் எழுந்தருள விண்ணப்பஞ் செய்து திருக் கே

4 காயிலும் செய்து எழுந்தருளும் நாச்சியாரையும் எழுந்தருள விண்ணப்பஞ் செய்கையில் இவற்கு

5 வடக்கில் திருவீதியிலே நாலே சின்னங்கோல் மனையாக காணி[யும்] இறையிலியுமாகப் பெற்று இம்

(திரும்பவும்)

6 மனை தம்பிராட்டி சிவநாமத்தால் குகை எடுத்து கும்பிட்டா
ருக்கும் ஆண்டார் புதுவூருடையார் விணாயக தே

7 தவரான தைய்யல் பாரமுடையார் இந்நாட்டு (அ)ணை நகரைச்
சே[ர்] கயிலாய காணியான முடிகொண்ட சோழப் பே

8 பராற்றுக்கு வடகரையிருக்கு[ம்*] வாடகை நிலத்துக்கு மேற்கு
ரூ ஸ்ரீ கூம் கங்கை கொண்ட சோழ வாய்க்கா

9 லுக்கு தெற்கு உடையார் சோம . . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 24-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 66 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறக் குமுதப்படையில் துர்க்கை அம்மன் சந்நிதியின் பின்புறம் உ.ளது.

குறிப்புரை : மூன்றும் இராஜராஜ சோழனின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டில் திருமங்கலத்து நாராயணபட்ட ஸோமயாசியர்ரிடமிருந்து பதினாறாயிரம் காசுகள் கொடுத்து நிலம் விலைக்கு வாங்கிய செய்தியும், சாகாணே அவிமுத்திசிரமுடையான் பட்டரான வெள்ளைப்பிள்ளை ஆண்டார் என்பவரும் சீராளதேவர் என்பவரும் முறையே எழுந்தருளுவித்த தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியப் பிள்ளையார் ஆகியோர்ருக்கு வழிபாடு செய்வதற்காக நிலம் விலைக்கு வாங்கிய செய்தியும். நிலங்களின் அளவுகளும், எல்லைகளும் கூறப்பட்டிருக்கின்றன. இராஜகம்பீர வாய்க்கால், இரர்ஜேந்திர சோழ வாய்க்கர்ல் ஆகிய வாய்க்கால்களும், பழியஞ்சிவதி, பழியஞ்சாவதி என்ற இரு வழிகளும் இருந்ததாக குறிப்பிடப்படுவது சுவையான செய்தியாகக் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு இருபத்து நாலாவது நாள் இருநூற்று எண்பத்தொன்பதினால் திருமங்கலத்து நாராயணபட்ட ஸோமயாசி[ய]ார் பக்கல் விலை கொண்ட பழியஞ்சி வதிக்கு மேற்கு இராசகெம்பீர வாய்க் காலுக்கு தெற்கு இரண்டாங் கண்ணாற்று [திருவா]

2 ஞ்சியத்து கீழ்க்கடைய ஊர்[படி]நிலம் முக்காணி அரைக்காணிக் கீழரைக்கு பிரமாணவிலைப்படி குடுத்தகாசு பதினாறாயிரத்து நூறு ||௨ பலரும் திருநாமத்துக் காணியாக நீர்வார்[த்துப்பு]

(திருப்பவும்)

குந்த இவ்வூர் சாகணே அவி முத்திசிரமுடையான் பட்டரான வெள்ளைப்பிள்ளை ஆண்டார் எழுந்தருளிவித்த ஊக்ஷிணுமூ[ர்*]த்தி தே[வர் அமு]

3 து படிக்கு உடலாக இருப[தாவ]து விட்ட இவ்வூர்ப் பிடாகை ஆவூரில் பழியஞ்சி வதிக்கு தெற்கு இராசேந்திர சோழ வாய்க் காலுக்கு தெற்கு முதற் கண்ணுற்று இரண்டாஞ் சதிரத்[து விட்ட கீழ்க]டைய இவ்வூர் படிநிலம் காணிஅரைக்காணிக்கு முக்காலே அரைமா முந்திரிகைக் கீழரையே நாலுமா

4 நாற்புறத்து யஜ்ஞவராகபட்டன் பிராமணி இறுப்பு திருநாமத்துக் காணியாக நீர்வார்த்த பழிஞ்சாவதிக்குக் கிழக்கு இராச கெம்பீர வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாங் கண்ணுற்று இரண்[டாஞ்சதிரத்து] ஊர்படி நிலம் அரைக்காணி புன வாயலுடையார் சீராளதேவர் எழுந்த[ரு]ளிவித்த சுப்பிர மண்ணியப் பிள்ளையா

5 [ருக்கு] பூசை செலுத்த விலை கொண்டு இவ்வூர்ப் பிடாகை குண்டு வாச கோயில் இவ்வதிக்குக் கிழக்கு இவ்வாய்க் காலுக்கு [மூ]ன்றுங்கண்ணுற்று மூன்றுஞ் சதிரத்து [ஊர்] படி நிலம் அரைமாவின் சின்னம் .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 20-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1236-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 71 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜ சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறக் குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் ராஜராஜ சோழனின் இருபதாவது ஆட்சியாண்டில் கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. சீரங்கநாதபட்டன், கருவரை போல் நின்றான் ஆகியோரிடமிருந்தும், வடகண்ணமங்கலத்தைச் சேர்ந்த காணியாளர்களிடமிருந்தும், நிலம் விலைக்கு வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. நிலத்திற்கு விலையாகக் கூறும்போது காசு நாற்பத்தையாயிரத்தைஞ்நூறு, ஐய்யாயிரம், ஒன்பதினாயிரம் என்று கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. குதிரை வட்டம், உய்யக்கொண்டான்மயக்கல் என நிலங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது. இறுதிப் பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் சி இராசராச தேவற்கு யாண்டு இருபதாவது நாள் முன்னூற்று ஐம்பத்து னலினல் பிரமதேய[ம்]

2 பிறிந்த ஊர்களிலும் பெரும்பற்றப்புலியூர் சா . . . . பாகம் சீரங்கநாதபட்டன் பக்கல் விலைகொண்ட ஊர்ப் . . . . . தொங்கி நில[ம்]

3 [த]டி இரண்டினல் நிலம் அரையே அரைக்காணியும் குதிரை வட்டம் நிலம் நான்மாவரையும் உய்யக்கொண்டான் மயக்கல் நிலம் காலே அரை

4 மாவிலைப்படி காசு நாற்பத்தைய்யாயிரத்தைஞ்நூறும் . . . . . . . இருபத்தொன்றுவது நாள் இருபத்தொன்பதினல் இவூர்க் கருவரை போல் நின்றான் . . .

(இருப்பவும்)

5 காணிக்கு விலைப்படி காசு ஐய்யாயிரத்து . . . . . இருபத்திரண்
டாவது . . . . . . . . நானூற்று முப்பத்து மூன்றிநால்

6 காலுக்கு விலைப்படிகாசு ஒன்பதினாயிர[மும் வடகண்ண] மங்க
லத்து வைப்பூருடையார் மாண்டான் பக்கல் இருபது

7 ம் மூன்று மாகாணிக்கு விலை . . . . . . . . . ெ[தா]ண்ணூறு[ம்] வட
கண்ண மங்கலத்து காணியாளரில் வைப்பூ[ருடையார்] . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 63 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | கோச்சடைய பன்மர் திரிபுவனச்சக்கரவர்த்திகள் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : ஸ்ரீவாஞ்சிநாதர் கோயில் மகா மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டில் கூறப்படும் பாண்டிய மன்னன் யாரென்று தெரியவில்லை. எஞ்சிங்கபட்டன் என்பவன் ஸ்ரீவாஞ்சிநாதர் கோயில் ஆதிசண்டேசுவரருக்கு திருநாமத்துக் காணியாக நிலம் விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. இந்நிலத்தில் இறைவனுக்கு திருநந்தாவனம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். புத்தாறு என்ற ஆற்றின் பெயரும், பழியஞ்சிவழி என்ற வழியும், முத்துக்கண்ணுறு என்ற நிலத்தின் பெயரும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வரியின் இறுதிப் பகுதிகளும், இறுதி வரிகள் சிலவும் காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 கோற்சடைய பன்மரான திருபுவன ச(ா)க்கரவத்திகள் . . . . . . .

2 வற்கு யாண்டு ௰௩-வதின்[1] மேல் அபர பக்ஷத்து ஏகாதெ[சி]யும்

3 மூலத்துநாள் குலோத்துங்க [சோழ வ]ள நாட்டு பனையூர் நாட்டு திருவாஞ்சிய

4 . த்து சதுர்வேதி மங்கலத்து விற்றனைப் பிறந்தான் மகந் எஞ்சிங்கஙட்ட [ன் விலைப்பிரமாண இ]

5 சைவு தீட்டு இவூர் உ[டையா]ர் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதி [சண்டேஸ்வர தேவற்கு இற்றை]

6 நாளால் நான் திருநாமத்து[க்காணியாக] [வி]ற்றுக்குடுத்த நிலமாவது இவூர் பட்டர் . . . . . . . . . . .

7 . . . புத்தாற்றங்கரை [பழிய]ஞ்சிவதிக்குக் கிழக்கு முத்து கண்ணுற்று

(திருப்பவும்)

8 க்கு வடக்கு மேற்க்கடை[ய நிலம்] விட்டுதடி ஒன்றினால் இனா[யனா]ர்க்கு . . . .

9 [ப]டி தடி ஒன்றினால் நிலம் [இ]ன்னிலம் ஒரு மாக்காணியும் வி[ற்]றுக்கு . . . . . . . . . .

10 னார்க்கு விற்றுக் குடுத்த . . . . நிலத்து வடதலையில் மனையும் இத் . . . . . . .

11 சொற்ப்படி குழி நூற்று இ[ரண்டு] இதில் இன்னாயனார்க்கு திருநந்தவனத் . . . . . . .

12 குடுத்த குழி எம்ப[த்*]தைஞ்சும் ஐம்பதும் ஆக குழினூற்றிருபதைஞ்சும்

13 நில உ௯ . . . . . . ணினகு . . ஐஞ்சு நீக்கிக் குழி அறுநூற்று எழுப[த்*]தை] . . . .

14 . . . நகூய ரூ இ . . . . . ண்ணூற்று முப்பதைஞ்ஐசுக்கு இற் . . . .

15 ணம் . . . ன்று . . . . . . . . விலைப்படி ப உயா இப்படி யறிவேன் வ . . . . . .

---

1-வதின் என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1261-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 68 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தென்புறத் திருச்சுற்று மாளிகை குமுதப்படையிலுள்ளது.

குறிப்புரை : சுந்தரபாண்டியனின் பத்தாவது ஆட்சியாண்டில் இக்கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மிகளுக்கு, அகரம் ராஜகம்பீர சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த ஸ்ரீமாதவபட்டன் என்பவன் நிலம் விற்றுக் கொடுத்த செய்தியும், நிலத்திற்கு எல்லைகளும், பலரும் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது. இறுதி நான்கு வரிகளிலும் இறுதிப் பகுதிகள் காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவ[ன*]ச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ௰-வது பத்தாவது மிதுன நாயற்று பூர்வபக்ஷத்து த்விதீயையும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற பூசத்துநாள் குலோத்துங்க சோழவளநாட்டுப் பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவ கன்மிகளுக்கு

2 இவ்வூர் அகரம் ராஜகம்பீர சதுர்வேதி மங்கலத்து பட்ட[ர்*] களில் விற்றநூர் ஸ்ரீமாதவ பட்டன் நிலவிலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இற்றை நாளால் இந்நாயனார்க்கு நான் விற்றுக் குடுத்த பழியஞ்சிவதிக்கு மேற்க்கு புரிவாரி வாய்க்காலுக்குத் தெற்க்கு முதல் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து மேற்கண்ட த[டி க] விட்டு தென்கீழ்க்கடைந்த த[டி ச]ல் ஊர்ப்படி துரவும் மனையும் உட்பட ரூ சா இன்னி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(திரும்பவும்)

3 [லத்து]க்கு கிழக்கும் வடபார்கெல்லை திருவாஞ்சிய தேவன் வாய்க்காலுக்குத் தெற்க்கும் ஆக இசைந்த இன்னான்கெல்லையுள் நடுவுபட்ட நி[லம்] . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

4 [இற்]றை நாளால் விலைப்படி காசினால் ௯ ௨௰௨ இப்பணம் இருபத்திரண்டுமே பற்றி இன்னையானர்க்கு திருநாமத்துக் காணியாக இன்னிலம் [ஒரு]மாவும் விற்றுக் குடுத்தமைக்கு விற்றலூர் ஸ்ரீகார்யவஹட்டன் எழுத்து . . . . . . .

5 இப்படி அறிவேன் கோக்கரை உமாபதி பட்டனேன்
இப்படி அறிவேன் சொட்டை தியம்பக ஹட்டனேன்
இப்படி அறிவேன் முடும்பை வரதராஜ ஹட்டனேன்
இப்படி அறிவேன் கோமடத்து நாராயண ஹட்டனேன்
இப்படி அறிவேன் விசலூர்கிழவன் தில்லை நாயகனேன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1262-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 69 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தென்புறத் திருச்சுற்று மாளிகைக் குமுதப்படையில் உள்ளது.

குறிப்புரை : சுந்தரபாண்டியனின் பதினொன்றாவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மிகளுக்கு ராஜராஜசதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த காரம்புச்செட்டு ஸ்ரீதரபட்டன் என்பவன் ஆணங்கிச்சாணி என்ற தனது தாயின் ஒரு வேலி நிலத்தை, இக்கோயில் ஆதிசண்டேசுவ தேவகன்மிகளுக்கு விற்று விலைப்பிரமாணம் செய்து கொடுத்த செய்தி கூறப் படுகிறது. மேற்கூறிய ஆணங்கிச்சாணி என்பவள் திருவாஞ்சியமாகிய ராஜ கம்பீர சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த மணவாள பட்டன் மனைவி என்றும், அவள் ஸ்ராத்தமாக அரைவேலி நிலமும், சம்ஸ்கார தட்சிணையாக அரை வேலி நிலமும் ஆக ஒரு வேலி நிலம் பெற்றிருந்ததாக கூறப்படுகிறது. இவளது கணவன் இறந்து பட்டதால் இவளுடைய மகன் ஸ்ரீதரப்பட்டன் என்பவன் இவளுக்கு காப்பாளராக (Guardian) இருந்து நிலம் விற்றுக் கொடுத்தான் எனத்தெரியவருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவனச்சக்கரவத்தி[கள் ஸ்ரீ] ஸுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதின்ஒன்றாவது கன்னி நாயற்று ஸுவரபக்ஷ[த்து] . . . . . . .

2 [குலோத்து]ங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு உடையார் ஸ்ரீவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவ [கன்மி]களுக்கு [அகரம்] . . . . ராஜராஜசதுர்வேதி மங்கலத்து காரம்பு

(திருப்பவும்)

3 ச் செட்டு ஸ்ரீயரஹட்டநேன் நிலவிலை வ்ரஜாணம் பண்ணிக்
குடுத்த பரிசாவது அகரம் திருவாஞ்சியமான ராஜமஹேந்ரசதுர்
வேதி மங்கலத்து மோமடத்து அழகிய மணவாள ஹட்டன்
பாரியை ஆணங்கிச்சாணி பக்கல் எங்கள் பிதாக்கள் ஸ்ராஜமாகப்
பெற்ற ஊர்ப்படி ரூ ரும் இவள் தனக்கு ஸம்ஸ்காரதக்ஷிணை
யாக நியமித்துத் தந்த ரூ ரும் ிு இன்னிலம் ஒரு மாவும்
திருநாமத்துக் காணியாக நான் . . . .

4 . . . . . . . . . . காலுக்குத் தெற்கு ௬௧௯ சதுரத்துக் கீழ்
கூறு ரூ ிு இன்னிலம் ஒரு மாவும் விற்றுக் குடுத்துக்
கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் காசினால் ப யரு
இப்பணம் பதின்ஐ[ந்]சுக்கும் இந்நிலத்தால் வ .

5 ரும் ஸ்வஸ்த்ராஸ்திகளும் உட்பட விற்றுக் குடுத்த இந்நிலம் ஒரு
மாவுக்கு காரம்புச் செட்டு ஸ்ரீயரஹட்டன் இவை எந் எழுத்து
. . . . அபேக்ஷிக்க இன்னிலவிலை வ்ரஜாணம் எழுதினேன்
அதம்பாரர் ஸ்ரீகங்கை கொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்து
நம்பூர்க்காட்டு ஸ்ரீராமபட்டனேன் இவை என் எழுத்து
இப்படிக்கு இவை நமாமிவஜஹட்டன் எழுத்து இப்படிக்கு
இவை நம்பூர் ஹவநஜஹட்டனேன் இவை என் [எழுத்து]
[இப்]படி அறிவேன் குண்டூர் ஸ்ரீ[க்ரு]ஷ்ண ஹட்டனேன்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 20–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1323 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 230 of 1938 / 39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஜடாவர்மன் வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : ஜடாவர்மன் வீரபாண்டியனின் இருபதாவது ஆட்சியாண்டில், திருவாஞ்சியமுடையனுடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்கு, சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயகன் அரையன் திருவம்பலப் பெருமாள் என்பவன் நிலம் விற்றுக் குடுத்து உள்ளூர் வியாபாரி ஒருவர் காட்சியாக பணம் நூற்றி ஐந்து பெற்றுக் கொண்டு, நில விலைப்பிரமாணம் செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டின் பெரும்பகுதியில் விற்கப்பட்ட நிலத்திற்கு எல்லைகள் கூறப் பட்டிருக்கின்றன. ஆலூர் வாய்க்கால், உட்சிறு வாய்க்கால், செனனுதன் வாய்க் கால், பத்தாறு போன்ற வாய்க்கால்களின் பெயரும், ஆற்றின் பெயரும், பனங் குளம் என்ற குளத்தின் பெயரும் குறிப்பிடப்படுகின்றன. நிலங்களின் பெயர் களாக, சேறு, விளாகம், பனங்கரை, ஆராஅமுது, ஓடை, என்று கூறப்பட்டிருக் கின்றன. பிடாரி கோயில் ஒன்று அவ்வூரில் இருந்த செய்தியும் தெரியவருகிறது. திருவாஞ்சியத்தில் பல வியாபாரிகளும் இருந்தனர் என்று தெரியவருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ[வீரபாண்டிய] தேவர்க்கு யாண்டு உ௰-வது [ஸிம்ஹநாயற்று] சுஹர பக்ஷத்து

2 ஸப்தமியும் திங்கட்கிழமையும் பெற்ற சதயத்து நாள் [குலோ] த்துங்க சோழ வளநாட்டு பனையூர்நாட்டு உடையார் திருவா

3 ஞ்சிய முடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்கு இந்நாட்டு வேளாந் சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயக[ன் அரை]

(திருப்பவும்)

4 யன் திருவம்பலப்[பெருமாள்]நிலவிலை ஹமாணம் செய்து குடுத்த பரிசாவது சிறுமன்றூர் கிழவர் . . .   . . யான நிலத்து

5 இற்றை நாளில் ஆற்றங்கரை ந . . . த்து திருத்தென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடை

6 யார் பக்கல் இந்நாயனார்க்குத் திருநாமத்துக்காணியாக கொண்ட நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஆலூர்வாய்க்காலுக்கு வடக்கும்

7 மேல்பார்க்கெல்லை ஆலூர் பழவாத்தலைக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை பத்தாற்றுக்குத் தெற்கும் அடி பலவினால் ரூ ஹங . . . உகூ விளா

8 க மென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்பார்க்கெல்லை சிறு [மன்றூர்] கிழவர் திருவாஞ்சியமுடையார் நிலத்துக்கு மேற்க்கும் தென்பார்க்கெல்லை [உட்]ச்சிறு [வாய்க்காலுக்கு]

. . . . . . . .

9 க்கும் ரூ வப . . . இக்கண்டத்து சே[ம] . . . . . . . . . . . . . நாயனார்க்கு திருநாமத்துக் காணியாக [கொண்ட] நிலத் துக்[கு*] கிழக்கும் வடபார்க்கெல்லை ஆலூர் வாய்க்காலுக்குத் தெற்[கு]

10 உட்சிறு வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடைய [னாயனார்] திருநாமத்துக்காணியாக கொண்ட நிலத்துக்குக் கிழக்கும் வடபார்க்கெல்லை ஆலூர் வாய்க்காலுக்கும் தெற்கும் ரூ விலை . ம் மூந்ரு[ங் கண்ணாற்று] [இரண்டா]

11 ங் கண்டத்து கீழை ஆராஅமுதென்று பேர் கூவப்பட்ட நிலத் துக்கு[கீழ்]பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சிய முடையார் நிலத்துக்கு மேற்க்கும் தென்பார்க்கெல்லை சிறுமன் றூர் கிழவர் திருவாஞ்சியமுடைய பந்தர் நிலத்துக்கும் திருவாஞ்சியமுடை

12 [யார்]பக்கல்த் திருநாமத்துக் காணியாக கொண்ட நிலத்து . . . . . . . . . . . . . . . . . மேல்பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடையார் பக்கல் திருநாமத்துக்காணியாக கொண்ட நிலத்துக்[கு]கிழக்கு வடபார்க்கெல்லை உட்ச்சிறு வாய்க்காலுக்குத் தெற்க்கும்

13 . . . . . . . . . . . பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை . . . . . . . . . . நிலத்துக்குமேற்கு . . . . . [பா]ர்க்கெல்லை . . . . . [தெ]ற்கும் பிடாரி கோயிலுக்கும் வட[க்கும்] . . . . . [மே]ல்பார்க்கெல்லை கண்ணி வாய்க்காலு

14 க்கு ஆளுமறையர் திருவம்பலச் சொக்கர் பக்கல் இன்னாயனார்க்கு திருநாமத்துக்காணியாக கொண்ட நிலத்துக்குக் கிழக்கும் வட

பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவம்பலப்பெருமாளும் இராஜராஜ விழுப்பரையரும் நிலத்துக்கு

15 த் தெற்கு ரூ ௨ உ ஊ ம் [ப]னங்கரை என்று பேர் கூவப் பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லையும் தென்பாற்கெல்லையும் சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடையார் பக்கல் திருநாமத் துக்காணியாக கொண்ட நிலத்துக்கு மேற்கும் வடக்கும்

16 மேல்பார்க்கெல்லை பனங்குளத்துக்கும் இற்றை நாள் இந்நாய ஞர்க்கு விற்றுக் குடுத்த நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை திருவாஞ்சியமுடையார் பக்கல் திருநாமத்துக் காணியாக கொண்ட நிலத்துக்கு தெற்கு ரூ ரூ ம் இக்கண்டத்து

17 ே[ச]று என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடையார் பக்கல் திருநாமத் துக்காணியாகக் கொண்ட நிலத்துக்கு இற்றை நாள் இன்னுயை ஞர்க்கு விற்கின்ற நிலத்துக்கு மேற்கும் [தெ]

18 ன்பாற்கெல்லை செனஞுதன் வாய்க்காலுக்கும் மேல்பார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருஞானசம்பந்தர் நிலத்துக்குக் கிழக்கும் வடபார்க்கெல்லை திருவாஞ்சியமுடையார் நிலத்துக்கு தெற்கும் ரூ சு ஊ இக்கண்

19 டத்து ஓடை என்[று*] பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்பாற் கெல்லை பாக்கத்து எல்லைக்கும் தெற்கு . . . . . . . . கெல்லை செனஞுதன் வாய்க்காலு[க்கு*] வடக்கும் மேல்பார்க்கெல்லை இற்றைநாள் இந்நாயஞர்க்கு விற்றுக்குடுத்த நில

20 த்துக்குக் கிழக்கும் வடபார்க்கெல்லை சிறுமன்றூர் கிழவர் திருவாஞ்சிய முடையார் பக்கல் திருநாமத்துக் காணியாக கொண்ட நிலத்துக்குத் தெற்கும் ரூ உப ஆக ரூ உ௱ இந் நிலம் இரண்டரைக்கும் சாதனப்பட்டர் ரூ இப்ப

21 ணம் நூற்றஞ்சும் உள்ளூர் வியாபாரிகளில் திறுச்சி உடையார் . . . . தேவர் காட்ச்சியாக கை ப கொண்ட . . . . . . . விற்று விலை ப்ரமாணம் பண்ணிக்குடுத்தேன் சிறுமன்றூர் கிழவன் . . . யாராயன் திருவம்ப

22 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

23 லப் பெருமாளேன் இவை சிறுமன்றூர் [கிழவர் தில்லை]நாய[கன்] அம்பலப்பெருமா[ளேன் என் எழுத்து] இப்படி அறிவேன் மனக்காவுடையான் சவுர[ன்] பெருமாள் எழுத்து இப்படி அறிவேன் . . .

24 ச[ா]னூர் கிழவர் தில்லைநாயகன் எழுத்து [இப்படி] அறிவேன் சிறுமன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையான் எழுத்து இப்படி அறிவேன் பாலை உடையான் எழுத்து இப்படி அறிவேன் கொற்றங் குடையா

25 ன் முதலியான் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 23-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1357-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 226 of 1938/39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| மன்னன் : | மாறவர்மன் வீரபாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தென்புறத் திருச்சுற்று மாளிகையில் உள்ளது.

குறிப்புரை : மாறவர்மன் வீரபாண்டியனின் இருபத்து மூன்றுவது ஆட்சியாண்டில் மங்கலங் கழையான் தேவர் கண்டன் என்பவன், தான் ஸ்ரீதனமாக பெற்ற மூன்று வேலி நிலத்தை, திருவாஞ்சியமுடையநாயனர் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் கன்மி களுக்கு (கோயில் நிர்வாகத்தினர்) அறுபது பணத்திற்கு (அன்றாடு நற்காசு) விற்று விலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்த செய்தியும் நிலத்திற்கு எல்லைகளும் கூறப்பட்டிருக்கின்றன. முடிகொண்ட சோழப் பேராறு, சோமனாத தேவ வாய்க் கால் ஆகியவை எல்லைகளாக கூறப்பட்டிருக்கின்றன. முதல் வரியின் இடையி லும், கடையிலும் சில பகுதிகளும்; இரண்டாம் வரியின் முதலிலும், இடையிலும் சில பகுதிகளும்; மூன்றும் வரியின் இடையிலும், கடையிலும் சில பகுதிகளும் காணப்படவில்லை. கல்வெட்டு முடிவு பெறவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமெற்க்[கீர்த்தி]க்கு மேல் கோமாறு பன்மர் த்ரிபுவ னச்சக்ரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு உம்உ வதின்[1] எதிராமாண்டு இருபத் . . . .[2] அபர வக்ஷத்து ப்ரதமை யும் திங்கள்க் கிழமையும்(யும்) பெ[ற்ற] . . .[3] பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடைய நாயனர் திருக்கோயில் ஆதிச ண்டேஸ்வர [பெருவிலையாக] அருமொழிதேவ வளநாட்டு மங்கலங் கழையான் தேவர் கண்டனேன் நிலைவிலை ப்ரமாணம் பண் ணிக்குடுத்த பரிசாவது குலோத்துங்க சோ . . . .[4]

2 விலை கொண்டுடைய இவர் பக்கல் நான் ஸ்ரீதனம் பெற்றுடை யேனன நிலத்து இற்றை நாளால் இவற்க்கு நா[ன்] [விற்ற

(திருப்பவும்)

நிலம்] கரு இந்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை . . . .[5] லை முடி கொண்ட சோழப்பேராற்றுக்கு வடக்கும் மேல்பாற்க்[கெல்லை] அகவாய்ப் படுகைக்கு கிழக்கும் வடபாற்க்கெல்லை சோமனு தேவ வாய்க்காலுக்கு தெற்கும் ஆக [இன்னு]ன் கெல்லை இசைந்து நடுவு உட்ப்பட்ட மிகுதிக்குறைவு உட்ப்பட வரும் அறை மாவும் [அக]வாய்ப்படுகையும் உட்பட்ட ரு நில . . . . இன்னுயனுர்க்கு . . . .[6]

3 எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றுடு நற்க்காசினுல் ட கூ இப் பணம் அறுபதும் ஆவணக்களரியே காட்டெ . ற்றகைய்ச் செல்வறக்கைய்க் கெ . . . .[7] தன் உடையார் திருவாஞ்சிய முடைய நாயனுர் கோயில் அதிசணெ[ஸ்வர தேவர் கன்மிக ளுக்கு மங்கலங்கழையான் தேவர்][8] கண்டனேன் [உ ஃ]கம் பண்ணின நிலம் உட்ப்பட இன்னில[ன்] மூவேலிக்கும் ஹ்ரமாணம் பண்ணிக் குடுத்தேன் [உடையா]ர் திருவாஞ்சிய முடையார் கோயில் ஆதிசணெஸ்வர தேவர் கன்மிகளுக்கும் [மங்க]லங்கழையான் தேவர் கண்டனே இப்படிக்கு இவை மங்கலங் [கழையான் தேவர் கண்டனேன் என்எழுத்து][9]

---

1. வதின் என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

2, 3, 4, 5, 6, 7. புள்ளியிட்டுள்ள இவ்விடங்களில் உள்ள எழுத்துக்கள் பிற்காலத்தில் கட்டிய கட்டிடப் பகுதிக்குள் மறைந்து விட்டன.

8, 9. கட்டிடத்திற்குள் மறைந்த இப்பகுதிகளை மேற்கண்டவாறு ஊகித்து கொடுக்கப்பட இயன்றதால் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 225 of 1938 / 39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |
| மன்னன் | பராக்கிரம பாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தட்சிணாமூர்த்தி சந்நிதியின் பின்புறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : பராக்கிரமபாண்டியனின் ஆட்சி காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டில் துந்துபீஸ்வரர் கோயில் இறைவியாகிய வேயன் தோழியாருக்கு அமுதுபடிக்கு விட்ட நிலம் பற்றிக் கூறப்படுகிறது. கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்கரவதிகள் ப[ரா]க்கிர[ம பா]ண்டிய தேவர்[க்கு] யா[ண்டு] . . . . .
2 இயதி நா . . . . . குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனை[யூர் நாட்டு திருவா]
3 ஞ்சியமுடையனுடையநா[ர்] கோயிலி[ல்]எழுந்தருளி இருக்கும்[து]ந்து மீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் நடுவில்
4 மண்டபத்து பிறையூர் ருடையார் ஸ்ரீஅழகினைப் பெ
5 ருமாள் நாச்சியார் வேயன்[தோழியா]ர்க்கு அ[மு]து படி
6 . . . து விட்ட ரூ நியும் [க]ப்பலுடையான் குள
7 . . . யிலி வெட்டு கையில் இந்நிலத்துக்கு விட்ட இப்ப
8 ழி அஞ்சி வதிக்கு மேக்கு இராசகெம்பீரன் வாய்க்காலுக்கு . .
9 தேவதா[ன]ம் விட்டு இந்[த] [னையநார்க்கு] ஊர் நத்தம் விட்ட ரூ உ சதி
10 [ரத்]தில் . . . . . . . . . இதந் மேற்கு . . . .

(திருப்பவும்)

11 . . . . . [சிறு]வேளுடை[யார்]தேவதானம் ரூ ப . ரூ வு நீக்கி ரூ
12 இதன் மேற்கு . . ரூ ப உ பழியஞ்சிவதிக்கு மே . . . . .
13 . . மேற்க்கு . . . . . விட்டு புரவரி உசா க்கு தெற்க்கு உச
. சதிர
14 . . . இறை[யி]லி நீக்கி ரூ உ உ வூ இதன் மேற்க்கு தடி
15 விளை நிலத்து . . . . . . . . . . இறையிலி நீக்கி ரூ உம
16 சதிரம் தடி ரூ ங . . . . . . . . . . . . .
17 . . . . க்கு ரூ பத்து ரூ . . . . ஆக ரூ ச இ
18 . . . . கிழ[வன்] எழுத்து விசலூ . . . .
19 இவை . . . . . . . . . மங்கலமுடையா
20 . . . . . வாய்க்காலுக்கு . . . . சிறுநாய . .
12 . . . . இ[ப்பெரு நான்கெல்லை]யுள் நடுவு பட்ட நிலம்
22 . . . . [கோ]யில் ஆதிசண்
23 . . . . . . . . . . . . . . . . . . .
24 . . . . டைய . . . ஞுக்கு நடுவெ . . .
25 . . . . நாயஞ[ர்]கு . . . . ரு
26 . . . . க்கு . . . . .
27 த்து . . . . . ரு நாய . . .
28 . . . . ஆக ரூ . . . ட்ட . . . .
29 தெற்குங் கூத்த . . . . ாயஞ . . .
30 உ . . . பைய . . . திருவி
31 . . . . நாயஞக . . . . நடுவு
32 . . . . திரு . . . . க்கு . . ரு
33 த்து . . . . ரு . . நாய . .
34 . . . . ஆக ரூ க . . . . . . படப
35 தெக்குங் கூச்ச . . . . ாயஞ
36 எடுப்ப . . . லரூ வேலி . . . இதில் திரு
37 . . . . . . . . . . யராதி
38 . . . . . . . . . . . கு
39 . . . . . . . . . நாலு
40 . . . . . . . . . . . . . ரூ மது அராவ
41 . . . . . . க்கு ஆ . . . ய . . . வ
42 . . . . . . . . . . . . . . . ட்டு
43 ரூ . . . . . . . . வ . . . . மேற்க்
44 இந் . . . . . . ஞ . . . ரை . . . ம் திரு
45 முத . . . . . ன . . . . . விட்ட
46 இந் . . . . . . யஞ . . . க்குபு
47 திருந . . . . . . . . க்கு மேற்கு சி . . . . விதிக

48 ட . . . . . . . . . . . ழி . . . . . . . ம்மறும்

49 ர்தேவகன்மிகளோம் . . . . கோ . . .

50 வேயன் தோளியர்க்கு திருபணிகைகு உ . . . மைக்கு இக்கோயில் கணக்கு புதுக்குடையான் எழுத்து

51 புதுக்குடையான் எழுத்து தேவகன்மி பொன்ன . . . பட்டன் எழுத்து சேதிராய பட்டன் எழுத்து திருவாஞ்சிய பட்டன் எழுத்து

52 சொல்லாச பட்டன் எழுத்து போயன் . . . பட்டன் எழுத்து சிமயேசுர பட்டன் எழுத்து மாடா பக்கயம் வாசற்படியான் எழுத்து

53 மாடா பக்கயம் நந்த மாருகன் எழுத்து

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
10427
LIBRARY.

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவாஞ்சியம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பாண்டியர்
மன்னன் : வீரபாண்டியன்

ஆட்சி ஆண்டு : 20 ஆவது
வரலாற்று ஆண்டு : கி.பி. 14 ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 11

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்று தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரபாண்டியன் காலத்தில் திருவாஞ்சியமுடையநாயனார் கோயில் ஆதி சண்டேசுவரதேவகன்மிகளுக்கு (கோயில் நிர்வாகத்தினர்), சிறுபன்றூர் கிழவன் அழகிய நாயகன் திரும்பலப் பெருமாள் என்பவன் நிலம் விற்றுக் கொடுத்த செய்தியும், விற்கப்பட்ட நிலத்திற்கு எல்லையும், பத்தாறு, திரிபுவனசுந்தரன் மயக்கல், உட்சிறுவாய்க்கால் ஆகியவைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டு :

1 [திரிபுவன]சக்ரவர்[த்திகள்] ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு உ௰ஆவது இஷப நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரயோதசி

2 [யும்] (திங்கட்கிழமை)மயும் பெற்ற சித்திரை நாள் குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சிய மு[டைய]

3 [நாய]னார் கோயில் ஆதிசண்டேஸ்வரதேவகன்மிகளுக்கு இந்நாட்டு சிறுபுன்றூர் கிழவன் அழகிய [நாயக]ன் [திருவம்பலப் பெருமாள்]

4 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

5 [சென்]ஞதன் வாய்[க்காலு]க்கு [கிழ]க்கு நான் விற்ற [கீழ்பா]ற்க் கெல்லை ஆலூர் பற்றுக்கு மேற்கும் தென் பாற்கெல்லை

6 இந்நாயனார்க்கு நான் திருநாமத்துக்காணியாக விற்ற விளல் லாற்றங்கரைப்படுகைய்க்கு, வடக்கும் மேல்பாற்கெல்லை இவ்

(திருப்பவும்)

7 லூர் எல்லே வாய்க்குக் கிழக்கும் வடபார்க்கெல்லே இந் நாயனர் திருநாமத்துக்காணி திரிபுவன சுந்தரன் மயக்கலுக்கும் . புத்தாற்

8 றுக்குப் தெற்கும் இந்நான்கெல்லேயுள் நடுவுபட்ட ரூ ஞகூ . . . ஊட இதன் மேற்க்கு உட்சிறு வாய்க்காலுக்கு தெற்க்கு ஒடை

9 ரூ ரூ ஊ நாற்றங்[கால்] ரூ மடை[க்கு] இதன் மேற்கு . . ல்லே

10 க்கு . . . . . . . . . ம் பனந்திடல் . . . . க்கு வடக்கும் திரிபுவன சுந்தரன் மயக்கிலி

11 ஞல் ரூ வஉ . . க்கு ரூ உ ஞத ப சூக்கு ப்ரமாணப்படி . . . . . . இப்பணம் நூற்று இருபதும் ப[ற்]றிக் கொ[ண்டோம்]

12 இவை சிறுபுன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் எழுத்து இப்படி அறிவேன் காங்கேய

13 னெழுத்து இப்படி அறிவேன் விசுவேசுரதேவன் திருவாஞ்சிய முடையான் எழுத்து இப்படி அறிவேன்

14 . . . . . . . . . . . . . . . . . . . யான் எழுத்து இப்படி அறிவேன் வேளூர் கிழவன் எழுத்து . . . .

15 . . . . [இப்பண]ம் நூற்று இருபதும் உள்ளூர் வியாபாரிகளில் கருப்பூருடையார் திருவம்பல [பெருமாள் காட்சியாக]

16 ஏற்றுக் கொண்டமைக்கு சிறுபுன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் எழுத்து

17 காங்கேயன் எழுத்து உ

மாவட்டம் : தஞ்சை

வட்டம் : நன்னிலம்

ஊர் : திருவாஞ்சியம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 12

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்று தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : கல்வெட்டின் ஆரம்பம் கிடைக்க வில்லை. திருவாஞ்சியமுடைய நாயனார் கோயிலுக்கு சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் என்பவன் திருநாமத்துக்காணியாக நிலம் விற்றுக் குடுத்து உள்ளூர் வியாபாரிகளில் கருப்புடையார் திருவம்பலப் பெருமாள் என்பவன் காட்சியாக பணம் ஐம்பது நிலத்திற்கு விலையாக பெற்றுக்கொண்ட செய்தி கூறப்பட்டிருக்கிறது. இதில் நால்வர் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . குடுத்த படு . . . .

2 க்கு மேற்கும் தென்பார்க்கெல்லே விளல்லாற்றுக்கும் வாரகாலுக்கு வடக்கும் மேல்பார்க்கெல்

3 லே இந்நாயனூர்க்கு நான் திருநாமத்துக் காணியாக விற்றுக் குடுத்த நிலத்துக்குக் கிழக்கும் வடபார்க்கெல்

4 லே விளைநிலத்துக்குத் தெற்கும் . . . . . . . உட்பட இந்நாந் கெல்லேயுளகப்பட்ட . . . . . . .

5 . வுட்பட்டபடி ரூ . . . ஒன்றேகாலுக்கும் அன்றுடு நற்காசினல் ப ருய இப்பணம் ஐம்பதுக்கும் உள்

6 ளூர் வியாபாரிகளில் கருப்புடையார் திருவம்பலப்பெருமாள் காட்ச்சியாகக் கைக்கொண்டு ப்ரமாணம் பண்

7 ணிக் குடுத்தேன் இவை சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப்பெருமாள் எழுத்து இவை சிறுமன்றூர்

8 கிழவன் விச்வேசுர தேவன் திருவாஞ்சியமுடையான் எழுத்து இப்படி அறிவேன் விசலூர் கிழவன்

9 தில்லே நாயகனே இப்படி அறிவேன் மணற்குடையான் சவரிப் பெருமாளேன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 23–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1264–ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 74 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதல் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் 2-ஆம் திருச்சுற்று வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டில் கூறப்படும் மன்னன் முதல் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். இம்மன்னனது இருபத்தி மூன்றுவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மிகளுக்கு (கோயில் நிர்வாகத்தினர்) சிறுமன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையான் என்பவன் நிலம் விற்றுக் கொடுத்து நிலவிலை பிறமாணம் செய்து கொண்ட செய்தியும் நிலம் விற்ற பணத்தினை வியாபாரி சூரியதேவன் காட்சியாக பெற்றுக் கொண்ட செய்தியும் கூறப்படுகின்றது. பிற கல்வெட்டுக்களிலும் (8, 23) இதே வியாபார்ரி காட்சியாக பணம் பெற்றுக்கொண்டசெய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 கோற்சடைய பன்மரான திருபுவனச[க்]கரவத்திகள் ஸ்ரீ[சுந்த]ர பாண்டிய தேவர்க்கு[யாண்]டு

2 [உ ங] இருபத்து மூன்றுவது இஷபநாயற்று பூற்வ பஷ[த*]து [பவ]தமியும் திங்க(க)ள் கிழமையும பெற்ற செயங்

3 [கொண்ட] குலோத்துங்கச் சோழ வள நாட்டுப் பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சிய முடையார் கோயில் ஆதிசண்டே

4 சுர தேவகன்மிகளுக்கு வேளா நாட்டு சிறுமன்றூர் கிழவன் வி . . தரதேவன் திருவாஞ்சியமுடையா[ன்] இன்னில விலை

5 பிறமாணம் பண்ணி குடுத்த பரிசாவது சிறுமன்றூரில் என் . . . . . . . . . . . . . என்று பேர் கூவப்பட்ட க்ருஷ்ணபட்டன் . . . .

(திருப்பவும்)

6 ல ரூ வ . . . . . . . ரூ வறு இதன் கிழக்கு சூடிகல் ரூ வ

7 ஆக ரூ ிவறு . . . . . . . . எழுமாவரைக்கும் கீபாக்கெல்லை . . . . . . . . . . பனங்குளத்துக்கும் மேற்க்கு

8 [மேல்] பாற்கெல்லை செ[ன்]றதன் வாக்காலுக்கு வடக்கு மேர் பார்க்கெல்லை . . . . . . . . . . கிழக்கும் வடபாற்கெல்லை திருநாமத்துக்காணி

9 க்கும் [இ]ன்னந் கெல்லையுள் நடுவுபட்ட மிகுதி குறைவு உள்ப[ட்ட] . . . . . . . இன்னிலம் எழுமாவரைக்கும் எம்மிலிசைந்த

10′ விலை[யி*]னல் பொருள் அன்றூடு நற்காசுனல் ㄷ சு இப்பணம் ஞ . . . . . . . . . . . . . க்கு விற்று . . . . . . . . . சூரியதேவன் காட்சியாகக் குடுத்தோம்

11 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

12 கொண்டு விற்று விலை பிறமாணம் பண்ணி குடுத்தேன் உடையார் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆ[திசண்டேசுவர] தேவகன்மிகளுக்கு

13 சிறுமன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையானேன் இவை திருவாஞ்சியமுடையான் எழுத்து இப்படி அறி[வேன்] சிறுமன்றூருடையான் அழகிய நாயன் எழுத்து து[ற்]ச்சடை யான் சூரியதேவன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 67 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஜடாவர்மன் வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் தென்புறத் திருச்சுற்று மாளிகையின் குமுதப்பண்டயில் உள்ளது.

குறிப்புரை : ஜடாவர்மன் வீரபாண்டியனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில் சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப்பெருமாள் என்பவனிடமிருந்து திருநாமத்துக்காணியாக நிலம் விலைக்கு வாங்கிய செய்தியும், நிலத்திற்கு எல்லைகளும் கூறப்பட்டிருக்கின்றன. கல்வெட்டு முழுதும் கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்ச்சடப்பன்மர் த்ரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீவீர பாண்டிய தேவற்க்கு யாண்டு உ௰உ வது[1] இருபத்திரண்டா வது ரிஷப நாயற்று பூர்வபக்ஷத்து த்ரயோதசியும் புதன் கிழமையும் பெற்ற சித்திரை நாள் குலோத்துங்க சோழவள நாட்டு வேளாநாட்டு சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப்பெருமாள் பக்கல் பாக்கத்து திருநாமத்துக் காணியாக விலை கொண்ட நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை ஆலூர்ச் சுற்றுக்குலைக்கு மேற்க்கு தென்பாற்கெல்லை இவர் பக்கல் முன்னால் திருநாமத்துக்காணி[2] . . . . . . . . .

---

1. வது-என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.
2. கல்வெட்டு இத்துடன் நின்றுவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13, 14–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 231 of 1938/39 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| மன்னன் : | வீரபாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்று வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரபாண்டியனின் பதின்மூன்றுவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவரதேவர்கன்மிகளுக்கு (கோயில் நிர்வாகத்தினர்) சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் என்பவன் நிலம் விற்றுக் குடுத்து கருப்பூருடையார் திருவம்பலப் பெருமாள் காட்சியாக இரு நூற்று முப்பது காசுகள் பெற்றுக்கொண்டு நிலவிலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. விற்றுக்குடுத்த நிலத்திற்கு எல்லைகள் கூறும்போது செந்நாதன் வாய்க்கால், திருப்பாங்குளம், எலுமிச்சங்குண்டு (நிலத்தின் பெயர்), தாமரை ஓடை, ஊமையார் ஓடை ஆகியவைகள் குறிப்பிடப் படுகின்றன.

கல்வெட்டு :

1 உடையார் ஸ்ரீ த்ரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩ பதின்மூன்றுவது ரிஷப நாயற்று பூர்வபக்ஷ

2 [பக்ஷத்து] [அட்டமியும்] திங்கட்கிழமையும் பெற்ற சோதிநாள் குலோத்துங்க சோழவள நாட்டு பனையூர் நாட்டு உடையார்

3 திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுர தேவர் கன்மிகளுக்கு வேளார் நாட்டு சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன்

4 திருவம்பலப் பெருமாளேன் [நிலவிலை] ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது சிறு[மன்றூரி]ல் என் காணியான நிலத்து விற்று

(திரும்பவும்)

5 க்குடுத்த நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை [திரங்]குடையார் நிலத்துக்கும் வதிக்கும் மேற்கும் தெ[ன்]பாற்கெல்லை சென்நாதன் வாய்க்காலுக்கு

6 வடக்கும் மேல்பாற்கெல்லை கழும[டையா]ன விக்கிரமசோழன் குற்றலத்து நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு

7 த்தெற்கும் இன்னான்கெல்லையுள் திருபாங்குளமும் தி. . . . . ல் ரூ கல்லி எலுமிச்சங்குண்டு ரூ ௨ ச தாமரை ஓடை ரூ ரு ப ஊமையார்

8 ஓடை ரூ ஐ இதன் மேற்கு தடிபலவினுல் ரூ . . . . . ஆக ரூ ந . . இன்னிலம் மூன்றே ஆறுமாவுக்கு எம்மிலிசைந்த விலை

9 பொருளன்ருடு நற்காசினுல் ப உாநய இப்பணம் இருநூற்று முப்பதுக்கும் விலைக்கற விற்றுப் பொருளற கருப்புடையார்

10 திருவம்பலப் பெருமாள் காட்சியாக ஏற்றிக் கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தேன் உடையார்

11 திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மி களுக்கு சிறுபுன்றூர் கிழவன் அழகிய நாயன்

12 திருவம்பலப் பெருமாளேன் இவை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பெருமாள் எழுத்து

13 இப்படி அறிவேன் திரங்குடையான் அழகிய சிற்றம்பலமுடையான் எழுத்து இப்படி அறிவேன் சிறுபுன்றூர் கிழவன்

14 திருவாஞ்சியமுடையான் எழுத்து இப்படி அறிவேன் விசலூர் கிழவன் தில்லை நாயகன் எழுத்து இப்படி அறிவேன் வட கண்ண ம

15 ங்கலமுடையான் அழகிய சிற்றம்பலமுடையான் எழுத்து உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1227-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 76 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் 2-ஆம் திருச்சுற்றுவடசுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டு முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்ததைச் சேர்ந்ததாக இருக்கலாம். பதினொன்றாவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேசுவரதேவகன்மிகளுக்கு சிறுபுன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் என்பவன் நிலம் விற்று இருநூற்றைம்பது காசுகள் கருப்பூருடையார் திருவம்பலப்பெருமாள் காட்சியாக பெற்றுக் கொண்டு, நில விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது.

கல்வெட்டு :

1 கோமாற பன்மர் த்ரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௧ பதினொன்றாவது கும்ப

2 நாயற்று பூர்வபக்ஷத்து ௰௩ தியதி திங்கட்கிழமையும் பெற்ற மூலத்து நாள் குலோத்துங்க சோழவளநாட்டுப் பனை

3 யூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதி சண்டேசுர தேவர்கன்மிகளுக்கு வேளாநாட்டு

4 சிறுபுன்றூர் கிழவன் அழகியநாயன் திருவம்பலப் பெருமாளேன் நில விலைப்ரமாணம் பண்ணிக்குடுத்த பரிசா

5 வது . . . . சிறுபனவில் என்காணியான நிலத்து திருவம்பல விளாக

6 ம் என்று பேர் கூவப்பட்ட ரு௲கவ இதன் மேற்க்கடசல் ரு௲கப .[1] படுகைக்குழி ரு[க] ஆக இன்னிலத்துக்கு கீழ்பாற் கெல்

(திருப்பவும்)

7 லை இன்னுயனூர் திருநாமத்துக்காணிக்கு மேற்கும் தென்பாற் கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு வடக்கும் மே

8 மல் பாற்கெல்லை இன்னுயனூர் திருநாமத்துக் காணிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை புத்தாறுன குலோ

9 த்துங்க சோழப் பேராற்றுக்குத் தெற்கும் நடுவுட்பட்ட ரூ வப உம் படுகைக் குழி நூா ம் இங்கு விட்டுப் பவழத்தா

10 ல் என்று பேர் கூவப்பட்ட ரூ . [2] தென்மேற்கு தடி பலவிஞல் ரூ ஐகுபத்து ஆக நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை இன்

11 னுயநார் திருநாமத்துக் காணிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சிறுபுன்றூர் கிழவன் வீ(ர)கேசுர தேவர் திருவா

12 ஞ்சியமுடையார் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை இன்னுயனூர் திருநாமத்துக்காணிக்குக் (கிழக்கு)க் கிழக்கும்

13 வடபாற்கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு தெற்கும் ஆக ரூ கபப . . . . ரூ கவநூம் படுகை குழி வறு இன்னில மு

14 ன்றெ எழுமாவரையும் படுகைக்கும் அஞ்நூற்றுக்கும் எம்மிலிசைந்த விலைப் பொருளன்றுடு நற்காசிஞல் ㄷ உாருய

15 இப்பணம் இருநூற்றைம்பதுக்கும் விலைக்குற விற்று பொருளற கருப்புடையார் திருவம்பலப் பெருமாள் காட்சியாகக் கைக்கொ

16 ண்டு விற்று விலை ஞ்ராணம் பண்ணிக் குடுத்தேன் உடையார் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டே

17 சுர தேவர்கண்மிகளுக்கு சிறுபுன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாளேன் இவை சிறுபுன்றூர் கிழவன்

18 அழகிய நாயன் திருவம்பலப் பெருமாள் எழுத்து இப்படி அறிவேன் சிறுபுன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையான் எழுத்து உ

---

1, 2 புள்ளியிடப்பட்டுள்ள இவ்விடங்களில் நிலத்தின் அளவு குறியீட்டால் கொடுக்கப் பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 12–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13, 14-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 75 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |
| மன்னன் : | மாறவர்மன் சுந்தரபாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் 2–ஆம் திருச்சுற்று வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மாறவர்மன் சுந்தரபாண்டியனின் பன்னியிரண்டாம் ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடைய நாயஞர் கோயில் ஆதிசுண்டேசுவர தேவர்கன்மிகளுக்கு வடகண்ண மங்கலமுடையான் அழகிய சிற்றம்பலமுடையான் என்பவன் சிறுபுன்றூரில் உள்ள 'அன்பில் பிரியாதான்' என்ற பெயருடைய நிலத்தை விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்து கருப்புடையார் திருவம்பலப் பெருமாள் என்பவர் காட்சியாக பணம் நூற்றுஎழுபது பெற்றுக் கொண்ட செய்தி கூறப்பட்டிருக்கிறது. பிற கல்வெட்டுக்களிலும் கருப்புடையார் திருவம்பலப் பெருமாள் என்பவர் (11, 12, 15, 16, 17, 19) காட்சியாக நிலம் விற்றவர்கள் பணம் பெற்றுக் கொண்டதாக கூறுப்படுகிறது.

கல்வெட்டு :

1 கோமாற பன்மர் த்ரி[ஹுவன] சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய [தேவர்க்கு] யாண்டு யஉ பன்னிரண்டாவது மீனநாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற

2 சோதிநாள் குலோத்துங்க சோழவளநாட்டுப் பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடைய நாயஞர் கோயில் ஆதி சண்டேசுர தேவகன்மிகளுக்கு வடகண்ணமங்கலமுடையான்

3 அழகிய திருச்சிற்றம்பலமுடையானேன் நிலவிலைப் ப்ரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது . . . . . . சிறுபுன்றூரில் என் காணியான நிலத்து விற்றுக் குடுத்த அன்பில் பிரியாத[ான்]

(திருப்பவும்)

4 என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சிறுபுன்றூர் கிழவர் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை உட்சிறு வாய்[க்*]காலுக்கு தெற்கும் மேல்பாற் கெல்லை சிறுமன்றூர் வதிக்கு கிழ

5 க்கும் வடபாற்கெல்லை புத்தாறுன குலோத்துங்க சோழப் பேராற்றுக்கு தெற்கும் நடுவுபட்ட தடிபலவினுல் ரூ ஊ இன்னிலக்காலும் படுகைக்குழி றூா இங்கு விட்டு

6 மேற்கு . . . . . . . . . . . . . . . . . . . என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை சிறுபுன்றூர் . . . . மேற்கும் தென்பாற்கெல்லை உட்

7 சிறு வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை சிறுபுன்றூர் கிழவன் நிலத்துக்குக் கிழக்கும் குலோத்துங்க சோழ [பேராற்று] க்குத் தெற்கும் தடிபலவினுல்

8 ருகவும் படுகை கு ளரூ .[1] ஆக ரூ . . வியும் படுகை கு ஊ ரூ . இன்னிலம் இருவேலியும் இப்படுகைக்குழி ஆயிரத்து இருநூற்றைம்பதுக்கும் எம்மிலிசைந்த

9 விலைப் பொருளன்றுடு நற்காசினுல் ப ாளய இப்பணம் நூற்று எழுபதுக்கும் விலைக்குற விற்று பொருளறக் கருப்புடையார் திருவம்பலப் பெருமாள்

10 காட்சியாக பற்றிக் கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தேன் உடையார் திருவாஞ்சியமுடையான் கோயில் ஆதி சண்டேசுர

11 தேவர் கன்மிகளுக்கு வடகண்ணமங்கலமுடையான் அழகிய திருச் சிற்றம்பலமுடையானேன் இவை வடகண்ண மங்கலமுடையான் அழகிய திருச்சிற்றம்பல

12 முடையான் எழுத்து இப்படி அறிவேன் சிறுபுன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையான் எழுத்து இப்படி அறிவேன் விசலூர் கிழவன் தில்லை நாயகன் எழுத்து இப்படி அறிவேன் வட

13 கண்ண மங்கலமுடையான் அழகிய சிற்றம்பலமுடையான் எழுத்து உ

---

1, புள்ளியிடப்பட்டுள்ள இவ்விடத்தில் நிலத்தின் அளவு குறியீட்டால் கொடுக்கப் பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13. 14–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 73 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |
| மன்னன் : | வீரபாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்று தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரபாண்டியனின் ஆட்சி காலத்தில் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் கன்மிகளுக்கு அழகியநாயன் திருவம்பலப் பெருமாள் என்பவன் நிலவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. கல்வெட்டின் ஆரம்ப பகுதி மட்டுமே உள்ளது. பிற பகுதிகள் காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவ[ன] சக்ரவத்திக[ள்] வீரபாண்டிய தேவ[ற்*]க்கு . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .

2 துலா நாயற்று சபர பக்ஷத்து த்ரயோதசியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற அத்த . . . .

3 குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடை[யார் கோ]யில் ஆதிசண்டேஸ்வர

4 தேவகன்மிகளுக்கு இந்நாட்டு அழகியநாயன் திருவம்பலப் பெருமாளேன் [நில] விலை ப்ரமா[ணம்] . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | கோச்சடையவர்மன் ஸ்ரீ வல்லபபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்று கிழக்குச் சுவர் வாயிலின் வடபுறம் உள்ளது.

குறிப்புரை : ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் திருவமுதுபடிக்காக (வழிபாட்டுச் செலவிற்காக) அவ்வூர் சபையோரால் நிலம் விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. சபை அங்கத்தினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். நிலத்திற்கு எல்லைகள் கூறப் பட்டிருக்கின்றன. கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்சடையபன்மர் த்ரிபுவந சக்ரவத்திகள் [ஸ்ரீ]வல்ல தேவர்க்கு யாண்டு ரு ஆவது

2 குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடைய நாயனார் . . . . . . .

3 ஸபையாரோம் மனை விலை [நில] விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் . . . இற்றை நாள் இந்நாயனார்க்கு திருவமுது

4 முதல் 9 வரையுள்ள வரிகள் சிதைந்து காணப்படுகின்றன.

10 . . . . . . குறைவு . . . . . .

11 . . வக்குழைந்தா . . .

12 . . . . . . . . . .

13 . று . . . . . . . . . .

14 உஸம் ஸ்ரீ . . . மங்கலத்து

15 னி காவதிக்கு பெ . . . . றுக்கும் காலுக்கு வடக்கு

16 ச . . . கு . . . வாக்காலுக்கு வடக்கு . . . .

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவாஞ்சியம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : 15, 16-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 20

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் 2-ஆம் திருச்சுற்று தென்புறச் சுவர் கீழெல்லையில் உள்ளது.

குறிப்புரை : விபவ வருஷம் பங்குனி மாதத்தில் இராகவுன் பிள்ளை என்பவரின் அதிகாரியான தாமல் அப்ப நாயன் என்பவன் மண்டபம் கட்டிய செய்தி கூறப்பட்டிருக்கிறது.

கல்வெட்டு :

1 விஙவ வருஷம்
2 பங்குனி மாதம்
3 இராகவ[ந்]பிள்ளை
4 அதிகாரி தாமல் அப்
5 ப நாயன் பண்ணு
6 விச்சமண்டபம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 21–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1274–ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 232 of 1938 / 39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஜடாவர்மன் வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோவில் இரண்டாம் திருச்சுற்று வடபுற வெளிச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரபாண்டியனின் இருபத்தி ஒன்றுவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேசுவரதேவகன்மிகளுக்கு சிறுமன்றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப்பெருமாள் என்பவன் வடகண்ணமங்கலத்திலுள்ள தன் காணியான நிலத்தை விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1 கோ[ச்*]சட பன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் [ஸ்ரீவீர பாண்]டிய தேவர்க்கு யாண்டு உயக இருபத்தொன்றுவது[1] கன்[னி] நாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெ

2 பற்ற சோதிநாள் குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சிய முடையார் கோயில் ஆதிசண் டேசுவர தேவ கன்மிகளுக்கு . . . . . சிறுமன்

3 றூர் கிழவன் அழகிய நாயன் திருவம்பலப் பெருமாளேன் நில விலை பூரணம் பண்ணிக் குடுத்த பரிசாவது வடகண்ணமங்க லத்து என் காணியான [நிலம்] இற்றை

4 நாளால் விலைக்குடுத்[த] நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சிறுபுன்றூர் கிழவன் வீரகேசுர தேவன் திருவாஞ்சியமுடையார் பக்கல் திரு நாமத்துக் காணியாக . . . . . நிலத்துக்கு மேற்கு . . . . . . கன் மேற்கு

(திரும்பவும்)

5 திடிசல் ரூ கப இதன்மேற்க்கு தடிசல் ரூ வப இதன் மேற்கு
தடிசல் ரூ மேற்கு . . . . . . . . . குலோத்துங்க சோழப் பே

6 ராற்றுக்கு வடக்கும் மே[ம]ல்பாற்கெல்லே திருவதிக்கு[ம்] வட
கண்ண மங்கலத்து . . . . திருநாமத்துக்காணி . . . . . . . .
திருவாஞ்சிய . . . . வாய்க்காலுக்கு தெற்கும் ஆ

7 . . . . . . ன்கெல்லேயுள் நடுவுபட்ட தடி[வேலி]யிஞல் ரூ ச
. . . . . . . . மே . . . . . . . . . . . . . நாமத்துக்காணி . . . . .
ரூ வ ப[த்தி]ன் மேற்க்கும் . . . . . . ஆகரூ . . இன்னிலம்
அரைக் . . . . .

8 . . . . . . . கும் தென்பாற்கெல்லே திருவாஞ்சிய தேவன் வாய்க்
[காலுக்கு] . . . . . . . . . . . . மேல்பாற்கெல்லே திருவாஞ்சிய
முடையார் திருநாமத்துக்காணியான நிலத்துக்கும் கிடந்த . .
கிழக்கும் வடபாற்கெல்லே[அரை]

9 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . ஆக இன்ஞன்கெல்லேயுள் நடுவுட்பட்ட
ரூ இ ச ஆ . . .

10 க ரூ உ . இன்னிலம் இரண் . . . . . . . . . காணிக்கு மிகுதிக்
குறைவு உட்பட . . . . . . . . . . . . . . . . விலேப்பொருளன்
ஞடு நற்காசு இந்நில[ம்] . . . . . . . . . வடகண்ணமங்கலத்து
. . . . . . . . . . . . . . . . . . . .

11 அறுபதுக்கும் விலேக்கற விற்றுக்குடுத்த னிலம் . . . . . . . . .
. . . . . . . . . . . பெருமாள் காட்சியா[க] கோயில் . . . .
. . . . . . . . . . திருவாஞ்சியமுடையார்

12 ஆதிசண்டேசுரதேவற்க்கு . . . . . . திருச்சிறு . . . . கம்பன்
அழகிய நாயன் . . . . . திருவம்பலப் பெருமாள் எழுத்து
இப்படி [அறிவேன்] வேண்

13 திரங்குடையான் காங்கேயன் எழுத்து இப்படி அறிவேன் . . . .
. . . . . திருவாஞ்சியமுடையான் இ . . . . . . யூரன்
எழுத்து . . . . . . விசலூர் கிழவன் . . . . . உடையான்
எழுத்து

14 இப்படி அறிவேன் வடகண்ண மங்கலமுடையான் அழகிய
திருச்சி[ற்றம்பல] [முடையான்] எழுத்து இப்படி அறிவேன்
கொற்ற[ங்] குடையான் . . . . . யான எழுத்து

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 232 of 1938/39-ல் 23 எனப் கூறப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 23–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 233 of 1938/39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஸ்ரீ வீரபாண்டியதேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோவில் இரண்டாம் திருச்சுற்று வடபுற வெளிச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : வீரபாண்டியனின் இருபத்து மூன்றாவது ஆட்சியாண்டில் திருவாஞ்சியமுடையார் கோயில் ஆதிசண்டேசுரதேவர் கன்மிகளுக்கு உத்தரங்குடையான் அழகிய திருச்சிற்றம்பலமுடையான் என்பவன், சிறுபுன்றூரில் தன் காணியான நிலத்தை விற்றுக் கொடுத்த செய்தியும், நிலத்திற்கு எல்லையும் கூறப்பட்டிருக்கின்றன. சிலர் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 கோற்[ச]டை பன்மர் திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்க்கு யாண்டு உ௰௩ இருபத்து மூன்றாவது [மீன நாயற்று]ப் பூர்வ பக்ஷத்து ஷ[ஷ்]டியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற அனுஷத்து நாள்

2 குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு உடையார் திருவாஞ்சியமுடையார் கோயில் [ஆதி]சண்டேசுரதேவர் கன்மிகளுக்கு அருமொழி தேவ வளநாட்டு உத்தரங்குடையான் அழகிய திருச்சிற்றமபலமுடையான்

3 [காங்கேயன்] இன்னிலவிலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது சிறுபுன்றூரில் என் காணியான நிலத்து வெண் காட்டு . . . . என்று கூவப்பட்ட நிலத்துக்கு வடபாற்கெல்லை குலோத்துங்க [சோழ*] வதிக்குத் தெற்கும் தென்பாற்கெல்லை

4 சிறுபுன்றூர் கிழவர் திருவாஞ்சியமுடையார் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மே . . . . . . . . மேற்கும் வடபாற

(திருப்பவும்)

கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு தெற்கும் ஆக இன்னான்
கெல்லை நடுவுட்பட்ட ரூ . . . இன்னிலம் . . . .

5 லுக்கும் எம்மிலிசைந்த விலைப் பொருளன்றாடுநற்காசினால் விலை
. . . . . . . . . எண்பதுக்கும் விலைக்கற விற்றுப் பொருளற
. . . . யார் . . . . முடையார் சூரியதேவர் காட்சியாக . . .
ஏற்றுக் கொண்டும் [நில] விலை ஆவணம்

6 [ப]ண்ணிக் குடுத்தேன் உடையார் திருவாஞ்சியமுடையார்
கோயில் ஆதிசண்டேசுரதேவர் கன்மிகளுக்கு [களரி] குடையான்
அழகிய திருச்சிற்றம்பலமுடையான் காங்கேயனேன் இவை
[உத்தர]ங்குடையான்

7 அழகிய திருச்சிற்றம்பலமுடையான் காங்கேயன் எழுத்து இப்படி
அறிவேன் சிறுபுன்றூர் கிழவன் திருவாஞ்சியமுடையா
னெழுத்து இப்படி அறிவேன் . . . . . . கிழவந் என்
காணியான உடையான் எழுத்து இப்படி அறிவேன்

8 வடகண்ண மங்கலமுடையான் அழகிய திருச்சிற்றம்பலமுடையான்
எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 228 of 1938 / 39 |
| மொழி : | தமிழும் வடமொழியும் | | |
| எழுத்து : | தமிழும் கிரந்தமும் | முன் பதிப்பு : | — |
| அரசு : | விஜயநகர் | | |
| மன்னன் : | ஸ்ரீகிருஷ்ணதேவராய மகாராயர் | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் நடராசர் சந்நிதியின் கிழக்குப்புற அதிட்டானப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டு கிருஷ்ணதேவமகாராயர் ஆட்சி காலத்தைச் சேர்ந்தது. இடையிடையே சிதைந்து முடிவின்றி காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ] நமஸ்துங்க [ஶிரஶ்சும்பி சந்த்ர சாமர சாரவே த்ரைலோக்ய] நகராரம்ப மூலஸ்தம்பாய ஶம்பவே ஶுபமஸ்து|| ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப் யுதய சகாப்த

2 வோறுமெல்லத்து விஷ்ணுஸ்தானம் ஶிவஸ்தானம் முதலான தேவஸ்தா நங்களு[க்கு] க்ருஷ்ணதேவ[மகா]ராயர் சோழமண்டலங் . . . . . .

3 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

4 கொண்டை வீடு, கெண்[டைபள்ளி, ராசமகேந்திரவரம்] முதலான துர்க்கங்களும் கட்டி

5 சோளமண்டலம் தேவஸ்தானம் [திருச்சிராப்பள்ளி, திருவரங்கோய் மலே] சந்தலேகை திருக்காட்டுப்பள்ளி திருநாங்கூர்

6 தலைச்செங்காடு திருப்பரங்கூர் கொங்கைத்தலே . . . . . . . திருமங்கலக்குடி திருவிசலூர் திருந்துதேவன்குடி சூரியநயினார் [கோயில்] . . . . . . .

7 பாவித்தோம் யி[ந்த ராய] ஸஹாணத்திலே எல்லா தேவஸ்தா நங்களிலும் பரிஹாஸாயநமும் பண்ணி எல்லா தேவயாந . . . . . . . . . . . . . . . . . . . . .

8 [ஸ்வதத்தாத்விகுணம் புண்யம் பரதத்தானு]பாலநம் [பரதத்தாபஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது]||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 227 of 1938/39 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | ஸ்ரீ பராக்கிரம பாண்டியன் | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோவில் சோமாஸ்கந்தர் கோயிலில் உட்புறத்தில் உள்ளது.

குறிப்புரை : துண்டு கல்வெட்டுக்கள். ஸ்ரீபராக்கிரமபாண்டியன் காலத்தைச் சேர்ந்த இக் கல்வெட்டின் முதல் பகுதி மட்டுமே கிடைத்துள்ளது.

கல்வெட்டு :

I

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பன்மர் திரிபுவன] சக்கரவர்த்தி ஸ்ரீ ட்ராக்[கிரம பாண்டிய தேவர்க்கு யாண்டு] . . . .

2 [பூர்வ] பக்ஷத்து உசகியும் வெள்[ளிக்கிழமையும்] . . . . . .

3 [குலோத்துங்க சோழ வளநாட்டு] பனையூர் நாட்டு [திருவாஞ் சியம்][1] . . . . .

II

1 . . . . . . . . . . ஷூட்டு

2 . . . . . . . . . . . . ாராயக்கு சண்

3 [கோ]யிலில் திருக்[கை]

4 [கீழ்] சிறகில் ப

5 . . . . ஸீல ஓடைக்

(திருப்பவும்)

6 க்கும் மேல்

7 குடுத்த ப . . .

8 . . . லைக்கு வு

9 மிருக்கிற

10 . . . [எ]ல்லை திரு

11 . . . குக் கிழக்கு

---

1 இக்கல்வெட்டிற் கிடையே சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகாமண்டபத் தெற்குப் புறப்பட்டிகையின் கீழ் எல்லையில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. நில விற்பனை சம்பந்தப்பட்ட கல்வெட்டாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 [ப]ண்ணிக்குடுத்தோம் . . . [கைக்] கோளற்கு முதமை விலை பேர் எழுத்[துக்]கும் திருவாஞ்சியம் தாநத்தாரோம் . . . .

2 எழுத்து திருவாஞ்சியத்து பொன்னம்பலபட்டன் எழுத்து . . . . [பட்ட]ன் எழுத்து மாடாப . . யம் பொன்னூருடையான் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 14 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 25-A |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகாமண்டபம் வடபுறச் சுவரில் உள்ளது. [துர்க்கையம்மன் கோயிலின் உட்புறம்].

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

1 ஆருவது பெற்ற உரு . . . .
2 ஆண்டார் ஆகப்பேர் . . . .
3 கற் கோயில் நட்டிக் . . . .
4 குடுத்த யெம்மில் இ . . . .
5 ல் ஆகு . . . . பார் . . . .
6 . . விலையாவதாக ஆ . . . .
7 வும் பேர் ஒன்றுக்கு . . . .
8 ல்லம் வைக்கு . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 26 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. நூற்று ஐம்பது காசுகள் பெற்றுக் கொண்டு நிலம் விற்றுக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது இக்கல்வெட்டு. இறைவனுக்குரிய வழிபாட்டு பொருள்களுக்காக நாள் ஒன்றுக்கு ஐந்து பணம் செலவு செய்யப்பட்டது என்று தெரிய வருகிறது. இக்கல்வெட்டில் சோழியதரையர் என்பவர் குறிப்பிடப்படுகிறார்.

கல்வெட்டு :

1 யான் சோழிய தரையர் . . . .
2 . . முக்கும் இந்த வகை . . . . ம் முதலை
3 கு நாங்கள் இற்றை நாள் இறுக்க . .
4 [இ]சைந்த விலைப்பொருள் அன்றாடு ந[ற்காசு]
5 [ . . . ] இப்பணம் நூற்ற[ம்] பத்து
6 ம் இதுவே விலைப்பிறமாணம்
7 படித்தரத்துக்கு நாள் ஒன்றுக்கு அ
8 ஞ்சு பணமும் பெறக் கடவர்களாக . . . . .

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவாஞ்சியம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 26-A.

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் சோமாஸ்கந்தர் சந்நிதியின் உட்புறம் மகா மண்டபத்தின் தென் புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. நிலவிற்பனை சம்பந்தப்பட்ட செய்தி கூறப்பட்டிருக்கிறது. கோயில் கணக்கு போன்றோர் கையெழுத்திட்ட செய்தியும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 டாக வந்த நெல்லும் புடவை முதலுங் . . . . . . . .
2 இப்படி சம்மதித்து விலை ஹ்ரமாண[ம் ப]ண்ணிக் [குடுத்தோம்]
3 பொலிவூட்டு கொண்ட தேவன் இராசாக்கள் . . . . . . .
4 யார் திருவாஞ்சியமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுர தேவர் . . . . .
5 இக்கோயில் கணக்க
6 ன் எழுத்து சோவ சிய
7 பட்டன் எழுத்து . . . . [கோ]
8 யில்க் கணக்குப் பருத்தியூருடையான் எழுத்து
9 [திரு] வாஞ்சிய பட்டன் எழுத்து செதிராய பட்ட[ன் எழு]
10 த்து தில்லை நாயகபட்டன் எழுத்து சமரகேசுர . . . . . . .

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவாஞ்சியம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 27

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் கோபுரத்தின் தென்புறத்திலுள்ள குமுதப் படையிலும், ஜெகதிப்படையிலும முறையே உளளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு :

I

1 . . . [கோ]யில் திரு . . பாண்
2 . . . . . . நாச்சியார்
3 க்கு விலைப்படி காசு நாரயம் ஆ
4 ண் விலைப்படி காசு . . எ . . ருயம் இ
5 சூதசூ . . . நிலத்தின்

II

1 . . . . . ஸ்ரீ[பரா]
2 . . . . . .
3 கு அஞ்சாவதி . .
4 [நீர்] ஏற்றி இறுக்க
5 . த்த விளை ரூ வறு
6 . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 28 |

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் வடபுற திருச்சுற்று மாளிகைப் படியில் உள்ளது.

குறிப்புரை : இத்துண்டு கல்வெட்டு குலோத்துங்க சோழனின் காலத்தைச் சேர்ந்தது. நில விற்பனை சம்பந்தமாக மன்னனின் நேரடி ஆணையைக் கொண்டதாக இக்கல்வெட்டு இருக்கலாம்.

கல்வெட்டு :

1 . . . [குலோ]த்துங்க சோழ தேவர்க்கு யாண்டு . . . .
2 திருமுகப்படி நிலம் அரையிநால் வ . . . .
3 [எ]ழுதின ஶ்ரீாணம் எங்களுக்கு காட்டுதல் . . . .
4 நாமத்தால் இன்நிலம் ஒருமாக்காணி . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் | நன்னிலம் | வரலாற்று ஆண்டு | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 64 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | திரிபுவனச்சக்கரவர்த்திகள் ராஜாதிராஜதேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 29 |

On the south wall of the central shrine in the Vanjiswara temple.

An unfinished record in the third year of the Chola King Tribhuvanachakravartin Rajadhirajadeva. Records gift of money for five lamps to the temple of Tiruvanjiyadeva of Tiruvanjiyam in Panaiyur-nadu, a subdivision of kulottunga-Chola-Valanadu.

திருவாஞ்சியமுடையார் கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ளது.

சோழமன்னன் திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராஜாதிராஜதேவனின் மூன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்த முடிவுபெறுத இக்கல்வெட்டு, குலோத்துங்க சோழ வளநாட்டு, பனையூர் நாட்டு, திருவாஞ்சியத்திலுள்ள திருவாஞ்சியதேவர் கோயிலுக்கு ஐந்து விளக்குகள் எரிப்பதற்கு தானமாக பணம் கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி பி 1174–ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 65 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 30 |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | | |

An unfinished record in the eleventh year of the chola king Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajadhiraja deva (II). Contains only the historical introduction Kadalsulnda, etc.

திருவாஞ்சிநாதர் கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ளது.

ராஜகேசரிவர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ராஜாதிராஜதேவனின் (II) பதினோரும் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு, 'கடல் சூழ்ந்த' எனத்தொடங்கும் அவனது வரலாற்றுச் செய்திகளை முன்னுரையாக தரும் மெய்கீர்த்திப் பகுதிகளை மட்டுமே கொண்டுள்ளது.

த. நா. தொ. ஆய்வுத்துறை    தொடர் எண் : 49 / 1977

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருவாஞ்சியம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : நாயக்கர்
மன்னன் : ரகுநாதனாயக்கன்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 77 of 1911
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 31

இடம் : திருவாஞ்சிநாதர் கோயில் இரண்டாவது உள்கோபுரத்தில் இடதுபுற நிலையில் உள்ளது.

குறிப்புரை : தஞ்சை நாயக்க மன்னனாகிய ரகுநாதனாயக்கரின் பிரதிநிதியாகிய மாதைய நாயக்க மல்லப்பனாயக்கர் என்பவர், திருவாஞ்சியத்திலுள்ள தேவரடியார்க்கு சில வரிகளைத் தானமாக அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 சாருவதி
2 ௵ ஆடி . . .
3 . . ஸ்ரீ உத் ர
4 குநாதனாயக்
5 கர் அய்யன் க
6 ாரியத்துக்குக்க
7 த்தரான மாதைய
8 நாயக்க மல்ல
9 ப்பனாயக்கர் அப்
10 யன் புண்ணியமா
11 க திருவாஞ்சியம்
12 தேவரடியாற்கு
13 சறுவமானியமா
14 க சந்திராதித்தவ

( திருப்பவும் )

15 ரையும் . . . திரு
16 ளுள் வரியுள்
17 க்கட்டளையிட்ட
18 படியாலே இதுக்
19 கு யாதாகிலும் [ஓ]
20 ருத்தன் அகுத
21 ம் பண்ணினவர்
22 கள் கெங்கை
23 க் கரையி
24 லே காரம் ப
25 சுவையும் தன்
26 மாதா பிதாக்களை
27 யும் குருவையும் கொ
28 ன்ற தோஷத்தி
29 லே போக க[டவராக]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 78 of 1911 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 32 |
| அரசு : | தஞ்சை நாயக்கர் | | |
| மன்னன் : | — | | |

On the Second inner gopura; right side.

A damaged record. Seems to refer to the same or a similar gift.

திருவாஞ்சிநாதர் கோயிலில் இரண்டாம் உட்புற கோபுரத்தின் வலது புறம் உள்ளது.

சிதைந்த கல்வெட்டு A. R. No. 77 of 1911-ல் காணப்படும் தானம் சம்பந்தப்பட்ட அதே செய்தியாகவோ அல்லது அதைப்போன்ற பிறிதொரு தானத்தைக் குறிப்பனவாகவோ இருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1579-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 79 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 33 |

இடம் : திருவாஞ்சியத்திலுள்ள வயலில் நடப்பட்டுள்ள கல்லில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டு சக வருடம் 1501-ஆம் ஆண்டைச் சார்ந்தது. எந்த மன்னன் காலத்தைச் சேர்ந்தது எனத் தெரியவில்லை. சிதம்பரத்திலுள்ள பிக்ஷா மடத்து அகோரசிவாச்சார்யாவின் மாணவரான அச்சுற்ற மங்கலத்தைச் சேர்ந்த பெருமா நயினார் பண்டாரம் என்பவர் தன்னுடைய மடத்திற்காக குந்துவாஞ்சேரியில் நிலம் வாங்கி தானமாக அளித்த செய்தியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . . .
2 சூ(றா)க மேல் செல்லா
3 [நின்ற] ஈஸ்வர வருஷம் ஆனி மீ
4 சிதம்பரம் பிக்ஷாமடம் அகோ
5 [க]ார சிவாசாரியர் சிஷியன் அ
6 ச்சுற்ற மங்கலம் பெருமா
7 ணயினார் பண்டாரம் குந்து
8 வாஞ்சேரியில் கொ
9 ண்டுடையதான மடப்
10 பிறம் ரு ம் வேலி திடர்ரு
11 இந்த தன்மத்து[க்கு]
12 அகிதம் பண்ணிந
13 வன் கெங்கை கரையில்
14 மோப் பிராமணரைக் கொ
15 ன்ற தோஷத்திலே போக
16

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 25–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1203-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 229 of 1938 / 39 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 34 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கச் சோழன் | | |

West side of the inner gopure in the Vanjiswara temple-chola-Tribhuvanachakravartin Kulottunga chola, who having taken Madura, Ilam and Karuvur, was pleased to take the crowned head of the Pandya-25th year-Tamil-continuations of lines lost. Seems to record an endowment of money for the maintenance of worship and offerings to the three Nayanmars (Emberumakkal) and to Thiruttondar Siruraittar (Manikkava chakar) in the shrine of the goddess in the temple of Tirumanakkoyil udaiyar at Sevur by a certain Anapayan.

திருவாஞ்சிநாதர் கோயில் உள்கோபுரத்தில் மேற்குப்புறச் சுவரில் உள்ளது. சோழ மன்னன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்க சோழனின் 25-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு. வரிகளின் தொடர்ச்சிகள் சிதைந்துள்ளன.

சேவூர் திருமணக்கோயில் உடையார் கோயில் அம்மன் சந்நிதியிலுள்ள மூன்று நாயன்மார்களுக்கும் (எம்பெருமக்கள்) சிறுத்தொண்டர் சீருரைத் தார்க்கும் (மாணிக்கவாசகர்) நித்திய வழிபாட்டு நிவந்தங்களுக்கு அனபாயன் என்பவன் தானமாக காசுகள் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 33–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1051 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருவாஞ்சியம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 234 of 1938 / 39 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 35 |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | | |

Broken Pillar set up near the Sukravarakattalai head sluice-chola-Rajakesarivarman alias Rajadhiraja deva (1)-33rd year, Tula 22, ba-8, Mrigasirsha, wednesday-Tamil-Begin with the introduction Tingaler-taru etc. Records the remission of taxes granted by the assembly of Abhimanabhusana - chaturvedimangalam on the lands endowed by Brammagal, wife of the general Rajendra chola Brahma marayar, for offerings to the god Brahmavinnagar Alvar, probably consecrated by her. The assembly is said to have held its meeting during night in the temple of Kumara-Vishnugrihattalvar.

சுக்கிரவாரக்கட்டளை என்ற ஊரில் மறுகால் தலையின் அருகில் உள்ள உடைந்த தூணில் உள்ளது.

சோழ மன்னன் ராஜகேஸரிவர்மரான ராஜாதிராஜ தேவரின் (1) 33-ஆவது ஆட்சியாண்டு, துலா-22, ப. 8, மிருகசீருஷம், புதன்கிழமையில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு. 'திங்களேர் தரு' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியுடன் ஆரம்பமாகிறது. சேநாதிபதி ராஜேந்திரசோழ பிரம்மாதிராயரின் மனைவி பிரம்மகள் என்பவள், பிரம்மவிண்ணகர் ஆள்வாரை எழுந்தருளுவித்து அவருக்குத் தானமாக நிலம் கொடுத்த செய்தியும், கொடுக்கப்பட்ட அந்நிலம் அபிமான பூஷன சதுர்வேதிமங்கலத்துச் சபையோரால் இறையிலி செய்யப்பட்ட செய்தியும் குறிக்கப்படுகின்றன.

குமார கிருகத்தாழ்வார் கோயிலில் இரவில் அவ்வூர் சபை கூடியதாகக் கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 975-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருசெங்காட்டங்குடி | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 60 of 1913 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. XIX. No. 134 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரிவர்மன் உத்தமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : உத்ராபதீஸ்வரர் கோயில் அர்த்த மண்டப வடபுறச்சுவ்ரில் [அர்த்தநாரீஸ்வரர் அருகில்] உள்ளது.

குறிப்புரை : உத்தமசோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் திருமருகல் நாட்டு மருகல் சபையோர் கோயிலிலிருந்து பொன் பெற்றுக் கொண்டு அஞ்சேயறு மாநிலம் இறையிலியாக விற்றுக் குடுத்த செய்தியும், அதே சபையோர் கோதுகுலவன் வீரசோழன் என்ற உத்தமசோழ நென்மலிநாட்டு மூவேந்த வேளான் என்பவனிடம் பொன் பெற்றுக் கொண்டு இறையிலியாக நிலம் விற்றுக் குடுத்த செய்தியும் தெரிய வருகிறது. இரண்டு நிலங்களுக்கும் எல்லைகள் கூறப் பட்டிருக்கின்றன. இது தவிர நுந்தாவிளக்கு இரண்டிற்கும் சபையோரால் நிலம் விற்றுக் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இடையில் சில வரிகள் சிதைந்துள்ளதால் இது பற்றிய விவரம் அறிந்து கொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்ம
2 ற்கு யாண்டு ரு ஆவது திருமருகல்
3 நாட்டு மருகல் ஸபையோம் திருச்செங்
4 காட்டங்குடி பரமேஸ்வரர்க்கு நாங்கள்
5 பொன் கொண்டு இறையிலியாக ச[ந்]
6 திராதித்தவல் விற்று இறையிலி செ
7 ய்து குடுத்த நிலமாவது மேலூர் நாங்
8 கள் விற்று இறையிலி செய்து குடுத்த நி
9 லம் ரூ . . அஞ்சே ய றுமாவுக்கு கீ

10 [ழ்] பாற்கெல்லை எங்கணிலத்து
11 க்கு மேற்கும் தென்பாற்கெல்
12 [லை எ]ங் கணிலத்துக்கேய் வடக்கும்
13 [மே]ல் பாற்கெல்லை திருச்செங்காட்ட
14 ங்குடி பரமேஸ்வரர் நிலத்துக்கு கி
15 [ழ]க்கும் வடபாற்கெல்லை எங்கணி
16 லத்துக்கேய் தெற்கும் இச்சது
17 கையான
18 கோது குலவ
19 ண் வீரசோழந
20 ாகிய உத்தம
21 சோழ நெண்ம
22 லி நாட்டு மூவே
23 ந்த வேளாநி
24 டை நாங்கள் ெ
25 பான் கொண்
26 டு இறையிலி[யா]
27 [சு]ச் சந்திராதித்
28 தவல் நிற்க வி
29 ற்று இறையிலி
30 செய்து குடுத்
31 த நிலன் எங்
32 களூர் மேலூ[ர்]
33 முழையூர் வா
34 ய்த் தென் க
35 ரை எறுகால் மு
36 [க]த்தின் தெ[ற்]
37 [கி]ல் . . . . நாங்க
38 * [ள்] பொன் கொ
39 [ண்]டு விற்று இறை
40 [றயி]லி செய்து கு
41 [டுத்]த நிலத்து
42 [க்கெ]ல்லை இறையா
43 [ன்] குடி நிலத்து

44 [க்கு] மேற்குந் தெ
45 [ன்] பார்க் கெல்லை தி
46 ருச்செங்காட்ட
47 ங்குடி நிலத்து
48 க்கு வடக்கு மே
49 [ல்ப]ாற் கெல்லை
50 . . . . . . . . . . . . . .
51 . . . . . . . . . . . . . .
52 . . . . . . . . . . . . . .
53 . . . . . . . . . . . . . .
54 . . . . . . . . . . . . . .
55 . . . . . . . . . . . . . .
56 கெல்லை
57 ளங்க
58 ளறுகா
59 முகத்து
60 க்கு தெற்கும்
61 சஞ்ஞ [சேகர]
62 வதி . . . . . . . . . . .
63 . . . . . . . . . . . . . .
64 . . . . . . . . . . . . . .
65 . . . . . . . . . . . . . .
66 . . . . . . . . . . . . .
67 . . . . . . . . . . . . . .
68 . . . . ளடங்க
69 . . . . . . . . . . . . . .
70 ம் இட்ட [ப]
71 ரிசுத் திரு வெ
72 நாந்தா வி
73 ளக்கு இர
74 ண்டுக்குந்
75 சந்திராதி
76 த்தவல் வெ

78 டுத்தோம்

79 ஸபெஹை

80 [யோம்] [||*]

On the north wall of the Ganapatisvara shrine Uttarapatisvara temple-5th Regnal year-This registers a sale of two pieces of land, tax-free by the Sabha of Marugal in Thirumarugal nadu of the temple of Paramesvara at Trichchengattangudi for the gold received by them, from the temple and from an officer (or chief) named Godukulavan vira solan alias Uttamasola Nenmalinattu Muvendavelan to provide for the maintenance of two perpectual lamps in the temple. The surname of the latter suggests that the inscription may be assinged to Uttama-chola.

* 38–வது வரி முதல் 80–வது வரி வரை உள்ள பகுதிகள் மிகவும் சிதைந்து தெளிவின்றி காணப்படுவதால், மத்திய தொல்பொருள் இலாக்காவினர் வெளியிட்டுள்ளபடி இங்கு தருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 981-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருசெங்காட்டங்குடி | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 62 of 1913 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. vol. XIX. No. 282 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரிவர்மன் உத்தமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : உத்ராபதீஸ்வரர் கோயிலில் உள்ள கணபதீஸ்வரர் சந்நிதியின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : உத்தமசோழனின் பதினொன்றாவது ஆட்சியாண்டில் திருமருகல் நாட்டு மருகல் சபையோர் திருச்செங்காட்டங்குடி பரமேஸ்வரருக்கு (இறைவனுக்கு), நொந்தா விளக்கிற்காக கோயிலிலிருந்து பொன் பெற்றுக்கொண்டு அஞ்சேயறு மாநிலம் விற்று இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 கோப்பரகே
2 ஸரி பன்றகு யாண்டு
3 ௰க-ஆவது திருமருக
4 ல் நாட்டு மருகல்
5 ஸபையோம்
6 திருச்செங்காட்
7 டங்குடி பரமே
8 ஸ்வ[ர]ற்குத் திருநொந்தா
9 [விளக்குக்கு]ப் பருத்தி . . .
10 ஷிஷெ
11 விடுப்
12 பட்ட நில

13 ன் அன்றே

14 சயறு மா

15 வு மிகுதிக் குறைமை உள்

16 ளடங்க விற்று யிறையிலி

17 சந்திராத்திதவறையும் பொ

18 ன் கொண்டு இறையிலி செ

19 ய்து குடுத்தோம் திருச்செ

20 ங்காட்டங்குடி த்ரிபுவன

21 மஹேஶ்வர[ற்]கு திரும

22 ருகல் ஸபை[யோம்] இதுப

23 ந்மாஹே

24 [ஶ்வரரக்ஷை]*

On the north wall of the Ganapatisvara shrine Uttarapatisvara temple-11th Regnal year-This registers a sale of land tax-free to the temple of Paramesvara at Trichchengattangudi for the maintenance of a perpectual lamp in the temple by the assembly of the Marugal in Thirumarugal nadu.

---

* இக்கல்வெட்டு முழுவதும் இப்போது அங்கு காணப்படவில்லை. பத்தாவது வரி முதல் இருபத்தி இரண்டாவது வரி வரையிலும் சில பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. எனவே மத்திய தொல்பொருள் இலாக்காவினர் வெளியிட்டுள்ளதை இங்கு முழுதும் தருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 18-ஆவது நாள் [330] |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு . | கி.பி. 1196-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 66 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : திருச்செங்காட்டங்குடி உத்தராபதீஸ்வரர் கோயில் மகா மண்டபத்தின் உட்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கச் சோழ தேவனின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் திருச்செங்காட்டங்குடியிலுள்ள திருத்தொண்ட தேவர் திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும் சீராளபிள்ளையாரை திருமருகலுக்கு ஊர்வலமாக எடுத்து வருகின்ற வழியை திருவீதியாக்க [தேர்செல்லுமளவு அகலமாக்க] பிராம்மணி அல்லியங்கோதை என்ற பெண் பதினாறு பேரிடமும் அடுத்து நான்கு பேரிடமும் நிலம் விலைக்கு வாங்கி அளித்த செய்தியும், இத்தானம் மன்னனின் பதினெட்டாம் ஆட்சியாண்டு முதல் அமுல் நடத்தப்பட்டது என்றும் தெரியவருகிறது. சுங்கம் தவிர்த்தருளின குலோத்துங்கச் சோழ தேவரின் பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் நிலத்தின் அளவுகள் கூறப்படுவதால், அக்காலத்திலும் இச்சீராளப்பிள்ளையாருக்கு நிலம் வழங்கப்பட்டிருந்தது என்று தெரியவருகிறது. அதிகாரிகள் பலரால் கையெழுத்திடப்பட்டுள்ள இக்கல்வெட்டில் நிலத்திற்கு எல்லைகள் கூறப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவ[ர்த்தி]
2 கள் மதுரை கொண்டு பாண்டியன் [முடித்தலை]
3 யுங் [கொ]ண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ
4 [தேவர்க்கு] யாண்டு [யஅாகூகய] [கெய]
5 [மா]ணிக்[க] வளநாட்டு மருகல்நாட்டுத் திருச்செங்
6 காட்டங்குடிச் சிறுத்தேவர் திருமாளி[க]
7 யில் நின்றும் சீராளப் பிள்ளையார் திருமருகலுக்கு எழு

8 ந்தருளும் வழி திருவீதியாகச் செய்ய நீங்கலாக நீக்கின
9 நிலத்துக்கு உள்வரிப்படி செய மாணிக்க
10 வளனாட்டு மருகல்னாட்டு ஸ்ரீ தேய . . . .
11 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
12 ஷூஹஷத நிச்சயித்த ௨ வு ஜ எ ரா உ௰ ஸா உகங இ
13 தேவர் இன்னாட்டுத் திருச்செங்காட்டங்குடியில்
14 சிறுத்தொண்டதேவர் திருமாளிகையில் நின்றும்
15 [சீராள] பிள்ளையார் திருமருகலில் எழுந்தருளும் வழி திருவீ
16 தியாகச் செய்ய இவ்வூரில் எல்லையில் அகப்ப
17 ட்ட நிலமாய் கவுசிகன் குனிக்கும்பிரான் திருவெண்கா
18 . . . . . . பட்டனும் . . . . கெரவித்தக
19 பட்டனும் கோவிந்த[பட்டனு]ம் தேவபட்டனும் மா
20 லன் திருவிடை மருதூ[ருடை]யான் கோளரிபட்ட ஸெ[ா]
21 [ம] யாசியாரும் திருவுடை[மருதூரு]டையான் சவுரி பட்டஸோ
22 மயாசியாரும் கார்த்திய . . . . மூர்த்தி தேவ பட்டனு
23 ம் தேவர்கள் தேவபட்ட[னும்] கவுணியன் கடல் சிறுகா
24 ள திருவரங்கபட்டனு[ம் கூ]த்தனூர் கிழவன் அரயன்
25 . . யகம் . . . டையானன உதைய மாத்தா .
26 . . . . வாயனும் பக்கல் பிராம்மணி அல்லி
27 [யங்] கோதையுங் கொண்டு [நிர்வார்]த்துக் குடுத்த நிலத்துக்கு
28 க்கணக்கு மருகலுடையான் எழுத்தி[ய க]
29 ணக்குப் படி நிலமாய் முன்னு . . . . . . .
30 . . . . . யாரும் இறை கட்டுக் குடலாய்
31 . . . . படியுந் தவிர்த்து யாண்டு ௰அ-வது ப்
32 . . . . முதல் நீங்கலாக நீக்கினதாம் பெற்ற
33 . . . . உடையார் சுங்கந்தவிர்த்தரு[ளி]
34 [ன] குலோத்துங்க சோழ தேவர்க்கு ௰கூ-வது
35 . . க்க குறைந்த நிலத்து ஒபாதி ரு௲ கூ
36 . . . . ரு௲ ரு ஷூ வ ஷத . ஷ னல் நி
37 . . . ஒபாதி . . . வறை ௨சமாஷதஷூ ந௨ நிச்சயி
38 த்த ஒபாதி உ௰ நூாகூ ங ரு௲ ஷத நீக்கி ரு௲
39 . . ௰எ வ . ௰ . வனல் ௨ ௰ ௩த கார் நு௰ வ
40 ஷத கஉக நிச்சயித்த ௨வுஞகாரர்கய . . . மிங . . வ
41 இவை புரவரி ஸ்ரீகரணநாயக மேலூருடையானெழு
42 த்து . . . இவை [புர]வரி ஸ்ரீகரணத்து முகவெட்டி . .
43 மங்கலமுடைய . . . . வாஞ்சி . . . .
44 நாயகம் பெருநலூருடையானெழுத்து இவை
45 புரவரி ஸ்ரீகரணநாயகம் பாலையூர் கிழவனெழுத்து

46 இவை புரவரி ஸ்ரீகரணநாயகம் குழலூருடையானெழு
47 த்து இவை புரவரி கரணத்[து] முகவெட்டி குமாரமங்
48 கலமுடையானெழுத்து இவை புரவரி கரணத்து
49 முகவெட்டி . . . முந்தையுடையானெ
50 ழுத்து இவை . . . . . . .
51 முகவெட்டி பந்த[னே] நல்லூருடை
52 யானெழுத்து இவை சொ . . . . . ழுத்து
53 இவை பமந்தியார் . . . . . இவை தி
54 பத்தரும . . . . அரையனெ
55 ழுத்து இவை . . . . . . . . இவை
56 விசைய ராஜ . . . . . . . . டையா
57 னெழுத்து இவை . . . . . த்து இவை
58 நுளம்பாயராஜனெழுத்து இவை வாணயிராஜ
59 னெழுத்து
60 வது . . . . ளுல் நீங்கலாக நீக்
61 கின படிக்கு புரவரிப்படி கெயமாணிக்கவளநாட்
62 டு மருகல்[நாட்டு] மருகல் கொ . . . ம் இறையான் குடியான
63 . காடு . . . . ஜாஸஜ்தனுல் காா்யகாணி . ங . . ஊத நிச்சயி
64 த்த ூ காா்ய . . . தினூர் இன்னாட்டுத் திருச்செங்காட்டங்குடியி
65 ல் . . . . . . தேவர் திருமாளிகையில் நின்றும் . . . . .
66 . . . . . எழுந்தருளும் வழி திரு வீதியாகச் செய்ய
67 . . . . . . . . . . . . . . . . . . . . . .
68 ஞான சம்பந்தனை இ[ரா]ஜ வல்லப பல்லவரயனும் கரு[ப்பு]
69 டையான் திருச்சிற்றம்பலமுடையான் பெரியானை சிவபாதசே[கர]
70 மூவேந்த வேளானும் தத்தை நல்லூருடையான் அரயன் திரு
71 [நட]ப்பனும் குறுக்[கை]கயுடையான் மாதவ நாயகன் நம்பி
72 யாழ்வானும் பக்கல்பிராமணி அல்லியங் கோ[த]ய் முன்
73 . . . . கொண்டு நீர் வார்த்துக் குடுத்த நில
74 . . . . ன்னுடையாரும் இறை கட்டு
75 . . . . . . . . . . . . . . . .
76 . . . . பசான முதல் நீங்கலாக நீக்கி
77 . . . . பெற்ற ரூ வஸ ளுல் நில ஓபாதி
78 யும் வறை . . . . நிச்சயித்த ஓபா
79 தி . . . . நீக்கி ரூ யிவு ஸஉ . . . . . . . .
80 ஊத . ஜாஸஊதனுல் ஐவராகய . . . .
81 நிச்சயித்த ூகராரூய் . . . . கஸக்கு

84 து முகவெட்டி பெருமங்கலமுடையா
85 னெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண நாயக[னு]
86 ம் பெருநல்லூருடையானெழுத்து இ
87 வை புரவுவரி ஸ்ரீ கரணத்து முகவெட்டி பந்
88 தனே நல்லூருடையா னெழுத்து இவை
89 புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி குமாரமங்க
90 ல முடையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீ[க]
91 ரணநாயகம் பாலேயூர் கிழவனெழுத்து
92 இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் மேலூருடை
93 யானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண[த்]
94 து முகவெட்டி . . . . த்தையுடையானெழுத்து
95 இவை கச்சி[ரா]ஜ னெழுத்து இவை
96 [ப]ம நிசியராஜனெழுத்து இவை
97 . . . . . . . . . . . . . . . . . . . . . .
98 [இ]வை ராஜனெழு . . . . . . . . .
99 கோனெழுத்து இவை தீபத்தரயனெழு
100 த்து இவை [சிப்பெந்]னெழுத்து இவை
101 வேணாட்டாய னெழுத்து இவை நுள
102 . . . . ராஜனெழுத்து இவை வாணயிராஜ
103 னெழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 68 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டின் முதல் மூன்று வரிகள், கல்வெட்டு எண் இரண்டில் கூறப்பட்ட தீனசிந்தாமணி சதுர்வேதி மங்கலத்தில் சிக்கலுடையான் காணி நிலம் தவிர மீதி நிலங்களின் அந்தராயம், பாட்டம் முதலியன அற்சனு போக இறையிலியாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. இச்சம்பவம் வெளிச்சேரியைச் சேர்ந்த சுவண்ணன் சுவாமி குமாரனை சவண்ணசக்கரவர்த்திகளும், திருச்செங்காட்டங்குடியைச் சேர்ந்த பிராம்மணி அல்லியங்கோதை என்ற அம்மையாரும், ஆண்டார் விளங்குடையார் சிறுத்தொண்டரும் விண்ணப்பம் (வேண்டுகோள்) செய்ததின் பேரில் நடந்தது என்பதைக் குறிக்கிறது இக்கல்வெட்டு. பிராம்மணி அல்லியங்கோதை என்ற பெண்மணி முதல் கல்வெட்டில் நிலம் அளித்த செய்தி நாமறிந்ததே. எனவே இம்மூன்று கல்வெட்டுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக காணப்படுகின்றன.

கல்வெட்டு :

1 . . . . இன்னிலம் . . . . . . . . . . . நீங்கலாக நீ[க்கின]
2 படிக்கும் அற்சனு போக இறையிலியாக
3 நிலம் இட்டபடிக்கும் விண்ணப்பஞ்செய்
4 து இடுவித்தார் வெளிச்சேரி சவண்ணன் சுவாமி குமாரனு
5 ன சவண்ணச்சக்கரவ[ர்*]த்திகளும் இவ்வூர்க் கும்பி
6 ட்டிருக்கும் பிராமணி அல்லியங் [கோதை]
7 அம்மையும் ஆண்டார் விளங்குடையார் சிறுத்
8 தொண்டரும் விண்ணப்பம் செய்து இடுவித்
9 தது

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருச்செங்காட்டங்குடி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் குலோத்துங்கச் சோழன்

ஆட்சி ஆண்டு : 18-ஆவது
வரலாற்று ஆண்டு : கி.பி. 1196-ஆம் ஆண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 67 of 1913
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 5

இடம் : உத்ராபதீஸ்வரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கச் சோழ தேவரின் பதினெட்டாம் ஆட்சியாண்டில், திருச்செங்காட்டங்குடி சிறுத்தொண்டதேவர் திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும் சீராளப்பிள்ளையார்க்கு வேண்டும் அர்ச்சனை செலவுக்கு மருகல் நாட்டைச் சேர்ந்த தீனசிந்தாமணி சருப்பேதி மங்கலத்திலுள்ள நிலங்களில் சிக்கலுடையான் என்பவனின் காணியாகிய நிலம் தவிர, பிற நிலங்களினால் வரும் அந்தராயம், பாட்டம் முதலியவை இறையிலியாக சுங்கம் தவிர்த்தருளின குலோத்துங்கச் சோழதேவரின் பதினொன்றாம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டதை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது இக்கல்வெட்டு. நிலவருவாய்த்துறை அதிகாரிகள் பதினேழுபேர் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரிய வருகிறது. மன்னனின் பெயர் காணப்படாத இக்கல்வெட்டு, முதல் கல்வெட்டின் தொடர்புடையதாக காணப்படுவதால் இதுவும் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தது என்பது உறுதி.

கல்வெட்டு :

1 யாண்டு ௰அ-வது[1] நாள்[2] ௲ா [ரு] முதல் அந்தராயப்பாட்ட
2 . . . . அற்சனா பே[ரகத்]து இறையிலி இட்டபடிக்கு
3 உள்வரிப் ப[டி] செய மாணிக்க வள[நாட்டு திருமருகல்]
4 னாட்டுத் திருச்செங்காட்டங்குடிச் சிறுத் தொண்ட
5 தேவர் திருமாளிகையில் சீராளப் பிள்ளையார்க்கு வேண்
6 டும் அற்சனைகளுக்கு இறுப்பதாக இன்னாட்டுத் தீன
7 [சி]ந்தாமணி சருப்பேதி மங்கலத்துச் சிக்கலுடை

8 யான் காணியான நிலம் நீக்கி நீக்கி நின்ற நிலத்து யாண்டு
9 . . . . . பசான முதல் அந்தராய பாட்டம் உட்பட அற்சஞு
10 போக இறையிலி இட்ட ரூ ரீ · ஞல் நில ஓபாதி . . . .
11 ச்சய ஙாஙஊ நிச்சயித்த ஓபாதி . . . . ஊங்ஙஉடை
12 [ய]ார் சுங்கம் தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவர்க்கு ௰க-வது
13 இறை கட்டின காணி[க்கட]ன் ஓபாதி ஊராளஞல் ௰க ஆக நி
14 . . . . . . யாண்டு ௰-வது[4] பாசான முதல் அந்தராயம் . . . .
15 . . . . அற்சஞு போக இறையிலி இட்ட
16 ப[டி] இவை புரவு வரி ஸ்ரீகரண நாயக மேலூ
17 ருடையானெழுத்து இவை புரவு வரி ஸ்ரீ கரண
18 நாயகம் பெருநல்லூருடையானெழுத்து
19 இவை புரவு வரி ஸ்ரீ கரண நாயகம் பாலையூர் கிழ
20 வனெழுத்து இவை புரவுவரி ஸ்ரீ கரண நாய
21 கம் குழலூருடையானெழுத்து இவை புரவரி
22 ஸ்ரீ கரணத்து முகவெட்டி பெருமங்கலமுடையானெ
23 ழுத்து இவை புரவரி ஸ்ரீ கரணத்துமுகவெட்டி [பெரு]
24 மங்கலமுடையானெழுத்து இவை புரவரி ஸ்ரீ கர
25 [ணத்து] முகவெட்டி பந்தனை நல்லூருடை
26 யானெழுத்து இவை புரவரி ஸ்ரீகரணத்து முக
27 வெட்டி மந்தையுடையானெழுத்து
28 இவை தீபத்தரயனெழுத்து இவை வி[ஜ]யரா
29 ஜனெழுத்து இவை [பழந்திபராஜனெழுத்து]
30 இவை . . . . ராஜனெழுத்து இவை . . . . . [எ]
31 ழுத்து இவை . . . . . . . . . . .
32 பெற்றுய னெழுத்து இவை . . . . ட்டாயனெழுத்து
33 இவை நுளம்பா[தி] ராஜனெழுத்து இவை வாஞதிராஜ
34 னெழுத்து

1–ஆவது என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.
2–நாள் ,, ,, ,,
3, 4–ஆவது ,, ,, ,,

த. நா. தொ. ஆய்வுத்துறை    தொடர் எண் : 60 / 1977

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருச்செங்காட்டங்குடி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றும் குலோத்துங்க சோழன்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 1178-ஆம் ஆண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 65 of 1913
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 6

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலேரத்துங்க சோழனின் ஆட்சி காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டு திருக்கண்ணபுரத்து இராமநந்தீவரர் கோயிலைச் சேர்ந்தது. அக்கோயில் கற்றளியாக இல்லாத காரணத்தினல், திருச்செங்காட்டங்குடி உத்தராபதீஸ்வரர் கோயிலில் பொறிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திரு. இராமநந்தீஸ்வரரை, முன்பு எழுந்தருளியிருந்த பூர்வ ஸ்தானத்திலேயே மீண்டும் எழுந்தருளுவித்து அவர்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறையிலியாக நிலம் வழங்க மன்னனின் 2-ஆவது ஆட்சியாண்டில் ஆணை (திருமுகம்) பிறப்பித்தாக தெரிய வருகிறது. பூர்வஸ்தானத்தைச் சுற்றிலுமுள்ள இடத்தில் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும், திருமடவிளாகமும், தீர்த்தக் குளமும், திருநந்தவனமுமாக எடுப்பிக்க இம்மன்னனில் 5-ஆவது ஆட்சியாண்டிலும் 10-ஆவது ஆட்சியாண்டிலும் தேவதான இறையிலியாக நிலம் கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இக்கல்வெட்டு குலோத்துங்க சோழனின் 11-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்ததாகவும், திரு. சுவாமிகண்ணுப்பிள்ளை 22-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்ததாகவும் கூறுகின்றனர். எனவே அவ்வறிக்கையினையும் கீழே தருகின்றோம்.

கல்வெட்டு :

1 புயல் வாய்த்து வளம் பெருகப் பொய்யா
2 த நான் மறையின் செயல்வாய்[ப்*]பத்
3 திருமகளும் செயமகளுஞ் சிறந்து வா
4 ழ வெண்மதி போற்குடை விளங்க [வே]
5 ல்வேந்தரடி வணங்க மண்மடந்தை மன

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS.
LIBRARY,
Acc No ----
Date ----

6 ங்களிப்ப மனுநீதி தழைத்தோங்க ச[க்]கிரமு
7 ஞ்செங்கோலுந் தி[க்] கனைத்துஞ் செல நடப்ப
8 க் கற்பகாலம் புவி காப்ப பொற்பமைந்த முடி
9 புனைந்து விக்கிரமபாண்டியன் வேண்டி விட்ட த
10 ண்டால் வீரபாண்டியன் மைந்தனை மூக்கரிந்து கெ
11 ாண்டு விக்கிரமபண்டியற்குக் கூடல் மா[நகர்]
12 குடுத்தும் மீண்ட பின்னெடுத்து வந்த பரிபவ
13 த்தாலெதிர்ந்து வந்த பாண்டியனை முடித்
14 தலை கொண்ட மர் முடிவு செய்த [தட]
15 விறட்டி வாகைப் பெரு வீரக் கொடியுந் தியாக
16 கொடியுமெடுத்தருளிச் செம்பொன் வீர ஸிங்காஸ
17 னத்துப் புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்
18 தருளிய கோப்பரகேசரி பன்மரான திருபுவனச் சக்கர
19 வர்த்திகள் ஸ்ரீ
20 மதுரை கொண்டு பாண்டியனை மு[டி]
21 த்தலை கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு
22 விருச்சிக ஞயற்று அ
23 [பர] பக்ஷத்து சதுர்த்தெ
24 சியும் பெற்ற [அ]னிழத்தினாள் ெ
25 [கய] மாணிக்க வளநாட்டு மருகல்
26 நாட்டு பிரஹ்மதேயந் திருகண்ண
27 புரத்து சபையார் திருவிராமந
28 ஜீஸ்வரமுடையார்க்கும் பெரிய
29 தேவர் குலோத்துங்க சோழ தே
30 வர்க்கு க[1] வதின் எதிராமாண்டு பிர
31 ஸாதஞ் செய்தருளி வந்த திருமு
32 கம் உள்வரிப்படி இவ்வூரில் முன்பு
33 எழுந்தருளி இருக்கும் பூவஸ்தானத்
34 திலே எழுந்தருளுவித்து இத்தேவர்
35 க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இ
36 றுப்பதாகக் கண்ணபுரத்தான் இறை
37 யிலி ப்ரஹ்மதேயங் கண்ணபுரத்துப்
38 [ப]ழம் பெருங் கண்ணபுரத்தானுக்கு இ
39 . . . . . யாக பருகற்படகெ
40 . . . நந்து ஒன்பதாவதின் எதிராமாண்டு
41 நில தேவதான இறையிலி
42 யாய் வேறு பிறிந்த சிவபாத [சேகர]
43 மங்கலம் ரூ லேயும் ஐவேலி

44 யும் பூவ-ஜஹாநமாய் எழுந்தருளுவித்
45 து இவ்விடத்தைச் சூழ ஸ்ரீகோயிலுந்
46 முற்றமுந் தீர்த்தக் குளமுந் திருமடவிளாகமுந்
47 திருநந்தவனமுமாக இவ்வூர் நீங்கலில் இட்ட
48 ரூ வ இன்னிலங் காலும் ஆக ரூருபஇதில் இத்
49 தேவர் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமுந் திரும
50 ட விளாகமுந் தீர்த்தக் குளமுந் திருநந்தவன
51 முமாக இவ்வூர் நீங்கல் நிலத்து இட்ட நில[ம]
52 ாய் நீங்கலுக்குடலாக நீக்கி[ன] ரூ வ நீக்கி நிலம்
53 . . . வேலியினால் நில வோபாதி பழ இறை . . . . .
54 ரூ சுகூங தம் நிச்சயித்த ஒபாதி ஊகிளஙரூ
55 இறை கட்டின காணிக் கடன் உருாாளனல் . . . ஆக
56 கி உ கூ ாம ச வதின் எதிராமாண்டு முதல் தே[வதா]ன இ
57 றையிலி இட்டமைக்கு இந்நிலம் . . . . மட
58 த்து உள்ளளவளக்கக் குறைந்த நிலம் தரமிலி
59 . . . லத் தோபாதி நீங்க[லாக] நின்ற நில
60 வோபாதிக்கு ஒபாதியே மேய் ஒக்கத்தரத்த
61 . . . . . . இனன்
62 . . . . த்து முகவெட்டி நெடு
63 . . . . முடையான் வேளூர் . . . .
64 ரைசூருடையா . . . . . . . .
65 ருடையாரும் . . . . . . . . . . .
66 . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
67 யாரும் சிங்கள ரா[யரும்] . . . . . . .
68 உள் . . . ண்டாய இவை பழ நிச்ச[யி]
69 த்து இ[து] ரக்ஷிக்கை அரிதாயிருக்கை[யி]
70 ல் இ . . . . கல்வெட்டி இன்னையநார் கோ
71 யில் திருக்கற்றளியில்லாமையில் இன்னட்
72 டு மருகல் நாட்டு திருச்செங்காட்டங்குடி[யு]டை
73 யார் கோயில் திருக்கற்றளியிலேய் கல்வெட்டப் பெற
74 வேணுமென்று திருவிராமநந்தீஸ்ரமுடையார் சே[ர]
75 யில் தானத்தார் இக்கோயில் பற்றுப் பிடித்த கடுவன்
76 குடையார் துலையாத செல்வரான சேர கோனார்க்குச்
77 சொல்லி இவர் ஒலை திருவ . த்திக் கீழ்த் திருமண்டப . . .

On the north wall of the mandapa in front of the uttarapatisvara temple.

(Tamil). A record of the chola king Parakesarivarman alias Tribhuvana chakravartin Kulottunga-choladeva (III), "who took Madurai (Madura) and was pleased to take the crowned head of the Pandya," in his eleventh year and 175th day, Vrischika, ba. di 14, Friday, Anilam.

Registers that a document connected with the temple of Tiruviramanandisvaram udaiyar at Tirukkannapuram, a brahma deya village of Marugal-nadu in Geyamanikka valanadu, was engraved on the walls of the temple at Tiruchchengattangudi, as the former was evidently not constructed of stone. The record refers to the fifth and tenth years of Periyadevar Kulothunga-choladeva in whose time the Tirukkannapuram temple came into existence. Mr. Swamikannu Pillai points out that eleventh is an error for twenty second year; that the date corresponds to Friday, 19th November 1199, and that the 175th day shows that the reign began on 23rd May, A.D. 1178.

---

1. வதின் என்பது குறியீட்டாலும் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 45–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1115 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 64 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்க சோழன் | | |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோவில் முன்மண்டப வடவாயிலின் கீழ்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : முதலாம் குலோத்துங்க சோழனின் நாற்பத்து ஐந்தாவது ஆட்சியாண்டில் திருச்செங்காட்டங்குடி ஊரார், உத்தராபதீஸ்வரர் கோயிலில் உள்ள கணபதீஸ்வரம் உடையார்க்கும், உத்தராபதி நாயகர்க்கும், அர்த்தசாமக்கால பூசைக்கு செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் மாலையாக்கி சாத்தவும், செங்கழுநீர் படர்ந்த நீர்நிலையும், நீர்பாய்க் குளமும், கரையும் ஆக்கவும், திருப்பள்ளித்தாம நந்தவனம் அமைக்கவும், இக்கோயில் சிணகேஸ்வரகண்காணிகளுக்கும் (மேற்பார்வையாளர்கள்), ஸ்ரீ காரியஞ்செய்வார்களுக்கும் (நிர்வாகத்தார்), கோயில் கணக்கனுக்கும் இறையிலியாக நிலம் ஒன்றே ஒருமா அளித்ததாகக் கூறப்படுகின்றது.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்கரவ[ர்*]த்திகள் ஸ்ரீகுலோத்து[ங்க]
2 சோழ தேவற்க்கு யாண்டு சயரு செயமா
3 ணிக்க வளநா[ட்]டு மருகல் நாட்டு திருசெங்[கா]
4 ட்டங்குடி ஊர்[த்]தாரம் உடையார் கண[ப]
5 தீஸ்வரமுடையாரும் உடையார் உத்தராபதி நா
6 யகற்கும் கோயில்ச் சிணகேஸ்வரக் கண்கா[ணி]
7 [செ]சய்வார்களு[க்கு*]ம் ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கு[ம்]
8 தேவர்களு[க்கு*]ம் கோயிற் கணக்கனுக்கும் நா[ம்]
9 இறையிலி செய்து குடுத்த நிலமாவது உ[டை]

(திருப்பவும்)

10 யார் கணபதீஸ்வரமுடையாரும் உடையா
11 ர் உத்தராபதி நாயகரும் . . அத்தசாமக்கால [பூசை]
12 [க்குச்] செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் சாத்திய[ரு]
13 ளவும் [ம]ாலையும் ஆக்கித் திருப்பள்ளித் தாம
14 நந்தவனம் ஆக்கவும் இறையிலி இறு[க்*]க இ .
15 . க்கு நீர்பாய்க் குளமுங் கரை[யு மாக்கி]
16 ன நிலத்துத் திருச்செங்கழுநீர் இ[நவி]
17 நீர்நிலை ரூ ரு இந் ரூ ம் அரையும் மாநி . .
18 . திருப்பள்ளித் தாமமும் ஆக்க இட்ட கை
19 (ரயும்) இந்நிலம் அரையும் ஒருமாவும் ஆக ரூ
20 . இந்நிலம் ஒன்றே ஒருமாவும் இறையிலி
21 யாகச் சந்திராதித்தவற் சாசுகதிம்மாக கல்
22 லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்[ள]
23 சுடவர்களாகவும் இறையிலி செ
24 ய்து குடுத்தோம் இவூர் ஊரவரோம்
25 இப்படிக்கு இவை . .
26 கணக்கு நாய . . . . . . . . . .
27 . . எழுத்து இப்படிக்கு இவை
28 . . . . . . . . . . செந்[தா]மரைக் கண்
29 இராசேந்திர சே[ச]ாழ விடையாரன் எழுத்து இப்
30 படிக்கு இவை [பொன்]னம்பலமுடையான் தா[மோ]
31 [தர]ன் . . . . . . . . . . . .
32 இப்படிக்கு இவை . . . . . முடையான் தா
33 [மோ]தரன் எழுத்து இப்படிக்கு இவை அம்பல
34 [மு]டையான் கயி[ல]ாயன் [எழுத்து] . . . . . . .
35 . . . . . . . . . . . . . . . . . . .
36 எழுத்து இப்படிக்கு வீரப்பலங் (குடை)
37 டயான் நித்தி [யக]ல்லியாணன் சுந்தரனூர்
38 [எழுத்]து இப்படிக்கு [இவை சா]த்த மங்கலமுடை
39 [யா]ன் ஆதிச்சன் [பிச்ச]ன் காடனை . . . .
40 காணி . . . . திரைமூர் நாட்டு . . . .
41 [அ]ரையன் எ[ழுத்து] இப்படிக்கு . . . . .
42 . . . . . . . . . . . . . . . எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருசெங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | | |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறச்சுவரிலும், மகாமண்டபத்தின் வடபுறக்குமுதத்திலும் உள்ளது.

குறிப்புரை : முதலாம் இராஜாதிராஜனின் மெய்கீர்த்தி மிகவும் சிதைந்து காணப்படுகிறது. ஆரம்பமும் இறுதியும் கிடைக்கவில்லை. எனவே கல்வெட்டுச் செய்திகளை தெரிந்து கொள்ள இயலாமற் போய்விட்டது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . .
2 [தமையனுங் குறி]கொ[ட*]ன் தன்
3 [கோக்கிளை]யும் நெறியு[ணர்
4 [தன் றிருப்புதல்] வர் தமையு[ந்]
5 [துன்றெழில் வ]ா நவந் வில்[ல வன் மீனவன்]
6 [கங்]கன் இலங்[கையர்க் கிறைவன்
7 பொல]ங் கெழிற்[பல்லவன்
8 கன்னி] குச்சியர்க் காவ [லனெனப் பொன்]
9 மணி சுடர்ம[ணி மகுடம் சூ]
10 ட்டிப் படர்புக
11 [ழாங்கவர்க் க]வர் நாடருளிப்
12 பாங்குற[மன்னுபல்]லூழியுள் தென்னவர் மூவருள் மாநா
13 ஹரணன் பொன் முடியாஞ
14 ப்பருமணிப்பசுன்தலை பொருகளத்தறிந்து வாளர வியகழ

(திருப்பவும்)

15 ல் வீரகே
16 ரளனை மு
17 னை வயிற்
18 பிடித்துத்
19 தனது வா
20 ரணக்க
21 [கத]
22 க்களிற்றினு
23 ல் உதை
24 ப் பித்தரு
25 ளி அந்தமி
26 ல் பெரும்புக
27 ழ் சுந்தர பா
28 ண்டியன் கொற்
29 ற வெண் குடை
30 யும் கற்றை வெ
31 ண் கவரியும் ஸி[ஂ]
32 ஹாஸநமும் வெங்
33 களத் திழந்து தன்
34 [முடி] விழத்தலைவிரித்தடி
35 தளர்ந் தோடத்
36 தொல்லை முல்லையூ
37 ர்த் துரத்தி ஒல்கலில்
38 . . . . . . . . . . . . .
39 . . . . . . . . . . . . .
40 . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு | கி.பி. 11, 12–ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 71 of 1913 |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | குலோத்துங்க சோழன் ? | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் மகாமண்டப வடபுற அதிட்டானத்தில் உள்ளது.

குறிப்புரை : திருச்செங்காட்டங்குடி சிறுத்தொண்டனுயனுர் திருமாளிகையில் பூஜை செய்யப் படுகின்ற உத்தராபதி நாயனுர்க்கு, ஒவ்வொரு மாதமும் பரணி நட்சத்திரத்தில் ஆடி அருளவும் (அபிஷேகம்) அமுது உள்ளிட்ட விஞ்சனங்களுக்கும் (பிரசாதம் போன்றவை) சவுரிப்பெருமாள் என்பவன், திருவேட்டைக் கட்டளை என்ற ஊரிலுள்ள நிலம் சிலவற்றையும், தீனசிந்தாமணி சருப்பேதி மங்கலம் என்ற ஊரில் ஆதி பத்தன் என்பவனிடம் வாங்கிய நிலமும் ஆக மொத்தம் ஆறு மாவையும் இக்கோயில் ஆதிசண்டேசுவர தேவர்கன்மிகளிடம் தேவதானமாக அளித்தது பற்றிக் கூறுகிறது இக்கல்வெட்டு. மன்னனின் பெயர் சிதைந்து விட்ட இக்கல்வெட்டு முதற் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். கல்வெட்டின் இறுதிப் பகுதியும் சிதைந்து காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கர[வத்]திகள் ஸ்ரீ . . . . . அபர பக்ஷத்து பிரத[ம]மயும் புதன்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் கெயமாணிக்க வளநாட்டு உடையார் திருச்செங்காட்டங் குடி உடையார் கோயில் ஆ

* A damaged record of the chola king Parakesarivarman alias Rajadhirajanarapati Rajendra chola III (1245-67), "who cut off the heads of two Pandya kings." Supplies along list of the sanskrit birudas of the king. Seems to record a gift of land to the God Uttarapatti-Nayaka in the temple of Ganapathisvaram-Udaiyar for the purpose of the Bharani festival in the months of Sittirai and Arpasi. Among the achievements of the king are mentioned his capture of the stronghold of Vira-Rakshasa, which was called Uttara Lanka and which Mr. Krishna Sastri surmises to be a place near Rahmundry in the Godavari delta; his vistory over two Pandyas; and his power over the Karnataka king Someswara of the Hoysala Dynasty. Vira-Rakshasa is said to be the sole hero of the vadugas, and Rajendra's compaign against Kopperunjinga who had territory as far as Draksharama and who had given a good deal of trouble to Rajaraja III. Rajendra chola's time was thus one of genuine attempt to receive the chola greatness. For the relations between Rajendra and someswara see 49 of 1913 at Sivayam (Trichinopoly District).

இரு பாண்டியரைத் தலைக்கொண்ட பரகேசரிவர்மனான இராஜாதிராஜ நரபதி இராஜேந்திர சோழனின் சிதைந்த கல்வெட்டு இது. மன்னனின் சமஸ்

(திருப்பவும்)

கிருதப் பட்டப் பெயர்கள் வரிசையாக எழுதப்பட்டுள்ளன. சித்திரை, ஐப்பசி மாதங்களில் வரும் பரணி நாளில் கணபதீஸ்வரம் உடையார் கோயிலில் உள்ள உத்திராபதி நாயகருக்கு வழிபாடு நிகழ்த்த அளிக்கப்பட்ட நிலக்கொடையைக் குறிக்கிறது. உத்திரலங்கையில் வீரராக்ஷசனிடம் பெற்ற வெற்றியும் ஒன்ருகக் கூறப்பட்டுள்ளது.

திரு. கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் இவனைக் கோதாவரி கடலோடு கலக்குமிடத்தில் உள்ள ராமுந்திரிக்கருகில் இருப்பதாகக் குறிப்பிடுகிருர். இரு பாண்டியர்களையும், கர்ஞடக மன்னன் சோமேஸ்வரனையும் தோல்வியடையச் செய்த செய்தியும் இடம்பெறுகிறது. வீரராக்ஷசன், வடுகர்களின் தனித்தலைவன். இவன் மீது படைமேற் சென்றதற்குக் கோப்பெருஞ்சிங்கனிடம் கொண்டிருந்த பகையே காரணமாதல்வேண்டும். கோப்பெருஞ்சிங்கன், திராக்ஷாராமம் வரை தன்னெல்லையைப் பரப்பி, இராஜராஜனுக்குப் பெருந்தொல்லையைக் கொடுத்து வந்தவன். சோழர்களின் சிறப்பில் மீண்டும் ஒரு மலர்ச்சியைக் கொடுத்ததனுல், மூன்ரும் இராஜேந்திரனின் காலம் மிகச்சிறப்புடையது எனலாம். இராஜேந்திரனுக்கும், சோமேஸ்வரனுக்கும் இருந்த தொடர்பினை அறிய (49 of 1913) திருச்சி மாவட்டம் சிவாயம் கல்வெட்டினைக் காண்க.

---

* இக்கல்வெட்டு தற்போது உத்தராபதீஸ்வரர் கோயிலில் முழுவதும் சுண்ணும்பு பூசப்பட்டு மறைக்கப்பட்டு விட்டதால் இத்துறையினரால் படியெடுக்க முடியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | சக ஆண்டு 1322 கி.பி. 1399-ஆம் ஆண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 78 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | விஜயநகர் | | |
| மன்னன் : | இரண்டாம் வீரவிருப்பண்ண உடையார் | ஊர்க் கல்வெட்டு எண் | 39 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் இரண்டாம் கோபுரத்தில் உள்ளது.

On the Second gopura of the Uttarapatisvara temple.

A damaged and unfinished record of the Vijayanagara king Vira-Viruppanna Udaiyar II i. e., Virupaksha I, in S. 1322, Pramadi, Mesha, ba. di. 12, Friday, Uttirattadi corresponding to Friday, 2nd May, 1399. Seems to provide for certain festivals in the temple of Uttarapati Nayaka.

இக்கல்வெட்டு சிதைந்தும் முற்றுப்பெறாத நிலையிலும் உள்ளது. விஜய நகர மன்னன் வீரவிருப்பண்ண உடையார் II [ விருபக்ஷா I ]-ன் சகவருடம் 1322, பிரமாதி, மேஷம், ப. தேதி 12, வெள்ளிக்கிழமையைச் சேர்ந்த இக் கல்வெட்டு கி.பி. 1399 மே மாதம் 2ம் தேதி வெள்ளிக்கிழமைக்குச் சமமானது. உத்தராபதி நாயகர் கோயில் திருவிழாக்களுக்கு தானம் அளித்ததுபற்றி காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | சக ஆண்டு 1394<br>கி.பி. 1472 |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 79 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 40 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் இரண்டாம் கோபுரத்தில் உள்ளது.

A fragmentary record in S. 1394, Nandana, Simha, Su. di., Monday, Attam.

Seems to record a gift of land by purchase at pallur in Vadagal Marugal-nadu which was a subdivision of Geyamanikka valanadu for offerings to the temple of uttarapati-Nayaka by a native of Nandisvaram in Tondaimandalam.

சகவருடம் 1394 நந்தன, சிம்ஹ, சு. தி. திங்கள், அத்தத்தைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டு.

தொண்டை மண்டலத்திலுள்ள நந்தீஸ்வரம் என்ற ஊரைச் சார்ந்த ஒருவன் செயமாணிக்க வளநாட்டு வடகல் மருகல் நாட்டு பள்ளூர் என்ற ஊரில் நிலம் விலைக்கு வாங்கி, உத்தராபதி நாயகர் கோயில் பூஜை வழிபாட்டிற்காக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1174 ஆம் ஆண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 80 of 1913 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 41 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் சூளி கம்ப சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தின் மேற்குச் சுவரில் உள்ளது.

On the west wall of the mantapa in front of the chuli-kamba shrine in the uttarapathisvara temple.

A record of the chola king Rajadhirajadeva (II) who was pleased to take Madurai (Madura) and Elam (ceylon) in the thirteenth year simha, ba. di 9. Wednesday corresponding to 24th July 1174. Some stones are missing. Seems to record the sale of four women as Devaradiyar to the temple of Thiruvalangadudaiya Nayanar for 700 kasu.

மதுரையும் ஈழமும் கொண்டருளிய சோழமன்னன் (இரண்டாம்) ராஜாதிராஜதேவனின் 13-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. சிம்ஹ, ப, தேதி 9, புதன்கிழமை எனக் கூறப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு, கி.பி. 1174 ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியோடு சமமானது. திருவாலங்காடுடைய நாயனர் கோயிலுக்கு 700 காசுகளுக்கு 4 பெண்களைத் தேவரடியாராக விற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | — |
| ஊர் : | திருசெங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 81 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 42 |
| மன்னன் : | — | | |

இடம் : உத்திராபதீஸ்வரர் கோயில் முதல் கோபுர நுழைவாயிலின் இடதுபுறத்தில் உள்ளது.

On the main gopura of the same temple, right of entrance.

A damaged record in Prajapati. Seems to record the fees on looms, etc., fixed by an agent of Vira-Narasingaraya-Ayyan.

பிரஜாபதி வருடத்தைச் சேர்ந்த சிதைந்த கல்வெட்டு.

வீரநரசிங்கராய அய்யன் என்பவனின் பிரதிநிதி ஒருவனால் தறி போன்றவைகளுக்கு வரி நிர்ணயம் செய்யப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருச்செங்காட்டங்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 82 of 1913 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜ சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 43 |

இடம் : உத்தராபதீஸ்வரர் கோயில் முதல் கோபுரத்தின் நுழைவாயிலின் இடது புறம் உள்ளது.

On the main gopura left of entrance.

A record of the chola king Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajadhirajadeva (II), the date of which is lost. Begins with the introduction kadal-sulnda, etc. Refers to a certain Kaduvangudaiyan Araiyan Atkonda-Nayakan who was perhaps the donar.

சோழமன்னன் ராஜகேசரிவர்மரான திரிபுவனசக்ரவத்திகள் (இரண்டாம்) ராஜாதிராஜதேவரின் காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டில் ஆட்சி யாண்டு கூறப்படும் பகுதி சிதைந்து காணப்படுகிறது. 'கடல் சூழ்ந்த' என்ற மெய்கீர்த்தியுடன் ஆரம்பமாகிறது. கடுவங்குடையான் அரையன் ஆட்கொண்ட நாயகன் என்பவன் கூறப்படுகிறான். இவன் இக்கோயிலுக்குத் தானமளித்தவனாக இருக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 5–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | குலோத்துங்கச்சோழன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் தென்புற அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டின் ஆரம்பமும் முடிவும் காணப்படவில்லை. குலோத்துங்கச் சோழதேவனின் 5–ஆவது ஆட்சியாண்டில், நெற்குப்பை மஹாசபையோர் எண்கண்ணிலுள்ள விண்சாருடையார் கோயிலுக்கு, இக்கோயிலின் காணி உடைய சிவபிராமணர்களுக்கும், ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும், இருபத்தியிரண்டு காசுக்கு நிலம் விற்று இறையிலி செய்துகொடுத்த செய்தியும் நிலத்திற்கு எல்லைகளும் கூறப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . .
2 தன் சக்கரநடாத்தி வீர ஸிங்காஸனத்து [உ]
3 லகுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிர[ா]
4 [ச]கேசரி பந்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
5 ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ரு
6 கற்கடக நாயற்று பூர்வ பக்ஷத்து [ஸ]து தசியும்
7 [பு]தன் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள்
8 அருமொழி தேவ வளநாட்டு இங்கனாட்டு
9 பிரமதேயம் நெற்க்குப்பை மகாஸபை
10 [யே]யாம் பொருமாவறுதி கொலோத்துங்க சோ
11 [ழ] வளநாட்டு இங்க னாட்டு ஸிரமதேயம்

(திருப்பவும்)

12 [பவி]த்தர மாணிக்க சரும்மே*தி மங்கலத்து மஹா[ா]
13 தேவர் திருவிண்சாருடையார் கன்மிகள் ஆதி
14 [ச]ண்டேஷ்வரதேவர் கந்மிகளுக்கும் இக்கோ
15 யில் காணி உடைய ஶிவப்பிராமணன் பாதர
16 ன் நக்கன் [சுந்தர]பட்டன் உள்ளிட்டார்க்கும்
17 . . யரண்டார் திருவெண்காடுடையான்
18 [னுள்]ளிட்டார்க்கும் ஸ்ரீமாகேஷ்வர காணிசெய்
19 [வார்களுக்கும்] விற்று இறையிலிசெய்
20 . . . . நிலத்துக்கு பொருமாவறுதி . . .
21 . . . க்
22 . . . குடுத்
23 . . . .
24 கும் தென்பாற் . . .
25 த்து . . மேல்பாற்க் . . . .
26 . . க்கு கீழ் . . . . . .
27 . . . தேவர் . . . . . .
28 . . லையு . . . . . .
29 லைக் குடுத்தான் . . . . . .
30 இந்நிலம் இ . .
31 கொண்ட காசு பதிந்நெட்டும் . . .
32 . . . இக்காசு இருபத்திரண்டரையும் ஆவ . . . .
33 . . . . கைய்யில் அறக்கொண்டு பொருமாவறு . . .
34 . . . . த்தோம் இவ்வாதிசண்டேஷ்வரதேவ
35 . . . ஶ்வரோம் . . . சைக்க . . . யொகெட
36 . . கும் ெ . . .
37 . . . . திருவகத்தீஷ்வர . . .
38 மஹாதேவர் நிலத்துக்கு

---

* சருப்பேதி என்றிருத்தல் வேண்டும்.

மாவட்டம் : தஞ்சை

வட்டம் : நன்னிலம்

ஊர் : எண்கண்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : குலோத்துங்கச்சோழன்

ஆட்சி ஆண்டு : 5-ஆவது

வரலாற்று ஆண்டு : கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறையின் உபபீடத்திலுள்ள தென்புற மேடையிலுள்ளது.

குறிப்புரை : இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி பகுதி மட்டும் காணப்படுகின்ற துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

1 . . . . . . . .
2 ங்கலி கடிந்து
3 ஆழி நடப்ப . . . வீரஸிங்
4 ஹாஸநத்து புவனி முழுதுடை
5 யாளோடும் வீற்றிருந்தருளிய
6 கோவிராஜகேசரி பந்மரான திரிபு
7 வன சக்கரவத்திகள் ஸ்ரீகு
8 லோத்துங்க சோழ தேவர்க்கு
9 . . . . . .

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : எண்கண்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 3

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயிலின் தென்புற அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை: இக்கல்வெட்டின் ஆரம்பம் கிடைக்கவில்லை. எண்கண்ணிலுள்ள திருவிண்சாருடைய மஹாதேவர் கோயிலுக்கு மூன்று பேர்கள் திருமடைப் பள்ளிப்புறமாக ஐம்பத்தெட்டு காசுகள் பெற்றுக்கொண்டு, நிலம் விற்று, இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு இடையிடையே சிதைந்து காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . .
2 எப்பேர்ப்பட்டனவும் சன்திராதித்தவல் நாங்களே
3 [இ]றுக்க . . செய்யவுங் கடவோமாகவும் இப்ப .
4 . . இசைந்து இக்காசு அய்ம்பத்தெட்டும்
5 . . . . . . . . . . . . . .
6 யிலிப் பிரமா[ணம்] . . . . . . .
7 திருவிண்சாருடைய . . . . . . . . . . .
8 . . தேவர்க்கு இச்சோ . . . . . . . . . .
9 இயிலான கிடாரங்கொ[ண்ட சோழ]
10 னும் இச்செ . . . . . . . . . . .
11 துராந்தக தேவ . . . . . . . . . . .
12 . . . . . வாங் . . . . . வானும்

(திருப்பவும்)

13 . . . . . . . . . இப்பிரம . . . . .
14 எழுதினேந் . . . . . . . . . . .
15 வானை நம்பி . . . . . . . . . . .
16 எழுத்து . . . . . . . . .
17 றக . . . . . . . . . . [பிர]
18 யானம்[பண்ணி]க் குடுத்தோ[ம்] . [திருவி]
19 ண்சாருடைய[மஹா]தேவர் ஆதிசண்டே[ஸ்வர]
20 தேவர்க்கு இச் . . . மங்கலவன் அை . . .
21 இயிலான கிடார[ந்] . . . . . . . . . . . . .
22 . . சோழ . . . க . . . . . . . . .
23 தக தேவனும் திருவேகம்பன் திருவரங்க
24 முடையானும் இம்மூவோம் இந்நிலத்துக்கு
25 இதுவே விலை ஆவதாகவும் இதுவே பொருமாவறு
26 திப்பொருள் செலவோலை ஆவதாகவும் இதுவ
27 ல்லது வேறு பொருமாவறுதிப் பொருள் செலவோ
28 லை காட்டக் கடவாரல்லாதாராகவும் இந்நிலத்தால்
29 . . ள்க சில்வரி பெருவரி திருவாயலில் போன்தகுடிமை
30 க்காணி கொண்டு இந் . . . ஒன் . . . . . . . . . . .
31 யும் பற்று இறையிலி செய்து குடுத் . . . . . . . .
32 . . . . மாய்க்கு ஒருமாவும் இறையிலி ஆக . . .
33 இந்நிலம் ஒன்றே நான் மாவரையும் இ[றையிலிசெ]
34 ய்து குடுத்தேன் சோழமங்கல . . . . . . . . . .
35 . . . லாந கடாரங் கொண்ட சோ . . .
36 . . . . . . . . . . . . . . .
37 மாவரையும் . . . . . . . . .
38 இக்காசு அய்ம்பத்தை . . . . . . .
39 கொண்டு . . . . . . . .
40 அமுது செய்தருள கெக் . . . . . . . . .
41 ளு இறையிலி ஆக இப்படி . . . . . . . . .
42 இறையிலி செய்து குடுத்தே . . . . . . . .
43 வண திருவேகம்பன் மதுராந்த . . . . . எழுத்து . .
44 இப்படிக்கு சோழமங்கலவன் அரயன் திருநீல
45 . . . . . . . . . பல்லவரையன் எழுத்து

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 101 / 1977

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ.ஆ.ப.
GIFTED BY
R. TIRUMALAI I.A.S. (Late)

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : எண்கண்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு :
மன்னன் : —

ஆட்சி ஆண்டு :
வரலாற்று ஆண்டு : கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 4

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான தென்புற மேடையில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டில் ஆரம்பமும், முடிவும் இல்லை. திருவின்சாருடையார் கோயிலுக்கு மூன்று பேர் சேர்ந்து நிலம் விற்று, இறையிலி செய்துகொடுத்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . .
2 . . தகதேவனும் இவன் தம்பி திருவேகப[ன் திருவரங்க]
3 முடையானும் இம்மூவோம் கொலோத்துங்க[சோ]
4 ழ வளநாட்டு இங்கநாட்டு இங்கணன பவித்திரமா
5 [ணி]க்க சருப்பேதிமங்கலத்து உடையார் திருவின்சாரு
6 டைய மஹாதேவர் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு நாங்க[ள்]
7 விற்று இறையிலி செய்து குடுத்த நிலமாவது
8 இச்சோழமங்கலத்து இத்தேவற்க்கு திருமடை
9 [ப்பள்]ளிப்புறமாக விற்றுக் குடுக்கிற
10 [நில]த்துக்கு கீழ்பாக்கெல்லை செம்
11 [பிய]ன் பல்லவரையன் நிலத்துக்கு
12 [மேற்]கும் தென்பாற்க்கெல்லை கிழக்கு
13 . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயிலின் தென்புற அதிஷ்டான மேடைமீது உள்ளது.

குறிப்புரை : கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கொடைக்கு அதிகாரிகள் கையெழுத்திட்டிருக்கின்றனர். கல்வெட்டின் ஆரம்பப்பகுதி கிடைக்கவில்லை. எனவே கொடை கொடுத்த விவரம் தெரியவில்லை.

கல்வெட்டு :

1 . . . . . . . .
2 [செயிவேகன்] குலமாணிக்க தேவனுன உத்தமசோ
3 ழத் தமிழதரையன் எழுத்து இப்படி அறிவே
4 ன் பாலைவாயில் உடையான் மாநீலன் நிச்சய அ
5 டிகள் ஆன இங்கநாட்டுக் கோன் எழுத்து இப்ப
6 டிக்கு இவை சோழ மங்கல வள அரையன் திருவை
7 யாறுடையானேன் இவை என் எழுத்து இப்படி
8 அறிவேன் பாலைவாயில் உடையான் கூத்தன்
9 சோலை அரசன் எழுத்து இப்படி . . .
10 . . . . . . வூருடையான் அ[ரயன்]
11 என்எழுத்து இது சோழ மங்கலத்து திருவகத்தீஸ்வரமு
12 டைய[மஹாதேவர் கோயில் காணி உடைய]ஶிவன் இரா
13 . . அகஸ்தீயந் செழுநிரத்திரன் ஸயிஜைகூ

(திருப்பவும்)

14 ஆநமைக்கு இவ்விராஜாயிராஜ ஶதுர்வேதிமங்கலத்து

15 . . . . . . முடைய மஹாதேவர் கோயிலில் காணி

16 . . . . . . . . . . தியபன் ஆதித்த தேவப்பட்டன் எழுத்து

17 . . . . . . சோழ மங்கலன் அரையன் ஆதி[தவ]

18 [ன்]எழுத்து . . . நெற்குப்பை எரு[துடை]சிவகல்லி[அரை]

19 [யன்]எழுத்து இப்படி அறிவேன் பாலை வாயில் உடையான் கூத்தன

20 [ங்கை நக்கன்] . . . சோழகோன் மூவேந்த வேளான் இவை என் எழுத்து

21 இப்படிக்கு இவை சோழமங்கலவன் அரையன் மாதேவன் இவை என் எழுத்து

22 [இப்ப]டி அறிவேன் பிரமதேய நெற்குப்பை . . . . .

23 [இப்ப]டி அறிவேன் இந்நாட்டு பிரமதேயம் அத்யெதென் [குலைகுத்தி] அரசுபாற்பட்ட

24 . . . டியான் ஆயகோனெழுத்து திருச்சிற்றம்பலமுடையானேன் இவை

25 என் எழுத்து இப்படி அறிவேன் . . . . . . .

26 . . . . . . . . . . . . . இப்படி அறிவேன் ஊர்க்கணக்கு . . . உடையான்

27 . . . . . . . . . எழுத்து இப்படி அறிவேன் கல்லூர்

28 . . . . . . . . . . . எட்டியான் செம்பியன் சோழப்ப

29 . . . . . . . . . . . எழுத்து இப்படிக்கு இவை

30 . . . . . . . . .

31 . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயிலின் தென்புற அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

1 . . . . . . . . .
2 பு செப்பின நிலத்திலெ முட்டின
3 வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்
4 லை நாராயணி மசலுக்கும் குளத்தில் கீழ்கரை
5 க்கு கிழக்கும் வடபாற்கெல்லை நாகவிளா
6 கத்தெல்லைக்கு தெற்கும் ஆக இசைன்
7 த பெருநான்கெல்லையுள் நடுவுபட்டு
8 கொடுஂந்தாள் என்று பேர் கூவப்பட்ட
9 ரூ குழி . . . உம[நா]ல்ரூ . . . . . . . .
10 ரையே யிரண்டு மாவும் . . . . . . . .
11 ந்நிலம் ஒன்றே நாற் . . . . . . . . [தி]
12 ருவிண்சாருடைய ஊஹா . . . . . .
13 ம்அமுது[செய்]தருளு . . . . . .
14 ட்டைப் பிள்ளையா . . . . . .
15 ஜ் தேவ . . . இறையிலி ஆக

(திருப்பவும்)

16 ட்ட ரூ . . . மாவும் நீக்கி நீக்கி[ந]

17 ·ரூ ஈூ வ இந்நிலம் ஒன்றே மும்மாவரை

18 யில் மேனோக்[கின]மரமும் கீனோக்கின கிணறு

19 ம் இத்தா . . . . . . . . காஸ்ரீரிய பட்ட . . . . .

20 ண்டா . . . . . . . . .

21 . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 6–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 13–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | — | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான வடபுற மேடையில் உள்ள தனிக் கல்வெட்டு.

குறிப்புரை : இக்கல்வெட்டில் மன்னன் பெயர் கூறப்படுகின்ற பகுதி சிதைந்து காணப்படுகிறது. முற்றுப் பெறாத இக்கல்வெட்டில் இவ்வூரைச் [இங்கண்] சேர்ந்த திருமிழலை வாச்சியன் உய்ய நின்றாடினான் என்பவன் குறிக்கப்படுகின்றான். இக்கல்வெட்டிலிருந்து வேறு எந்த செய்தியையும் அறிந்துகொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇரா. . . . . . . . . . .
2 யாண்டு ஆறாவது இங்கணை ஸ்ரீபவித்திர மாணிக்க சருப்
3 பேதி மங்கலத்து உடையார் திருவிண்சாருடையாற்கு
4 இவ்வூர் திருமிழலை வாச்சியன் உய்ய நின்றாடினான் ஆ*. . . . . .

* கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 8–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான வடபுற மேடையில் உள்ள தனிக் கல்வெட்டு.

குறிப்புரை: இக்கல்வெட்டில் மன்னன் பெயர் கூறப்படும் பகுதி சிதைந்து விட்டதால், எந்த மன்னன் காலத்தைச் சேர்ந்தது என அறிந்துகொள்ள முடியவில்லை. திருவிண் சாருடையார் கோயிலுக்கு ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக சிவபிராமணன் உய்ய நின்றாடினான் என்பவர் பதினொன்றரை காசுகள் பெற்றுக்கொண்ட செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ . . . . . . . . .

2 க்கு யாண்டு அ ஆவது இ[ங்*]கணுன பவித்திரமாணி [க்க ச]

3 துப்பேதி மங்கலத்து உடையார் திருவிண்சாருடையார்க்

4 கு ஒரு ஸந்தி விளக்கு சந்திராதித்த[வரை] எரிக்க இக்கோ

5 யிலில் சிவப்பிராம்மண . . . . . . க நாதன்

6 உய்ய நின்றாடினுண் ை[கக் கொ]ண்ட காசு

7 இ பதினொன்றறை இ விளக்கும் உ

8 டையார்* . . . .

* கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 12-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | — |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜாதிராஜச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான வடபுற மேடையில் உள்ள தனிக் கல்வெட்டு.

குறிப்புரை : இக்கல்வெட்டு இராஜாதிராஜனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. இங்கணைச் சேர்ந்த வெள்ளாளன் குறிக்கப்படுகின்றான். கல்வெட்டு மிகவும் சிதைந்து, முற்றுப் பெறாது காணப்படுவதால், இக்கல்வெட்டிலிருந்து வேறு எந்த விவரமும் அறிந்துகொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீத் திருபுவனச்ச[க்க*]ரவற்த்திகள் ஸ்ரீ இராஜா
2 யிராஜ தேவற்க்கு யாண்டு ௰௨ வது இங்கணுந பவி
3 த்திரமாணிக்க சருபேதி மங்கலத்து இருக்கும்
4 வெள்ளாழன் பத்தன் அருள் பெற் . . . .
5 டைய . . . . . . . . . .
6 . . . ட்ட பெருமா
7 . . . இவன் தம்பி அ
8 ண . . . . . இவன் தம்பி உடே
9 லா . . . . . ாழம் கைகொ
10 ட்டக . . . . டத்தே புகு*

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 12-ஆவது |
| வட்டம் | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1175-ஆம் ஆண்டு |
| ஊர் | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் | இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடபுறம் அதிஷ்டான மேடையில் உள்ள தனிக் கல்வெட்டு.

குறிப்புரை : இராஜாதிராஜனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருவிண்சாருடையார்க்கு சந்திவிளக்கெரிக்க திருத்தொண்டத்துகையர் மகள் பெரும்பற்றப்புலியூரார் எண்ணரிய திருநாமமுடையானை பொற் கோயில் பட்டனிடம் எட்டு காசுகளை உபயமாகக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜா
2 திராஜ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவ
3 து திருதொண்டத்துகையர் மகள் பெரும்
4 பற்றப்புலியூரார் உபையமாக உடையார் தி[ரு]
5 விண்சாருடையார்க்கு ஒரு சந்தி விளக்கு சந்
6 திராதித்தவரை எரிக்க இக்கோயில் சிவப்பிராம
7 ணந் மாடலந் திருவகதிஶ்வர உடையா(நானா)
8 ந் எண்ணரிய திருநாமமுடையானை பொற்கோ
9 யில் பட்டன் உபெயங்கொண்ட காசெட்டு.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1191 ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 10-A |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடபுறம் அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கனின் பதின்மூன்றுவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக் கல்வெட்டு. திருவிண்சாருடையார் கோயிலுக்கு விளக்கு எரிக்க இங்கணேச் சேர்ந்த வேளாளன் திருவானைக்காவுடையான் என்பவன், கோயிலைச் சேர்ந்த சிவப்பிராமணன் பாரத்வாசி வெண்காடுறைவன் அவிநாசி என்பவனிடம் உபயமாக காசு கொடுத்தது பற்றிக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனசக்கரவற்திகள் ஸ்ரீ மதுரையு
2 ம் இ[1]ழமுங்கொண்(ட)டருளிய ஸ்ரீ ராஜாதிராச தேவ
3 ற்க்க[2] யாண்டு ௰௩ வது இங்கண்ணுன பவித்தி
4 ரமாணிக்க சருப்பேதிமங்கலத்து உடையார்
5 திருவிண்சார் உடையார் கோயில் சிவப்பிராம
6 ணன் பாரத்வாசி வெண்காடு[றை]வன் அவிநா
7 சியான வா......யவரான......இவ்வூ
8 ரில் இருக்கும் வேளாளன் திருவானைக்காவு
9 டையான் ஆந நா[ற்பத்]தெண்ணுயிரப் பிச்
10 சன் பக்கல் சந்திராதி[த்தவரை உ]பையங் கைக்கெ
11 காண்ட விளக்கொ[ன்*]றுக்கு காணி என்காணிபுக்கிடத்தே
12 ய் எரிக்க கடவதாக கை கொண்டேன்

---

1 'ஈழமும்' என்றிருத்தல்வேண்டும்.
2 'தேவற்கு' என்றிருத்தல்வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1200-ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடபுறக் குமுதப்படையில் உள்ளது.

குறிப்புரை : குலோத்துங்கச் சோழனின் 22-ஆம் ஆட்சியாண்டில் காருயில் நங்கை என்பவள் சந்தி விளக்கெரிக்க காசு கொடுத்த செய்தியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஹர: ஸ்வஸ்திஸ்ரீ கு(ல்)லோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு உ௰உ ஆவது காருயில் நங்கை ஸந்தி விளக்குக்கு பண்டாரத்து

2 உபையம்மாக ஒடுக்கின காசு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 12–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1130-ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் | விக்கிரமசோழன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடபுறம் அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை : விக்கிரமசோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருவிண்சாருடைய் மகாதேவர்க்கும், அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் வராகதேவர்க்கும் இறையிலியாக உள்ள நிலத்தின் அளவு பற்றிக் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனசக்கிரவத்திகள் ஸ்ரீ[விக்]கிரம[சோழ]தேவற்கு யாண்டு ய௨ வது ஊர்க்கீழ் இறையிலி நிலை நின்ற படிக்கு உள்வரி கு

2 லோத்துங்கசோழ வளநாட்டு இங்கநாட்டு இங்கணை பவித்திர மாணிக்கச் சதிப்பேதிமங்கலத்து திருவிண்சாருடைய ம

3 ஹாதேவர்க்கும் பிரமீஸ்வரமுடைய மஹாதேவற்கும் திருவிண்சா ருடையார் கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஆழ்வார் ஸ்ரீவ

4 ராகதேவர்க்கும் பெரியதேவர் குலோ[த்*]துங்க சோழதேவர்க்கு சயி வது வரை ஊர்க்கீழ் இறையிலியாய் வ[ரு]கிற நிலத்து

5 க்கு ஊர்க் கணக்குப் பெரும்புலியூருடையானும் [அ]டைப்புவர்ச் சியனிசைந்தபிரான் ஸ்ரீகரஷ்ண பட்டனும் வாச்சியன் இராம தே[வ]

( திருப்பவும் )

6 ன் ஸ்ரீக்ருஷ்ணபட்டனும் இத்தேவர் கே[ாயில்] சிவப்ராஹ்மணந் பாரதாயனும்(க) கனகசுந்தரஜட்டனும் எழுத்திட்ட உள்வரிப் படியும்

7 திட்டுப்படியும் திருவிண்சாருடைய [ம]ஹாதேவர் ஊர்க் கீழ் யிறையிலி ரூ எரு೭ . . . இதில் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் திருநன்த

8 வனமும் திருமடைவிளாகமும் திரு[க்குள]மும் ரூ உ ௯௱௰வூ நீக்கி நீர் ரூ ரு வ ௯ா பிரம்மீஸ்வரமுடைய மஹாதேவர் நீர் ரூ உ ௱கிரு

9 ஸ்ரீவராகத்தாழ்வார் நீர் ரூ ௱ ௴ க்கு புரவுவரி ஸ்ரீகரணநாயகம் கூடலூருடை[யா]ந் எழுத்து புரவுவரி ஸ்ரீகரண

10 நாயகம் . . . . . . . . . . ஸ்ரீகரணநா[ய]கம் [கு]ந்றங்கிழா நெழு [த்து] ஸ்ரீகரணத்து நாயகம் எழிலூருடையாந்

11 எழுத்து புரவுவரி ஸ்ரீகரணத்து முக

12 வெட்டி அண்ணவாயிலுடை[யான்]

13 [எழுத்து] புரவுவரி ஸ்ரீகரணத் . . .

14 [ப]ழையனூ[ரு*]டையா

15 ன் எழுத்து

16 புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி

17 . . வூருடையான் எழுத்து

18 இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்

19 டி மேலூருடையான் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1227-ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான வடப்புற மேடையில் உள்ளது.

குறிப்புரை : இராஜராஜனின் பதினொன்றும் ஆட்சியாண்டில் ஆலத்துடையான் வாரிவேதரன் ஆனி மாதம் முதல் திருவிளக்கு எரிக்கப் பணம் தந்த செய்தியைக் குறிக்கிறது. கல்வெட்டின் இறுதி காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்க்கு யாண்டு ௰ தாவதன் எதிர[ா]*மாண்டு குலோத்துங்க சோழ வளநாட்[டு இங்க]ணநப் பவுத்திர மாணி[க்கச் சதுப்பே]

2 தி மங்கலத்து பிடாகை கொற்றங்குடியில் இருக்கும் ஆலத்துடையான் வாரிவேதரன் இவாட்டை ஆநி மாதம் முத[ல் வைத்த சந்]தி விளக்கு க ம் இவ் . . . .

3 பொலிசை கொண்டு [சன்] சன்யி . . சந்ராதித்தவரை திரு விளக்கு எரிக்[க]* கடவோ[ம]ாக சம்மதி[த்]து சொன் . . ம் ஆதி சண்டேஸ்வ* . . . .

*கல்வெட்டின் இறுதி கிடைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 21-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1199-ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடக்குப் புறத்தில் அதிஷ்டானத்திலுள்ள குமுதப் படையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கச் சோழனின் இருபத்தொன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. பவித்திரமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து சபையார்க்கு அந்தராயம் தவிர முன்னூறு காசும் கொடுக்கவேண்டும் என்று மன்னன் ஆணையிட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு:

1 ஸ்வஸ்தி ஸ்ரீ தி(ரி)புவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொ[ண்]*டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்று[வது] நாள் நூற்றையம்பத்தொன்றினல் பிரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி திருபுவனச் சக்கரவத்திகோனேரின்மை கொண்டான் குலோத்துங்கசோழ வளநாட்டு இங்கணாட்டு இங்கண பவித்திர மாணிக்க சருப்பேதிமங்கலத்

2 (த்)து ஸபையார்க்கு தங்கள்ளூர் முன்பு நெல்லுக்கு நெல்லும் அந்தராயமும் இறுத்து வருகிற படி தவிர ஆட்டை இருபதிண [லாக] கல நெல்லும் கமுகிடவா நிலங்களிட்டு அகர ப்ரஹ்மதேய[ங்]*களுக்கு இறுக்கும் படி முன்னூறு கா[சு]ம் இ[ரு]*பத்தொன்றுவது முதல் தன் முதலாய் இதில் காருக்கு முன்பு

( திருப்பவும் )

இறுத்து வருகிற ஒபாதி நெல்லும் கமுகால் காசு நீக்கி நி[ந்]*ற நெல்லு பசானத்திலும் இறுக்கவும்

3 கடவதாகப் பெறவேணுமென்று காலிங்கராயர் நமக்கு சொன்னமையில் இப்படி செய்யக்கடவதாக சொல்லிக் கல்[லி]லும் இட்டுகொள்ள கடவர்களாக வரிக்கூறு செய்வார்க[ளுக்கும்] . . . . . . இப்படி கடமை இறுக்க எழுதினன் திருமந்திர ஓலை நெறிஉடைச்சோழமூவேந்தவேளான் எழுதி வில்லவராயருங் காலிங்கராயரும் களப்பாளராயரும் வரகுணராயரும் மூவேந்தரையரும் நிகரிலி சோழப் பல்லவரையரும் பி

4 ருதியங்கரையரும் பூலோகபுரந்தரப் பல்லவரையரும் எழுத்தி[ட்*]ட இது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | [13]-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கச் சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 14-A |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான மேடை வடமேற்கு மூலையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. வேளாளன் ஒருவனிடம் பன்னிரண்டு காசுகளைப் பெற்றுக் கொண்டு, சிவப்பிராமணர்கள் இருவர் திருவிண்சாருடையார் கோயிலுக்கு சந்தி விளக்கெரித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்

2 த்திகள் மதுரையும் ஈழமும் கொ[ா]

3 ண்டருளின ஸ்ரீ இரா[ஜேந்திர சோழ தேவ]ர்க்கு யாண்டு [௰௩] வது குலோத்துங்க சோ

4 ழ வளநாட்டு இங்கணு[ட்டுப் பவித்திர] மாணிக்கச் சருப்பேதிமங்கலத்து

5 ங்கலத்து உடையார் திருவி[ண்சாருடையார் கோயிலில்] காணியுடைய சிவப்பிராமண . . . . . . . .

6 [க]ண்ணயகப்பட்டநும் இவ்விருவோம் . . . . காற்றூரில்லிருக்கும் வேளாளந்

7 கூத்தாடுவான் பக்கல் சந்திராதித்தவற் இன்னாயனார் கோயிலிலே ஒரு சந்தி விளக்கு எரி

8 [க்]கக்கடவோம் இவ்விருவோம் கைக்கொண்ட காசு ௰௨ கை

9 க்கொண்டு திருவிளக்கு எரிக்க கடவோமானோம்

10 இவ்விளக்கு எங்கள் காணி புக்க விலைக்கு புகக்கடவ

11 தாகவும்

த. நா. தொ. ஆய்வுத்துறை    தொடர் எண் : 113 / 1977

மாவட்டம் : தஞ்சை

வட்டம் : நன்னிலம்

ஊர் : எண்கண்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் இரண்டாம் இராஜராஜன்

ஆட்சி ஆண்டு : 11–ஆவது

வரலாற்று ஆண்டு : கி.பி. 12-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 15

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் அதிஷ்டான மேடையின் வடமேற்கு மூலையில் உள்ளது.

குறிப்புரை : குலோத்துங்கச் சோழனின் பதினொன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. இவ்வூர் (இங்கண்)வெள்ளாளன் வேதவனமுடையான் நாகனை சேரமான் தோழனிடமும், இவன் தங்கை சோறுண்டியான அன்னதான நங்கை என்பவளிடமும் காசுகள் பெற்றுக்கொண்டு, இக்கோயிலில் காணி உடைய சிவப்பிராமணன் பாரத்துவாசி வெண்காடுதேவன் உலகநாதபட்டன் என்பவன் ஒரு சந்தி விளக்கெரித்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவர்கு யா
2 ண்டு ௰௧ ஆவது இங்கணன பவித்திர மாணிக்க
3 ச்சதுப்பேதிமங்கலத்து உடை[ய]*ார் திருவிண்ச்சாருடை
4 யர்றகு இவ்வூரிருக்கும் வெள்ளாளன் வேதவனமுடை
5 யான் நாகனை சேரமாண்றோழனுக்கு இக்கோயி
6 லில் காணி உடை[ய சிவப்]பிராமணன் பாரத்துவாசி
7 வெண்காடு தேவன் உலோகநாதபட்டனேன் சந்
8 திராதித்தவற் ஒரு சந்[தி விள]க்கு எரிக்க நான் இவன் ப
9 க்கல் உபையங்கொண்ட காசு ௰ . . து இவன் கா
10 ணிபுக்க இடத்திலே புக கடவது இவ்வெள்ளாளன்

( திருப்பவும் )

11 தமக்கை சோருண்டியான அன்னதான [நங்]
12 கைக்கு பாரத்துவாசி வெண்காடு தேவர்
13 அவிஞசி அனவரத தேவர் . . . .
14 . . . . சந்திராதித்த . . . .
15 . . . . கைக் .
16 . . . . பலிசை
17 க்கு நான் இவன் பக்கல் . . . . . கைக்கொண்ட காசு . . . . .
18 காணி புக்க [இடத்தி]ல புகக்கடவது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 12-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் உபபீட மேற்குப்பக்க மேடையில் உள்ளது.

குறிப்புரை : இக்கல்வெட்டு இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். இம்மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெள்ளாளனாகிய நித்த விநோத அரியான் . . . . என்பவன், திருவிண்சாருடைய மகாதேவர்க்கு சந்தி விளக்கு எரிக்க காசு கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ] ஸ்ரீ[திரிபு]வனச் சக்கரவத்திகள்
2 ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு
3 பந்திரண்டாவது கொலோத்து
4 ங்கசோழ வளநாட்டு இங்
5 கணூட்டு பவித்திரமாணிக்கச் சதுப்பே
6 திமங்கலத்து உடையார் விண்சாருடை
7 யார்க்கு இவ்வூரிருக்கும் வெள்ளாழன்
8 தேவன் நித்த[விநோத அரியான்] . . . .
9 இத்தேவற்க்கு சன்திராதித்தவல்
10 எரிய இக்கோயிலில் சிவப்பிராமணா
11 ன் பாரத்துவாசி பெரியாண்[டி]*யான
12 உதையஞ் செய்தான் சுன்தர ப
13 ட்டன் எரிக்க இவந் பக்கல் நான் வை
14 த்த சன்திவிளக்கு இரண்டுக்கு பலிசை
15 . . . . க்க குடுத்த முதல் காசு*

---

* இத்துடன் கல்வெட்டு நின்று விட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு | கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |
| மன்னன் : | இராஜாதிராஜன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் உபபீடம் மேற்குப் பக்க மேடையில் உள்ளது.

குறிப்புரை : இராஜாதிராஜனின் மூன்றாவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருவிண்சாருடையார் கோயிலில் விளக்கெரிக்க பத்து காசுகள் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 த்ரிபுவனச்[சக்கரவத்]திகள் ஸ்ரீ இரா
2 ஜாயிராஜதேவற்கு யாண்டு
3 ௩ ஆவது குலோத்துங்க சோழ
4 வளநாட்டு இங்கணாட்டு ப்ரஹ்மதே
5 யம் ஸ்ரீ பவித்திர [மாணிக்க]சதுப்பே
6 தி மங்கலத்து திரு[ம]ழலைவாச்சியன்
7 . . . . . . . டையான்
8 பட்டன் . . . . இக்கோயில் [சிவப்பிராஹ்ம]
9 ணன் ஹாரத்து வாசி வெண்காடு தேவன்
10 அ . . . . சியான் . . . . சேவாரணபட்ட . . .
11 [இவ்]வூர் திருவிண்சாருடைய நாயநார் கோயி
12 லிலே சந்த்ராதித்தவற் ஒரு சந்தி விளக்கு எரி
13 க்க கடவேனாக உபயங்கொண்ட காசு பத்து
14 இக்காசு பத்துங் கைக்கொண்டு என் காணி . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13–ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | எண்கண் | | |
| மொழி | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் | கரிகால் சோழதேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புறம் குமுதம் ஜெகதிப் படைகளில் உள்ளது.

குறிப்புரை : பவித்திரமாணிக்க சதுர்வேதிமங்கலத்து சபையார்க்கு, தங்களூரில் காணியாளர்கள் இல்லாததால் நிலம் பயிர் செய்வதில் சில கஷ்டங்கள் ஏற்பட்டு, அதனல் நிலம் விற்கப்பட்டிருத்தல் வேண்டும். கல்வெட்டு இடையில் நின்று விட்டதால் முழு செய்தியை அறிந்துகொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பெரியதேவர் கரிகால் சோழ தேவர்க்கு [யாண்]டு ௰க வது வ்ருஸாஉஞ் ெ

2 ச[ய்]*தருளின திருமுகப்படி த்ரிபுவனசக்ரவத்தி கோனேரின்மை கொண்டான் குலோத்துங்[க]

3 சோழ வளநாட்டு இங்கநா[ட்*]டு இங்கணன பவித்திரமா[ணி]க்க சதுவே-தீமங்கலத்து

4 [ஸ]பையாற்க்கு தங்களூரில் காணியாளர் இன்றியும் ............ இறுக்க.........

5 போயும் குடி இருக்கிறுர் தங்களால் பயிர் செ[ய்*]து க[டமையி]ருக்கலாம் நிலமாய் கை ெ(க்)காண்[ட]*

6 [நி]லம் நீக்கி நின்ற நிலம் ஆழ்வானுக்கு இரு[ப*]தாவது வரையும் பற்றிலியான விளை நிலத்

திருப்பவும்

7 திலும் கொல்லை னிலத்திலும் ஸஹெஜைவிலையாக விற்ற நிலம் ஒட்டுக்கு இறுக்கப் பற்று

8 னமையில் இநிலத்து உடல் நீக்கி துண்ட[ம்] உள்ளிது ஊரிலே ஒபாதிது இறுத்து வருகை

9 யில**............

---

* 'கைக்கொண்ட' என்றிருத்தல் வேண்டும்.

** கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1188–ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புற குமுதம், உபபீடம், ஜெகதிப் படைகளில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கச் சோழனின் பத்தாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல் வெட்டு. திருவிண்சாருடையார் கோயிலுக்குச் சந்தி விளக்கெரிக்க இக்கோயிற் காணி உடைய சிவபிராமணர்கள் சிலர் நாலூர் கவுணியன் இளையாழ்வான்பட்டன் என்பவனிடம் 35 காசுகள் பெற்றுக்கொண்ட செய்தியும், இதேகோயிலில் இன்னொரு சந்தி விளக்கெரிக்க இக்கோயில் காணி உடைய சிவபிராமணர்கள் வேறு சிலர், சந்திரசேகரபட்டன் பிராமணி திருமார்பு இடங்கொண்டாள் சாணியிடம் 35 காசுகள் பெற்றுக்கொண்ட செய்தியும் கூறப்படுகின்றன.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் மதுரை கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு பத்தாவது குலோத் துங்க சோ

2 ழ வளநாட்டு இங்கநாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீபவித்திர மாணிக்க ச[துப்பே]திமங்கலத்து நாலூர்கவுணியன் இளையாழ்வான்பட் டன் பக்[கல்] உடையார்

3 திருவிண்சாருடையார் கோயில்க் காணி உடைய சிவப்பிராமணன் பாரத்துவாசி உலோகநாதன் உ[ய்*]யனின்றாடினான் நான தி[ல்] லைநாயகபட்டனும் மாடலன் திருவகத்தீ[ஸ்வரமு]

( திருப்பவும் )

4 டைய கன்னன் அரியாஞை பொற்கோயில் பட்டனும் இக்கோயில் சந்திராதித்தவரை ஒரு ஸந்திவிளக்கு எரிக்க கடவோமாக உபையங்கொண்[ட காசு]

5 முப்பத்தைஞ்சு எங்கள் காணியா[ளஞை] புக்கடதே* எரிக்கும் விளக்கு ஒன்றும் இற்றைஞள் இவ்வூர் வேயன் நடுவில் ஸ்ரீ ஸெவரஹட்டன் ப்ராஹ்மணி திரு

6 மார்வு இடங்கொண்டாள் சாநிபக்கல் இக்கோயில் காணிஉடைய ஸிவப்ராஹ்மணந் கூத்தயன் சிவஞானவஸிதன் திருனட்டப் பெருமாளான விண்

7 ணவிஜயகஹட்டனேனும் எந்தம்பி விஜயகஹட்டனும் எணரியாஞை பொற்(க்)கோயில் ஹட்டனும் . . . . . . . . சந்த்ராதித்த வரை ஒரு ஸந்தி

8 விளக்கு எரிக்க கடவோமாக உபையங்கொண்ட காசு நயிரு இக்காசு முப்பதைஞ்சும் கைகெ(க்)[ாண்டு]** விளக்கு எங்கள் காணியாந நாள்

9 புக்கடதே* எரி(க்)க கடவதான விளக்கு ஒன்று

---

* புக்கிடத்தே என்றிருத்தல் வேண்டும்.

** கைக்கொண்டு என்றிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடபுறம் மகாமண்டப குமுதப்படையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் ஆட்சி காலத்தைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. பவித்திரமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து சபையார்க்கு தலைமாறாக நிலம் விட்டது பற்றிக் கூறப்படுகிறது. அவ்வூரிலுள்ள தரமிலி நிலத்தில், பயிர் செய்யக்கூடிய நிலத்தில் பயிர் செய்துகொண்டு, முன்னர் இறையிலியளித்தபடியே இறையிறுக் கும்படி ஆணையிட்டதாகத் தெரிய வருகிறது. திருமந்திரவோலையின் பெயரும் மற்ற அதிகாரிகளின் பெயரையும் குறிக்கிறது இக்கல்வெட்டு. கல்வெட்டின் ஒவ் வொரு வரியின் கடைசிப் பகுதிகளும் கட்டிடப் பகுதிக்குள் மறைந்திருக்க வேண்டும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவ[ன*]னச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க..............................

2 க சோழ வளநாட்டு இங்கணை பவித்திரமாணிக்க சதுபேதிமங் [கல]த்து ஸபையார்க்கு தங்கள்ளூர் தண்டந் . . . .

3 க்கு தலைமாறு இவூரில் தரமிலியில் பயிர் செயலாம் நிலம் பயிர் செய்து கொண்டு முன்பு இறுத்து வருகிறபடியே . . ண்டு முதல் . . . க [இறுக்கவும் கடவதா]

4 . . . களுக்கும் சொன்னோம் இப்படி செய்க எழுதினான் திருமந்திர ஓலை நெறிஉடைசோழ மூவேந்தவேளான் எழுதி வி[ல்ல]ராய ரும் தொண்டைமானரும் விழிஞத்* .........

* கல்வெட்டின் பிற்பகுதி காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1121–ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரமசோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் தெற்குப்புற அர்த்த மண்டபச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : விக்கிரம சோழனின் மூன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. வளவன் மழையூருடையான் அரையன் வீரசோழன் என்பவனும், அரையன் உய்யவந்தான் என்பவனும், உலகாண்டாநாநபரகேசரி விழுப்பரையனும் ஆகிய மூவரும் திருவிண்சாருடையார் கோயிலுக்கு நிலம் இறையிலியாக விற்றுக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இந்நிலம் திருமடைப்பள்ளிப் புறமாகவும், திருவிளக்குப் புறமாகவும் விற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும் பிள்ளையார் விக்னேசுவர தேவருக்கு திருவிழாப் புறமாக சில நிலங்கள் விற்கப்பட்டதென்றும், அப்பிள்ளையார் இவர்களுடைய பாட்டனரால் எழுந்தருளுவிக்கப்பட்டதென்றும் தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 [த்ரி]ஹுவநச்சக்க[ர]*வத்திகள் ஸ்ரீவிக்கிரம சோழதேவற்கு யாண்டு மூன்றாவது அருமெ[மா]

2 ழிதேவ வளநாட்டு இங்கணாட்டு வளவன் மழையூருடையாந் அரையந் [வீரை

3 ]சாழநும் அரையன் உய்யவனாநும் அரையந் உலகாண்டாநாந பரகேசரி

4 விழுப்பரையநும் இம்மூவோம் குலோத்துங்க சோழ வளநாட்டு இங்கணாட்டு

5 பவித்திர மாணிக்க சருப்பேதிமங்கலத்து [திரு]வெண்சாறுடைய மஹாதேவர்

( திருப்பவும் )

6 திருமடைப்பள்ளிப் புறமும் திருநுந்தா விளக்குப் புறமுமாக ஆதி ஸண்ேஸ்வரர்க்கு

7 நம் . . . . . நாங்கள் விற்றுக்குடுத்துச் சந்த்ராதித்தவற் இறையி லி[யான]

8 நிலமாவது வளவந் மழையூரில் வடக்கில் குளத்தில் வட[க்*]கி லுள் சிறு வாய்க்காலுக்கு

9 வடக்கு ஏறுசெல்க மயக்கலெந்று பேர் கூவப்பட்ட நிலமிறை[யி*] லியில் கிழ்க்கடைய நி

10 ல[ம்*] முக்காலே யரைமாவுக்கும் கீழ்பாற்கெல்லே அரையன் வீர சோழ[ந்*] நிலத்து

11 ......கும் தெந்பாற்கெல்லே உட்சிறுவாய்க்[கா*]லுக்கு வடக்கும் மீபாற்கெல்லே

12 ......மூவ[ரைய[நாந பரகேசரி விழுப்பரையன் நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெ

13 ல்லே மேற்ப்படியானும் அரயன் [உய்ய]வந்தான்......

14 க்கு தெற்கும் ஆக இசைத்த பெருநான்கெல்லேயுள் நடுவு ப

15 ட்ட ரூ ஜ ச மா இந்நில முக்காலே அரைமாவிலு அரைமான

16 ம் இக்கோஇலில் எங்கள் பாட்டர் எழுந்தருளுவித்த பிள்ளே

17 யார் விநெஸ்வரதேவ[ர்*]க்கு திருவிழாப்புறமாக இச்

18 சையிலிலே அனுமுவிக்க பெறுவார்களாகவும் நீக்

19 கி நிலமுக்காலும் விலேயாக கொண்

20 ட காசு ௨ இநிலம் சந்திராதித்தவல் இறையிலி செய்

21 கைக்கு கொண்ட காசு இருபத்து நாலும் ஆக காசு இரு

22 பத்தேழும் ஆவணகளறியே கைச்செலவறக்கொண்டு

23 விலேக்குறவிற்று பொருளறக் கொண்டு சந்திராதித்தவல் இ

24 றையிலி செய்து குடுத்தோம் இந்த............

25 மழையூருடையான் அரையன் சோழனும் அரயன் உய்

26 யவந்தானும் அரயன் உலகாண்டாநாந பரகேசரி விழுப்பரைய

27 நும் இம்மூவோம்......வகைச் சில்வரி மேல்வரி எச்

28 சோறு கூற்றரிசி திருவாய்தலில் போன்ததடிமை

29 எப்பேர்ப்பட்டினவு [நாங்]களேயிறுக்க இ[தேவர்] அனுபவிக்க....

30 ......னும் அரையன் உலகமுண்டானன் பரகே[சரிவிழுப்பரை] யனு

31 ...... இப்படிக்கு இவை மழையூருடையான் எழு

32 த்து இவை மழையூருடையான் அரை[யன்*] சோழன்......முக் காலே

33 ல மேற்க்கடைய [அ]ரைமா தவிர இதன் வடக்கில் [திருவிக்கி ரம] சக்க....

34 யாளரே வல மேற்கடைய கொற்றவாதலில் வாய்க்காலிலே

35 ……கடவோமா[க] [சம்*]மதித்து விட்டுக் குடுத்தோம் இப்படிக்கு இ……

36 ……ருடையான் அரயன் உய்யவன்தான் எழுத்து இப்படிக்கு இவை மழை[ழயூருடையான்]

37 அரையன் வீரைசோழன் எழுத்து இப்படிக்கு இவைமழையூரு…

38 …வாயன் உலகமுண்டானை பரகேசரி விழுப்பரையன் எழுத்து இப்[படிக்கு இவை] இவ்வூர் ஶிவப்பிராமணன் பாரதாயன் சோலைப்பிரான் திருவன……

39 …ன் எழுத்து இப்படி அறிவேன்பாலைவாயில்ஊயில் உடையான்

40 ……எழுத்து இப்படி அறிவேன் இவ்வூர் வைகானஸன் ஆத்தி ரையன் சிங்க……

41 ……இவ்வூர் தச்சன் சித்திரமேழி ஸயிஞ்ஞெஆனமைக்கு

42 . . . . டையான் அரையன் உய்யவஞான் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | [25]-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1203-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப அதிஷ்டான ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் 25-ஆம் ஆட்சியாண்டில் திருவிண்சாருடையார்க்கு விளக்கொன்று உபயமாகக் கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்ரீ(ரி)ஹுவனசக்கரவத்திகள் மருதையும் ஈழமும் கருவூரும் பா

2 ண்டியனும்[1] கொண்டு அருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவ[ர்*]கு யா[ண்]டு உ௫ ௵ வது உடையார் தி[ரு*]வி[ண்*] சா[ரு*] உடையனுயனுர் திருமுந்பே இர[ண்*]டு ச[ந்*]தி விள

3 க்கு சநு(ந்)ராதி[த*]வற் எரிய கடவதாக கோயிலுஊயமாக உய்[ய*] நின்றுடிஞன்[2] .........

1 பாண்டியன் முடித்தலையும் என்றிருத்தல்வேண்டும்.

2 கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 21-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1199 ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்கனின் இருபத்தியொன்றுவது ஆட்சியாண்டில் திருவிண் சாருடையார்க்கு சந்திவிளக்கு எரிக்க உபையமாக காசு கொடுத்த செய்தியைக் கூறுகிறது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்ரீ(ரி)ஹு[வ*]னச்சக்கரவ[த்*]திகள் மதுரையும் இழமும் கருவூரும் பாண்டியன் மு

2 டி[த்*]தலையும் கொண்டு அருளிய ஸ்ரீகுலோ[த்*]துங்க சோழ தேவ[ர்*]க்கு யாண்டு [உ௰க] வது உடை

3 யார் திருவிண்சாருடையாற்க்குச் ச(ந்)ஷிவிளக்கு எரியக்கடவ[1]

---

1 கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1200–ஆம் ஆண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத் தென்புற உபபீட ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் இருபத்தியிரண்டாம் ஆட்சியாண்டில் திருவிண்சாருடையார்க்கு சந்திவிளக்கெரிக்க தானம் கொடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. கல்வெட்டு இடையிடையே சிதைந்து முற்றுப்பெறாது காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் யீழமு[ம்*] கொண்டு பா[ண்*]டியனை முடித்[தலை]யும் கொண்டருளிய ஸ்ரீ குலாத்துங்க

2 சோழதேவ[ர்*]க்கு யாண்டு உ௰உ வது குலோத்துங்க சோழ வளநாட்[டு*] இங்க[ஞ்ன*] பவித்திரமாணிக்கச் சற்றுப்பேதி மங்கல[த்து*]

3 உடையார் திருவிண்சாருடையார்க்கு சிற்றுமுடைச்சி [உ*]பயமாக வைக்கிற ச[ந்தி] விளக்கு[1] ....................

1. கல்வெட்டின் பிற்பகுதிகள் காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 11-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எண்கண் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடக்கு மகாமண்டப அதிஷ்டான மேடையில் உள்ளது.

குறிப்புரை : இராஜராஜச் சோழனின் பதினொன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. ஆராவமுதபட்டன் என்பவன் திருவிண்சாருடையார் கோயிலுக்கு சந்தி விளக்கெரிக்க ஸ்ரீபண்டாரத்தில் அறுபது காசினை ஒடுக்கியது பற்றிக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவ[வன*]ச்சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜ இராஜதே[தே]வ[ர்*]க்கு யாண்டு பதின்ஒன்றாவது குலோத்துங்க சோழ வளநாட்டு வேளா நாட்டு ஸ்ரீஹூ(ம)தேயம் ஸ்ரீ இராசே

2 சந்திர சோழச்சருப்பேதிமங்கலத்து மேல்பிடாகை.........[ம]டப் புறத்து ஆராவமுதுபட்டன் உடையார் திருவிண்சாருடையார் கோயிலுக்கு இவ்வாட்டை ஐப்ப

3 சி விஷு முதல் ஒரு சந்தி விளக்கு பண்டார உபையமாக...... எரியக்கடவதாக அறு[ங்] காசு ஒடுக்கவும் இக்காசால் உள்ள பொலிசைக்கு பண்டாரத்திலே எண்ணைவிட ஒரு சந்[1] .........

---

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10–ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1143–ஆம் ஆண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | இரண்டாம் குலோத்துங்கன் | | |

இடம் : குடுமிநாயனர் கோயில் மகாமண்டபத் தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு, இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தது. அவனது பத்தாவது ஆட்சியாண்டில், இரண்டு ஊர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு குலோத்துங்க சோழ சதுர்வேதிமங்கலமென்னும் பெயரால் அழைக்கப்பட்டதென்றும், திருக்கோத்திட்டை மஹாதேவர்க்கு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு தேவதான இறையிலியாக நிலம் வழங்கப்பட்ட செய்தியும், சாந்திக் கூத்தாடுகிற இராமன் திருச்சிற்றம்பலமுடையான் என்ற விக்கிரமசோழ வர்சஸ்யன் என்பவனுக்கு நிலம் கொடுத்த செய்தியும் தெரியவருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூம[ன்னு] பதுமம் பூத்தவேழுலகுந் தாமு[ன்செய்] தவத்தால் [பருதிவழித்*] தோன்றிய நெடுமாலிவநென சுடர்[முடி சூடி] இருநில [மகளை உரிமையிற் புணர்ந்து] திருமகள் ப[ணை முலை]

2 ச்செஞ்சாந்தணைந்த பருமணி மார்வம் பனிவரை நிகற்ப செயமகள் செழுந்தண் சந்தனச் சுவட்டால் புயமிருகயிலைப் பொருப்பெநத் தோன்றிய நாமகள் தாநுமெங்கோமகன் செவ்வாய்ப் பவ[ளச் சேயொ]

3 ளி படைத்தநனியாநென[த்தவள நன்னிறந் தனித்துடையோரெனப்] புகழ் மகள் சிந்தை மகுழுநாளினுமொரு குடை நிலவு[ம்] பொ[ரு]படைத்திகிரி வெயிலுங் கருங்கலி இருளினைத்

துகிப்ப நீடு பல்லூழியெழுகடல் புறத்தினுங் கோடாச் செந் தனிக் கோ[லினிது]

4 லாவ மீநமுஞ் சிலையுஞ் [சி]தைத்து வாநுயர் பொன்னெடு மேரு விற்புலி வீற்றி[ரு]ப்ப உம்பரியானை ஒரெட்டிநுக்குந் தம்பமென் றுத்தநித்தநி திசைதொறும் [வி*]ஜயஸ்தம்பம் நாட்டி பசி பகைய[ான]

5 து [தீங்கு*] நீங்கி மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க மாதவர் தவமும் மங்கையர் கற்பு[ம]ாதி யந்த[ண]ர் ஆவுதிக் கநலு மீதெழு கொண்டல் வீசு தண்புநலு மேதிநிவளரு[ஞ்]சாதி யொடு நீதியொடும் பிறழாது நிகழப் பாவும் [பழனப்*] [பரப்]

6 பும் பணைக்கை மாவுமல்லது வன்றளைப்படுதல் கநவிலுங் காண் டற்கரிதெ[த]ந வரு[ந்தி] ப்புடையிநும் பல்வேறு புள்ளினும் மல்லது சிறையெந[ப் படுதலி]ன்றி நிறைபெருஞ்செல்வமோட வநி வாழப்[பல்லவர் தெலு]

7 ங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர் கன்நடர் கடாரர் தென்நர் சேர லர் சிங்கணர் கொங்கர் சேதி[பர் திரிகர்]த்தர் வங்கரங்கர் வ[த்*]தவர் மத்திரர் கங்கர் ஜோநகர் கைகயர் சீனரென்றறை கழல் வேந்தரு மல்லாவரைசரும் முறைமை[யில் வருந்தி]

8 த்திறை கு[ணர்ந்திறைஞ்ச அம்[பொன் மலர்க்கொடி செம்பியன் கிழாநடி தன்னொரு மருங்குடனமர்ந்திருப்ப அருள்புரி சிமை யப் பொற்கோட்டிமையப் பாவையுஞ் சிவனும் போல் செம் பொன் வீரஸிம்ஹாஸநத்து [புவனமுழுது]

9 டையாளொடு[ம் வீற்றிருந்தருளிய இராஜகேசரிவன்மரா]ந திரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீகுலோ[த்]துங்க சோழதேவர்க்கு யாண்டு பத்தாவது..............தேவதாந இறையிலி இட்டப

10 டிக்கும் ஒரூராய்க்கூடிந படிக்குழி ௱உ௰ குலோத்துங்க சோழவள நாட்டு பனையூர் நாட்டு [நா]யிற்றூராந தாநதுங்கச் சதுர்வேதி திமங்கலத்து திருக்கோத்திட்டை மஹாதேவற்கு வேண்டு நிமந்தங்களுக்கு இறையிலி தேவதாந

11 இறையிலி மற்றும் முந்துருஷூரரும் பழப்[பெரு] முன்நிறைகட் டிந படியும் ப்ரஹ்மதேயத்து....டுகிற நிலம் ப்ரஹ்மதேயமாய் வரு கிறபடியுந் தவிர்த்து சாந்திக் கூத்தாட இராமந் திருச்சிற்றம் பலமுடையாநாந விக்ரமசோழ வாசஸ்[நு]

12 க்கு காணியாக இரண்டாவது பசாந முதல் குலோத்துங்க சோழ நல்லூரென்[னும்] சீநாமத்தால் ஒரூராய்க்கூடி இதாநதுங்க சருப்பேது மங்கலத்து........தேவர் ஊராகவு இறையிலியாய் வருகிற நிலம் முட்பட இத்

13 தேகூர் சேர கல் சூழ்ந்த ௹௰௹ இத்தேவர் சீகோயிலும் திருமடை விளாகமும் திருக்குளமும் நந்தவனமும் நீக்கி ௹ ௰கரு௰கூ

நால் நி....பாதி பழவிறை ௩௧ ௐ....௬ா வறு நிச்சயித்த ஊரார் அ௰சா ௸ப இந்நாட்டு

14 புதுக்கொண்டக ௹....ஞல் ஊராய் நூா...நிச்சயித்த ௳௹ சா உள் ௸ ப ஆக குலோத்துங்க சோழ நல்லூர் ௹....நால் ௳ கஜகாரர் எ௰௩ா௨ நிச்சயித்த ௳ சஜ௩ரா உள ௸ ப இப் படி தவிர இர

15 ண்டாவது பசாந முதல் வேலி ஒன்றுக்கு ௳ராள் ஆக ௹......ளிக்க மா௳....நதளநால் ௬ ஆக்கி ௳ க ஜ வுராள இவ்வை புரவுவரி ஸ்ரீகரணத்து நாயகம் பந்தணை நல்லூருடையா நெழுத்து இவை புரே ி வரி

16 ஸ்ரீகரணத்து முகவெட்டி தலைநாருடையாநெழுத்து......ஸ்ரீகர ணத்[து] முகவெட்டி தஞ்சாவூர் கிழவநெழுத்து இவை புரவு வரி ஸ்ரீகரண நாயகம் அ....கநெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகர ணநா

17 யகம்மொன்றுழாநெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முக வெட்டி தெ...ருடையாநெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி வாழ்க்கையுடையாநெழுத்து இவை சித்தராயந் நெழுத்து இ

18 வைகளட்டானா...னெழுத்து இவை வில்லவராயநெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் இளங்காரிகுடையாநெழுத்து......... காணியாகக் குடுத்தமை[1]......

1. ஓரிரு சொற்களே இறுதியில் சிதைந்திருக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1137-ஆம் ஆண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | இரண்டாம் குலோத்துங்கன் | | |

இடம் : குடுமிநாயனார் கோயில், மகாமண்டபத் தென்புறச்சுவர், பட்டியில் உள்ளது.

குறிப்புரை : இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் நாலாவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருக்கோத்திட்டை மஹாதேவர் தேவதானமாகிய குலோத்துங்க சோழநல்லூரிலுள்ள நிலங்கள் பற்றியும் ஒரு வேலி நிலத்திற்கு எவ்வளவு நெல் காணிக் கடனாக தரவேண்டுமென்பதையும் கூறப்படுகிறது. மேலும் இக் கோயிலுக்கு வேண்டிய திருமடைவிளாகம், திருநந்தவனம், திருக்குளம் போன்ற வைகளுக்கு எயினூராகிய தானதுங்க சருப்பேதிமங்கலத்தில் நிலம் கொடுக்கப் பட்டிருந்தது என்ற செய்தியும், ஊர்க் கணக்கு போன்ற அதிகாரிகள் பலர் கையெழுத்திட்டுள்ள செய்தியும் தெரியவருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்க்கு யாண்டு நாலாவது தேவ தான இறையிலி இன்னூட்டு......டிந படிக்கும் உள்வரி குலோத்துங்க சோழ வளநாட்டு......நாட்டு......தானதுங்க [சருப்பேதி ம]

2 ங்கலத்து திருக்கோத்திட்டை உமாதேவர் தேவதாநம் இன்னூட்டு குலோதுங்க சோழ நல்......னுள் கஐ காராள நிச்சயித்த டைகஐ ந பள உங இப்படி தவிர இரண்டாவது பசாந முதல்......க்கு டைராள் ஆக இ

3 கில் டை.......ல் பத்தாளுக்கி டைகஐவுராள் இவ[ற்றேடும்] இத் தேவர்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு......இந்நாட்டு எயிந்நூ

( திருப்பவும் )

ராந தாநதுங்கச் சருப்பேதிமங்கலத்து இடுநிலத்துக்கு ஊர் கணக்கந் எயிந்நூருடையான் எழு

4 …க்கந் வதிக்கு மேற்கு தாநதுங்க வாய்க்காலுக்கு தெற்கு கூத் தநூர……க்கு……கிழக்கு……[மூன்]றுங்கண்ணுற்றுக்கு வடக்கு நடுவுபட்ட நிலத்தும் குலோத்துங்க சோழப் பேராற்றுக்கு தெற்கும்……வாய்க்காலுக்கு……

5 கந் வாய்க்காலுக்கு வடக்கும் நக்கந் வதிக்கும் நடுவுபட்ட நிலத் தும்………தேவதாந இறையிலியால் வேறுபிறிந்த குலோத் துங்க சோழநல்லூர் நிலமும் கணவதீஸ்வரமுடையாற்க்கும் திரு மயில……

6 க்கும் திருக்கண்ணபுரத்து ஆள்வார்க்கும் பிடாரி வடவாயில் நங் கைக்……னிறைகட்டிந……ாய் வருகிற நிலமு கொல்லநுக்கு ஊர்க்கீழ் இறையிலியாய் வருகிற நிலமும் நீக்கி (நீக்கி) நின்ற நில[த்*]தும் நாலாங் கண்ணுற்று இ……

7 த்தும் நிலமுமாய் முந்நூ…யாகும் பழம்பெரும் ஸ்ரூஹ்ஷேயமாய் வருகிறபடி கடன் ௳௲ள படியும் தவிர்த்து நாலாவது முதல் தேவதாந இறையிலிப்படி இட்ட நிலமாய் கட்டிந ரூ வேலிஞ ௳கஜ்ராரா…ரூ ளந்த நிச்சயித்த…

8 இப்படித் தவிந்த நாலாவது முதல் வேலி ஒன்றுக்கு ௳ராள் ஆக இறைகட்டின காணிக்கடன் ௳ஜ ளஞய்கா…ஆக்கி ௳ க ஜ ௳ராள் ஆக குலோத்துங்க சோழநல்லூர் மேலிஞ ௳ஜ வுரா ௲ள….ச ஜ நிச்சயித்த ௳ராகு௰உா ஙு……..

9 கட்டிந காணிக்கடன் ௳ ரு தராள் ஞ…ஆக்கி ௳ஜ ளஇநபுரவு வரி ஸ்ரீகரணத்து முகவெட்டி….கிழவனெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி [மு]ந்நூற்[று*]வராயனெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் பந்தணை நல்லூருடை[யானெழுத்து]

10 [இவை] புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி தலைநாருடையான் எழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி [நடயு]ரு டையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் இவை காரிக்குடையானெழுத்து இவை புரவுவரி [வாணிதண்]னெ ழுத்து இவை

11 புரவுவரி ஸ்ரீகரணநாயகம் பொன்னு…. …….நிக்கராயனெழுத்து இவை……..சிக்கராயனெழுத்து இவைகளப்பாளராயனெழுத்து யாண்டு ௬ நான் ஷேவதான இறையிலி இட்டபடிக்கும் கட்டின படிக்கும் உள்வரி குலோத்துங்

12 க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு [ஷேவதானம் தா]னதுங்கச் சருப்பேதிமங்கலத்து திருக்கோத்திட்டை மஹாஷேவர் ஷேவ தானம் இன்னாட்டு குலோத்துங்க சோழநல்லூர் ரூ ரும லினல் ௳ ௲ா……..நிச்சயித்த ௳ஜ ரா ௲ா ஃ ௲ ப இறை

13 கட்டிந காணிக்கடந் ௳ ௫ ௲ ள ௵ல் ௰௧ ஆக்கி.......ரோடும் இத்தேவற்குத் திருமடை விளாகமும் திருநந்தவனமும் திருக் குளமும் உள்ளிட்ட நிலங்களுக்கு வேண்டு நிலமாய் எயின்னூ ரான தானதுங்க சருப்பேதிமங்கலத்து நின்றும் கூடுகிற நில

14 த்துச்கு ஊர்க்கணக்கு எயின்னூருடையான் எழுத்து........க்குப்படி இவ்வூரில் பழவூர் நத்தமென்று பேர்கூவப்பட்ட கொல்லந் நிலத்து வைப்பூர் வதிக்கு மேக்கு வதிக்கு மேக்குத் தானதுங்க வாய்க்காலுக்குத் தெற்க்கு ஆளுங் கண்ணுற்று மூன்றுந் சதிரத் தும் நாலா

15 த்துண்டத்தும் ஏழாங்கண்ணுற்று மூன்ருஞ் சதிரத்தும் நாலாஞ் சதிரத்தும் ஏழாங்கண்ணுற்று மூன்ருஞ் சதிரத்தும் நாலாஞ் சதிரத்தும் இவ்வூருக்கு மேற்க்கு இவ்வாய்க்காலுக்குத் தெற்கு மூன்ருங் கண்ணுற்று முதல் சதிரத்து மே

16 [ற்க்க]டையக்குடை......தும் இதற்கு முன்பு[ ‥ தொண்டு] இறை யிலியால் வேறுபிறிந்த நிலமும் கணபதீஸ்வரமுடைய உஹாதே வர் திருநந்தவனமும் திருத்தக்குளமும் ஸுப்ரஹ்மண்யதேவர் ஸ்ரீகோயிலும் தி

17 ......ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் திருநன்தவனமும் திருமடை விளாகமும் குலோத்துங்க சோழப் பேராற்று நீரோடு காலும் (நீக்கி) நீக்கி நின்ற நிலமாய் முன்னுடையாரும் பழம் பெ......

18 ......ண்டு ... ......திருமடைவிளாகமும் திருநந்தவனமும் திருக் குளமும் உள்ளிட்ட நிலங்களும் உடலாய்க்கூடின ௫ ௲ ௵ ௵ல் ௫ ஓபாதி பழவிறை.....

19 ........................................................... ..

20 த ௳ உதாசு௫ா முக்காலே ௩ ப இறைகட்டின காணிக்கடன் ௳ ௲ ா ௵ல்............இத்தேவற்க்குத் திருமடை விளாக மும் திருநந்தவனமும் திருத்தக் குளமும் உள்ளிட்ட நி

21 லங்களுக்கு.......கு ௫ சூ௫ க்கு புள்ளச் சக்கட நல்வரிசைப்படி ஓபாதி ௳...௲ ௩பசூ ல் நிச்சயித்த ௳ சூ௰௫ா நீக்கி ௫ ௫௰ ௵ல் ௳ ௩௰ளாசு௩ ப நிச்சயித்த ௳௲ ரா ௩பசள ... இறைகட்டின காணிக்கடன் ௳ இதன்

22 ....தாளுக்கி ௳....இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் பொன்று....நெ ழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம் தலைநாருடையாநெ ழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாயகம்....ணந் னெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரண

23 முகவெட்டி [எழுத்து] இவை விலாட[த்தரை]யநெழுத்து இவை கச்சியராயநெழுத்து இவை களப்[ப்பா]ளராயநெ[னழுத்து]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1238 ஆம் ஆண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : குடுமிநாயனர் கோயில், மகாமண்டபத் தெற்குப் புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் இராஜராஜ சோழனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட இரு சந்தி விளக்குகள் பற்றியும், இம்மன்னனின் 18-வது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட சந்தி விளக்குகள் பற்றியும் கூறப்படுகின்றன. இக்கோயிலில் முப்பதுக்கும் அதிகமான சந்தி விளக்குகள் எரிந்ததாக தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவநசக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு உ௰உ ஆவது இத்தேவர் தேவ

2 தாநம் குலோத்துங்க சோழநல்லூரில் காணியுடைய வேளாளன் மருதஞ்சேரியுடையா

3 ன் திருவேகம்பன் திருவா......கில்லாடுவர் ஆர(ா)ண்டு(ய)ன் மறைக்காடன் விழுமியானும் இவன் [தம்]

4 பி ஆட்கொண்டானுந திருமறைக்காடுப்பட்டனு[ம் ப]க்கல் உபயமாகக் காசு நாலு [குடுத்]து வைத்த சந்

5 தி விளக்கு ஒன்றும் இக்கோயிலில் தபஸி[நம்]பியாரூர்ப்பிச்சன் ஆத்துயன் பள்ளிகொண்டான்

6 இருணீக்கப்பட்டன் பக்கல்...... பசு க விட்டு வைத்த உபைய ஸந்திவிளக்கு ஒன்றும் இத்தேவற்கு

7 யாண்டு ௰எ வது ஆனி மாஸத்து வேட்கோவன் நிலம் மா...... சிற்றம்பலமுடையா

( திருப்பவும் )

8 ன் பஞ்சநெதிவாணன் சிவப்ராஹ்மணர் பொதுமையிலான.........
இருபத்தைஞ்சும் குடுத்த

9 ந்த்ராதித்தவர் எரிய வைத்த திருநுன்தா விளக்கு ஒன்றும் திரு
விடைமருதில் வேட்[கோவன்]

10 நா......ருடையான் இடங்கொண்டான்.........மருதன் காஸ்யபன்
மறைக்காடு......

11 ட கொண்டான் வசம் நாலு காசு குடுத்து உபையமாக சந்திரா
திதவர் எரிய வைத்த சந்தி விளக்

12 கு ஒன்றும் இவை இறக்குவார் மெங்கை கரையிலே நூறுயிரங்கு
ரால் பசு குத்திநான் பாவங்கொ

13 ள்[வான்] முன்பில் சோமருடையான் காஸ்யபன் புற்றிடங்கொண்
டான் திருவெண்காடு பட்டன்

14 வசம் காசு நாலு குடுத்து சந்நதியில் திருக்குத்திவிளக்கில் மேல்
இரவை சந்தி எரிய சந்திரா[தித்தவல்] உ

15 டையஞ் செலுத்த வைத்த விளக்கு ஒன்றும் மெ வது கோவெறு
சேவடி அமல[னை]...திருப்ப

16 ள்ளி எழிச்சி உழக்கெண்ணையால் நமு விளக்கு ஏற்றி சிறுகாலே
[ஸாம] பூஜிக்குமளவும் எரிக்க சிவப்ராஹ்மண

17 ர் பேர் உமையில் உடையமாக காசு நாற்பது குடுத்து எண்ணெ
ஊத ஞு க்கும் விளக்கு நமு[ந]

18 பதிநெட்டாவது நென்மலிநாட்டு கோட்டூருடையான் மாணிக்கன்
.........சிவப்ரா[ஹ்மணன் கா]

19 ஸ்யபன் புற்றிடங்கொண்டான் திருவெண்காடுபட்டன் வசம் காசு
ஆறு குடுத்து உபையம் வைத்த சந்தி விளக்கு [ஒன்று]

20 பதின்எட்டாவது நித்த விநோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து
பட்டமுடையான் கூஞண்டானுக்குடலாக குலோத்துங்க சோ

21 ழ வளநாட்டுப் பனையூர் நாட்டு எயின்நூர் கிழவன் சோறு
டையான் மகள் திருவாண்டி சிவப்ர(ா)ஹ்மணன் காஸ்ய

22 பன் புற்றிடங்கொண்டான் திருவெண்காடுபட்டன் வசம் ஆறு
காசு குடுத்து சந்திராதித்தவரை உ

23 டையஞ் செலுத்த வைத்த சந்தி விளக்கு ஒன்று

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 4-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1150-ஆம் ஆண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜ சோழன் | | |

இடம் : குடுமி நாயனார் கோயிலின் மகாமண்டப வடபுற ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : இரண்டாம் இராஜராஜனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இது. திருக்கோத்திட்டை உடைய நாயனார்க்கு, சிவப்பிராமணன் குமுதவன் திருக்கோத்திட்டையாளுடையான், எயின்னூர் வெள்ளாளன் உம்பன் குளுந்தான், சேவறு சேவடி அம்பலவன், எயின்னூர் வெள்ளாளன் திருவரங்கன் ஆகிய நால்வரும் ஆளுக்கொரு சந்தி விளக்கு வைத்த செய்தியை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இவர்களுள் சிலர் சிவப்பிராமணரிடமும், சிலர் தனி நபரிடமும் விளக்குக்குரிய முதலாகிய காசினை அளித்து கொடை செய்வித்ததாகத் தெரிகிறது.

கல்வெட்டு :

1 பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை விதிநெ[றியளித்துந்] தழைப்ப வருமுறை உரிமையில் மணிமுடிசூடித் திங்கள் வெண்குடை திசைக்களிரெட்டும் தங்குதனிக்கூடந்

2 தாநெனெ விளங்க[க்க*]ருங்கலிப் பட்டியைச் செங்கோல் துரப்ப பொருகதிராழி புவிவளந்துடந் [வர வில்லவ ரிரட்]டர் மீனவர் சிங்களர் பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய எண்ணரும் கதம்பம் மண்ணகம் புணர்ந்து செம்பொன் வீரஸிம்ஹாஸன

3 த்து உலகுடை முக்கோக்கிழாநடிகளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி[கள் ஸ்ரீரா]

( திருப்புக )

ஜராஜதேவற்கு யாண்டு ௬ வது உடையார் திருக்கோத் திட்டை உடையாற்கு ஸந்தி விளக்கெரிக்கைக்கு உபையமாக இக்கே

4 காயிலில் காணி உடைய சிவபிராமணன் ம முதவன் திருக்கோத் திட்டையாளுடையாந் தன் காணிக்கு இராஜப்பெ.......[1] கைக்கு உடலில்லாமையிலிவநுக்கு [காரிகை] மங்கலத்து சங்கரப் பாடி யாந் தேவன் தோன்றீசன் ⅁ ௫ குடுத்து வைத்த ஸந்திவிளக் கொன்று

5 ம் சிவப்பிராமணர் பொதுமையிலே காசுங் குடுத்து எயின்நூர் வெள்ளாளன் உம்பன் குளுந்தாந் வைத்த உபைய ஸ௦யி விளக் .......[2] சோழ தேவற்கு யிசு வது செ . வுறுசேவடி அம்பலவன் காசு உ குடுத்து சீருடையாந் திருச்சிற்றம்பலமுடையாந் பக்கல் வைத்த விளக்கு ⅁[3]

6 எயின்னூர் வெள்ளாளந் திருவரங்கன் மணவ....சிவபிராஹ்மணர் பொதுமையில் குடுத்த காசு [க௫ யினல் உபை]ய ஸ௦யி விளக்கு ⅁[4]

---

1, 2-புள்ளியிட்டுள்ள இவ்விடங்களில் உள்ள எழுத்துக்கள் பிற்காலத்தில் செய்த திருப்பணி யின் விளைவாக காணாமல் போய்விட்டன.

3, 4-⅁- என்பது ஒன்று என்பொருள்படும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1188-ஆம் ஆண்டு |
| ஊர் : | கோட்டூர் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்க சோழன் | | |

TAMIL NADU STATE DEPARTMENT OF ... LIBRARY. Acc No ---- Date ---- MADRAS

இடம் : குடுமி நாயனார் கோயில் மகாமண்டப வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனின் பத்தாவது ஆட்சியாண்டில் இக்கோயிலிற் காணியுடைய சிவபிராமணர்களில் ஆத்ரேயன் இருள் நீக்கி ஆலால சுந்தரபட்டன், காஸ்யபன் காடுடையான் புற்றிடங் கொண்டான் ஆகிய இருவரும், இறைவனுக்கு அமுதுபடிக்காக கொடுக்கப்பட்ட நெல் நாற்பது கலத்தினையும், இரண்டு சந்தி விளக்கு எரிப்பதற்கு கொடுக்கப்பட்ட காசு இருபதினையும் விளக்கு ஒன்றுக்கு காசு இருபதினையும் பெற்றுக்கொண்டு, பெற்றுக்கொண்ட அம்முதலுக்கு [நெல்லும், காசும்] வட்டி செலுத்துவதாக சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவநச் சக்ரவத்திகள் மதுரை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு பத்தாவது குலோ

2 த்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாட்டு உடையார் திருக் கோத்திட்டையுடையார் தேவதான[த்]து குலோத்துங்க சோழந

3 ல்லூர்......இத்தேவர் காணியுடைய சிவப்ராஹ்மணரில் ஆத்ரேயனி ருணீக்கி ஆலாலசுந்தர பட்டனும் காஸ்யபனிருவென்

4 காடுடையான் புற்றிடங் கொண்டானும் பொன் கொண்டு பொலியூட்டு இவ்வூர் [நத்த]த்து தெற்கிற் திருவீதியில் மேற் கடைய...............

5 யிருத ஸ்ரீகரண விஜய..............படி திருவமுதரிசி இருநாழிக் கும்........க்கறி கைக்கொண்ட நெல்லு நா

(திருப்பவும்)

6 ற்பதின் கலமு[ம்*] ஸந்தி விளக்கு [இரண்டி]ற்கு இரு.........
கைக்கொண்ட காசு இருபதும் விக்கிரமர் பக்கல் விளக்
கொன்று

7 க்கு கைக்கொண்ட காசு இருபதும் [நெல்]லுங் காசு முதல்
[நிற்க]ப் பொலிசைக்கு நாங்களு[ம்*] மெங்கள் வம்ஸத்தாரு[ம்*]
சந்த்ராதித்தவ

8 ரை செலுத்துவோமாக ஸம்மதித்தோம்

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : கோட்டூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : மூன்றாம் குலோத்துங்க சோழன்

ஆட்சி ஆண்டு : 3-ஆவது
வரலாற்று ஆண்டு : கி. பி. 1181-ஆம் ஆண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 6

இடம் : குடுமி நாயனார் கோயிலின் மகாமண்டப வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டில் இவ்வூர் மகா சபையோர், திருகோத்திட்டை நாயனார் கோயிலில் இருந்து 100 காசுகள் பெற்றுக் கொண்டு, அதற்கு பொலியூட்டாக [வட்டியாக] எட்டுமா நிலத்தினை இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவநசக்ரவத்திகள் ஸ்ரீ [குலோத்துங்]க சோழ தேவற்க்கு யாண்டு மூன்றாவது குலோத்துங்க சோழ வள நாட்டு ப[னையூர் நாட்டு]
2 திருக்கோத்திட்டை நாயநார் கோயிற் ஆதிசண்டேஸ்வரதேவர் கந் மிகளுக்கு இவ்வூர் [ஸ]
3 பையோம் பொன்கொண்டு பொலியூட்டாக இறையிலி செய்து குடுத்த நிலம் க வாய்க்காலுக்கு [மேற்]
4 க்கு கிழக்கு புத்தாறான குலோத்துங்க சோழ பேராற்றுக்கு தெற்கு ஆறாங் கண்ண[ாற்று] சதிரத்து எத்து
5 . மேற்கடைந்த நிலத்து மேற்கடைய பழ......ள் பட நிலம்...
6 ......இன் நிலம் எட்டு மாவும் இத்தா...உத்த...
7 ......[கா]சு நூறு இக்காசு நூறும் கொண்டு...
8 உஹா ஸபையோம் :-

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 3-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1149 |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : குடுமிநாயனார் கோயில் மகாமண்டப வடபுறச்சுவரில் உள்ளது.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜனின் மூன்றாம் ஆட்சியாண்டில் சாத்தனூருடையான் கங்கன் மூளைத்தான நாயனாரும், இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிய வன் மறைக்காடன் ஆட்கொண்டானை திருமறைக்காடு பட்டனும், திருக்கோத் திட்டை மகாதேவருக்கு ஒரு சந்தி விளக்கு எரிக்க பத்து காசுகள் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனச்[ச]க்கரவத்திகள் ஸ்ரீராஜாயிராஜதேவற்கு யாண்டு மூன்றாவது பாண்டிகுலாசனி வள

2 நாட்டு எயினூட்டு [எயி]நூரில் சாத்தனூருடையான் கங்கன் மூளைத்தான நாயனார் திருக்கோத்திட்டை

3 யுடையார்க்கு ஒரு சந்தி விளக்கு சந்திராதித்தவரை எரிக்கைக்கு இக்கோயிலில் காணியுடைய சிவப்பிராமணந் காசியவ

4 ன் மறைக்காடன் ஆட்க்கொண்டானை திருமறைக்காடு பட்ட னும் குடுத்த காசு பத்து வைத்த சந்தி விளக்கு ஒன்று

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11,12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : குடுமிநாயனூர் கோயில் மகாமண்டப வடபுறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டு கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு :

I

1 .........................................
2 ண்டும் ஒரு விசை கைக்கொண்டிண்டிய புக............
3 தந்கடல் வடவது போல சேனையை......
4 ட்டமலே நாட சக்கர நிறுத்த ஏழிசை வல்ல எழில்
5 ................................

II

1 ................................
2 கூ...டையார் வாடி மணம் புணர்ஞ...
3 யிருந்தருளிய ஸ்ரீகொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு கயிசு வது துலாநாயற்று அபரபக்ஷத்து....

III

1 ................................
2 க்க பணியால் எழுதிநேன் இவ்வூர் மழ....

( திருப்பவும் )

3 ...ளை குணரேதம் வெந்கட்ட....

4 ..................................

## IV

1 ..................................

2 சன்ஞாதித்த வரை எரிக்கைக் குடுக்கையில் காணி...

3 வழக்கன்று பட்ட ... பன்னிரண்டு குடுத்து வைத்த...

4 ..................................

## V

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவன ஸக்ரவத்திகள் ஸ்ரீ இராச....

2 டைய சிவப்ப்ராமணந் காபியபன் விழுமியான்தி....

3 சன்தி விளக்கு ஒன்றும்.........

4 ..................................

## VI

1 ..................................

2 யகளும் உள்பட கழ....

3 சந்திராதித்தல் வரை செ....

4 ..................................

## VII

1 ..................................

2 வந் சிற்றம்ப...

3 [ப]க்கல் உபைய...

4 விளக்கு ஒன்று...

5 .... ந இக்கோ...

6 ..................................

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கோட்டூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : குடுமி நாயனார் கோயில் மகாமண்டப தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு :

I

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சக்கரவத்திகள்....
2 முண்டா சன்திவிளக்கு இரண்டு உபையஞ்....
3 ராதி[த்*]தவரை செல்லுவிதாக சந்தி விள்க்கு...
4 .................................

II

1 .................................
2 ....ம் கொட்ட....பேர் கூவப்பட்ட நிலம் ரு ரு ஞல்....
3 ...ந்துந்...வியா...கைய்வழியால் கொண்ட காசு உம்ரு இன்னி லத்தில்
4 ...நாலு காசு கொண்டு இதுக்குப் பரிவற்தனையாக விட்ட பொன் கொண்டாரே....
5 ....படி ரு உம் இதன் தெற்கு செவே...திருச்சிற்றம்பலமுடையாற்கு விற்று...
6 ஞல் ரு ரு ல....கும் கீழ் முதல்...இவர்கைய்வழியால் கொண்ட காசு....

( திருப்பவும் )

7 ன நிலம்...புறமாக விற்று இறையிலி செய்து குடுத்
8 ...சிற்றம்பலமுடையார்க்கு....இவர்கள் வமசத்தார்க்கும்...
9 ....வாசலில் போந்த குடிமைகள் எப்பேர்பட்டனவும்
10 ......பெறுவாராக......கல்லில்.......
11 ..............................

## III

1 ..............................
2 ...இவ்வூர் மய...
3 அரைமாவரைக் காணி...
4 டியன் ஆலூர் நாட்டு...
5 நண்....மூவேந்த வேளாநேன்....
6 க்கு இவ்வை கூத்தூருடையான்....
7 ணபுரமுடையாநெழுத்து இப்படிக்...
8 சக்குடையாந் வேளான்....
9 . . . . . . . . . . . . . . . .

## IV

1 . . . . . . . . . . . . . . . .
2 பி . திருக்கோ...
3 வந்தம் பிச்...
4 ..............................

## V

1 . . . . . . . . . . . . . . . .
2  மு சுரு வது
3 யிரத் தொருவந்...
4 நல் பசு ஒன்றும்
5 . . . . . . . . . . . . . . . .

## VI

1 . . . . . . . . . . . . . . .
2 ...பட விற்றி...
3 ....நா நூறும்....
4 ....ன நிலத்தில் தெற்கு....
5 ....ம் செய்து குடுத்த....
6 ...காசு சமக மதிழ் முதல்...
7 ...யிந நம்பியாரூர்ப் பிச்சன்...
8 . . . . . . . . . . . . . . .

## VII

1 . . . . . . . . . . . . . . .
2 கோத்திட்டை உடையாற்க்கு ஒரு
3 பதிமங்கல[த்]து...
4 ரதிராய தேவற்க்கு யாண்டு யிரண்டாவது நாயனு...
5 ருச்சிற்றம்பல பட்டன் வசம் உபையமாக தானது...

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 10-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 917 |
| ஊர் : | புத்தகளூர் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் பராந்தக சோழன் | | |

இடம் : இடிபாடுற்ற சிவன்கோயிலில் தக்ஷிணாமூர்த்தி கற்சிலையின் பின்புறமுள்ள கல்வெட்டு.

குறிப்புரை : கோப்பரகேசரிவர்மன் முதலாம் பராந்தக சோழனின் பத்தாவது ஆட்சியாண்டில் இக்கோயிலில் உள்ள பரமசுந்தரதேவர்க்கு இரண்டு மா நிலம் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்து விட்டதால் பிற விவரங்களை அறிந்து கொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 கோப்பரகேஸரிவந்மற்க்கு
3 யாண்டு ௰ ஆவது பாம்பூர் நாட்
4 [டு] ப்ரஹ்மதேயம் புத்தகை[ளூ]
5 ...ஸ்ரீகோயில் பரம
6 ஸுந்தரதேவர்க்கு கை...
7 [இ]ரண்டு மா நிலம் நக்ஷா
8 ...யன் எழுந்தருளு....
9 ......................................

---

கல்வெட்டின் இறுதி சிதைந்து விட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 35-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1213 |
| ஊர் : | திருப்பாம்புரம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 94 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் முப்பத்தைந்தாவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருப்பாம்புரமுடையார் கோயில் தேவரடியாரில் உடையவளான நாற்பத்தெண்ணாயிரமாணிக்கம் என்ற பெண், இக்கோயிலில் திருவாசுரநாயனாரையும், பெரிய தேவரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவித்த செய்தியும் அக்கோயில் மாஹேஸ்வரர்கள், அத்தேவரடியார் பெண்ணுக்கு சில உரிமைகள் வழங்கிய செய்தியும் கூறப்பட்டுள்ளது.

திருமார்கழி திருவாதிரை, திருஅம்பாவை, எழுப்புப்பாவை ஆகியவைகள் கூறப்படுகின்றன. இக்கல்வெட்டில் கோயில் கணக்கு, ஸ்ரீகாரியம் செய்பவன், மாஹேஸ்வரக் கண்காணி ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலை]
யுங்கொண்டு வீரா அபி[ஷேகமும் வி]ஜயா அபி[ஷே*]ஷகமும்
பண்ணி அருளிந ஸ்ரீதிருபுவன வீரதேவர்க்கு யாண்டு முப்பத்
தஞ்சாவது தனுநாயற்று பூவ-ஏபக்ஷ[த்]து நாயற்று கிழமையும்
ஸஷ்டமியும்

2 ...கோயில் ஆதிசண்டேஶ்வரதேவர் தேவர்கன்மிகளோம் இக்
கோயில் தேவரடியாரில் உடையவளான நாற்பத்தெண்ணாயிர
மாணிக்கம் இன்னாயநார் கோயிலுக்கு திருவாசுரநாயநாரையும்
பெரிய தேவரையும் ந[ாச்சியாரையும்].......[இ]

3 (ை)றயிலியும் செய்து திருக்கற்றளி செ.........பெற்றிமையில் இக்
கோயில் திருவெழுச்சியில் அ . கடிசற்க்க முறையும் திருவேங்

( திருப்பவும் )

டையில் முத்தடையும் திருமார்கழி திருவாதிரை திருஅம்பாவை எழுப்புப்பாவையும்......

4 ...வற்கத்தாற்கும் இக்கோயில்......தேவர் கன்மிகளோம் இவை கோயில் கணக்கு முன்னூற்றுவப்பிரியன் எழுத்து இவை சீகாரியம் தென்னவன் மூவேந்தவேளான் எழுத்து இவை ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி கொண்டான் எழுத்து ...

இவை தேவகன்மம் முன்னூற்றுவபட்டன் எழுத்து

இவை பால்ருவாயன் எழுத்து।

இவை அமு[தன்] சம்பன்தன் எழுத்து।

மாவட்டம் : தஞ்சை
வட்டம் : நன்னிலம்
ஊர் : திருப்பாம்புரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி. பி. 13, 14-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் முகமண்டப வடபுற அதிட்டானத்தில் உள்ளது.

குறிப்புரை : தொடக்கமும் முடிவும் இன்றி இடையிடையே சிதைந்து காணப்படுகிறது, இக்கல்வெட்டு. இக்கோயிலில் ஒரு இறைவனின் திருவுருவத்தை எழுந்தருளுவிப்பது பற்றி கூறப்படுகிறது. மேலும், கோடணீசுரமுடையார்க்கு பூஜைக்கும் திருப்பள்ளித்தாமத்திற்கு அல்லது திருப்பள்ளி எழுச்சிக்கும் தானம் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனத்தெரிகிறது. விவரம் அறிந்துகொள்ள இயலாதவாறு, கல்வெட்டு சிதைந்து இறுதிப் பகுதி காணப்படவில்லை. முன்னூற்றுவப்பிரியன் என்பவன் அப்போது கோயிலில் எழுந்தருளியிருந்ததாக கூறப்படுகிறது. முன்னூற்றுவப்பிரியன் என்பவன் இவ்வூர் கல்வெட்டு எண் 4, 6-ல் ஊர்க் கணக்கு எனக்கூறப்படுகிறான். இவனும் அவனும் ஒருவனாகத்தான் இருத்தல்வேண்டும். மேலும் அக்கல்வெட்டுகள் மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்தைச் சார்ந்தது. எனவே இக்கல்வெட்டும் அதே மன்னனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்ததாகவே இருத்தல் வேண்டும்.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

2 யில் முன்பு செல்கவிடையா............வத்தி.. ...சித்தளியிலே ஒரு நாய[கன்] எழுந்தருளிவிக்கக் கடவனு[க] இவூ[ர்]ப்பிடாகை ..............................உய்யக்கொ.......................இக்கோவில் [ராக]மாண்டானடிங்கல் விழிகொண்ட[*]பணி...

3 அரிசிச்சோறு இடகடவதாக [இக்]கோயில் எழுந்தருளி இருக்கு[ம்*] மு[ன்*]னூற்றுவப்பிரியன் எழுத்து இப்படிக்கு இவை கவுசியன் சிவதவனபெரு.....இவை....இக்கோடணீசுரமுடையார்க்கு பூசைக்குந்திருப்.........இநாயனர்.........சொன்னோம் பணியால் ஊர்கண்ட[1]..........

1. கல்வெட்டின் இறுதி காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 31*-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1209 |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 96 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன்* | | |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயிலின் அர்த்தமண்டப வடபுறப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : அருள்மொழி பிரம்மராயர் என்பவர் குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையாரை வேண்டிக்கொண்டதற்கிணங்க, அச்சபையினர் ஊர்கீழ் இறையிலியாக நிலம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. அன்றியும், கோயில் வழிபாட்டுச் செலவிற்காக காசு இரண்டாயிரமும் பிற செலவுகளுக்காக அதாவது காவிரியிலிருந்து நீர் கொண்டு வரும்ஆளுக்கு கூலி கொடுத்தல் போன்ற செலவுகளுக்காகக் காசு ஆயிரமுமாக மொத்தம் 3100 காசுகள் கொடுத்த செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ..........................................................

2 அபிஷேகமும் பண்ணியருளின ஸ்ரீதிரிபுவன சோழ.......

3 ங்கச்சோழச் சருப்பேதி மங்கலத்து மகாஸவையோம்

4 ...ளமாக ஊர்கீழ் இறையிலியாக விட்ட நிலத்து

5 ...ம் காவேரிக் கரை வினியோகமும் காசு கொள்ளா இ

6 [அருள்மொழி] பிரம்மராயர் ஸவையாரை வேண்டிக்கொள்ள

7 ...நான் நூற்றெண்பத்தொன்றிஞல் உய்யக் கொண்டார் வள நாட்டு உடையார் திருப்பாம்புரமுடையார் கோயில்......தேவர்களுக்கு பாம்பூர் நாட்டு பாம்புரமான குலோத்துங்கச் சோழச் சருப்பேதி மங்கலத்து ஊர்கீழ் இறையிலி இட்ட

(திருப்பவும்)

8 [இர]ண்டு மாவும் பின்பு விட்ட நிலம் ஒன்றரையே மூன்று மா . டி...முக்காட்டு படி...ந்தக மாற்றி நிலம் ஒன்றே முக்காலே... ...மும்மாவும் முந்திரிகை கீழரையே இரண்டு மாவும் ஆக நிலம் ஏழே அரைமா முந்திரிகை கீழரையே இரண்டு

9 ...த்த நிலம் முக்காலே ஒரு மாவும் செம்பியன்...த்விறத்த நிலம் முக்காலே நாலுமாவும் ஆக நிலம் அஞ்சே காலே அரைமா முந்திரிகை கீழரையே இரண்டு மாவுக்கு இருபத்தெட்டாவது முதல் முப்பத்தோருவது [வரை]

10 இத்தேவதானம் திருக்கைகே கூடிப்புறமாய் சேந்த மங்கலமுடை யான் இறுக்கும் நிலத்துக்கு அந்தராய...மற்றும் பத்து.... ...யில் இந்நிலம் பாதி முப்பத்தொன்றுவதுக்கு கழித்த காசு கொ...

11 காசு மூவாயிரத்து ஒரு நூற்று இதில் நர்யனூர்[க்*]கு உடலில்லா மையில் பூசைக்கு உடலாக நாங்கள் குடுத்த காசு இரண்டாயி ரத்தொருநூறு நீக்கி காசு ஆயிரங்கைக் கொண்டு முப்பத் தொன்றுவது கார்வரை அந்தராய...

12 க்கு இடும் ஆளு கூலிக்கு ரு கண்டும் காசு உள்பட்டுக் காசு ஆயிரம் கைக்கொண்டு இக்காசு முவ்வாயிரத்து ஒரு நூற்றுக் கும் [இநாதங்] குடுத்தோம்...

13 ...மாளுக்கும் காவேரிக் கரைக்கு இடும் ஆளுக்கு கிட....கண்டு ம் காசுக்கும் பாட்ட பற்றுயம் இருபத்தேழாவது வரை...... படியும் முப்பத்தொன்றுவது...கடவ காசு மூவாயிரத்தொரு நூற்றை**...

---

மன்னன் பெயரும் ஆட்சியாண்டும் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையின்படி எழுதப் பட்டுள்ளது.

கல்வெட்டின் இறுதியில் சில வரிகள் காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 28-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1206 |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 91 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் . சேடபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்தின் வடபுற ஜகதியில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. மன்னன், ஆட்சி பொறுப்பையேற்ற பதினைந்தாம் நாளில், அரசிலாற்றங்கரையில் குணவாயிலுடையார் மீனவன் மூவேந்தவேளார் என்பவர் எழுந்தருளுவித்த இராஜராஜ விஞயகப் பிள்ளையாருக்கு மன்னனின் ஆணையின்படி (நியோகப்படி) தேவதான நிலம், பாம்புரமான குலோத்துங்கசோழ சதுர்வேதிமங்கலத்து மஹாசபையோரால் அளிக்கப்பட்டது. ஆனுல் அவ்வாணையை கல்லிலே வெட்டியது இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில்தான் எனத்தெரிகிறது. ஊர்க் கணக்கு முன்னூற்றுவப் பிரியனும், திருக்குடந்தை செம்பியன் பிரம்மராயரும் கையெழுத்திட்டுள்ளனர். கல்வெட்டின் பிற்பகுதி இடையிடையே சிதைந்து காணப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூ ரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீ

2 குலோத்துங்க சோழ தேவ[ர்*]க்கு யாண்டு இருபத்தெட்டாவது உய்யக்கொண்டார் [வ]ளநாட்டு பாம்பூர் நாட்டு (பாம்பூ

3 ர் நாட்டு)ப் பாம்புரமான குலோத்துங்க[ச்] சோழச் சருப்பேதி மங்கலத்து ம[ா]ஹாஸபையோம் உடையார் திருப்பாம்புர முடையா[ர்]

4 தேவதானம் அரிசிலாற்றங்கரையில் குணவாயிலுடையார் மீன வன் மூவேன்தவேளார் எழுந்தருளுவித்த ராரா விஞயகப் பிள் ளையார்க்குப் ப

( திருப்பவும் )

5 தின் ஐஞ்சாவது நாளில் தேவதான இறையிலி இட்டு எழுத்திட்டுக் குடுத்த நியோகப்படி நிலமாவது நம்மூர்ப்பிடாகை வேளா குடியி

6 ..................................................................

7 வினாயகப் பிள்ளையா[ர்*]க்கு ஊற்கீழ் இறையிலி சந்திராதித்தவற்...சொன்னோம் இப்படி

8 சேவகபணியாளூற்க் கணக்கு முன்னூற்றுவப் பிரியன் எழுத்து இப்ப......னமை திருக்குடந்தை

9 ...செம்பியன் வூம(ா)ராயனார் எழுத்து இப்படிக்கு..........

10 ...த்து இப்படிக்கு இவை கேசவன் திருச்சிற்ற......எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 23-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1274 |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 93 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில், கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்குப்புற பட்டிகைகளில் உள்ளது.

குறிப்புரை : ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் 23-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு.

முட்டைப்புறத்து சங்கர நாராயணபட்டனும் செம்பியன் மாராயனும், இராச நாராயண பிரம்மராயன் என்பவனுக்கு பிணைபட்டிருந்தனர் [Security]. இம்மன்னவனது இருபத்தொன்று, இருபத்திரண்டாவது ஆட்சியாண்டுகளில், கொடுக்க வேண்டிய வரிகளைக் கொடுக்காததால் இருபத்து மூன்றுவது ஆட்சியாண்டில் கொற்ற வாயிலில் சென்று கடமைகளை [வரிகளை] இறுக்காது இராசநாராயண பிரம்மராயன் என்பவன் ஓடிப்போய்விட்டமையால், பிணைபட்ட [Security கொடுத்த] இருவரையும், இராஜநாராயண பிரம்மராயன் கொடுக்கவேண்டியவற்றை நீங்கள் கொடுக்கவேண்டும் என கேட்டதால், இராசநாராயண பிரம்மராயனுக்கு சொந்தமான மனைகளையும், விளை நிலங்களையும் பிணைபட்ட இருவரும் பிணைவிலையாக திருப்பாம்புரமுடையார் கோயிலுக்கு விற்றுக் கொடுத்தனர் என்ற செய்தி கூறப்படுகிறது. ஒவ்வொரு வரியின் கடைசிப் பகுதிகளும் இடையிடையேயும் சிதைந்து காணப்படுகிறது. கடைசிப் பகுதி கட்டிடத்திற்குள் மறைந்திருக்க வேண்டும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்சடபன்மர் திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தர பாண்ட்யதேவர்கு யாண்டு உ௰௩ வது மகர நாயற்று அப[ர]பக்ஷத்து த்ருதியையும் பெற்ற ஆலியத்து நாள் உய்யகொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு பாம்புரமான குலோத்துங்க சோழ சருப்பேதி மங்கலத்து உடையார் திருப்பாம்புரமுடையார் கோயில் ஆதிசண்டேசுரதேவர் கன்மிகளுக்கு இவ்வூர் திருக்குடந்தை......செம்பியன் மராயனும் முட்டைப் புறத்து சங்கர நாராயண பட்டனும்......ணவ......பிரமாணம்பண்ணிக் குடுத்த பரிசாவது இவ்வூர் பெரும் பற்றப் புலியூர் காசிபன் உலக

(திருப்பவும்)

முண்டாண் இராசநாராயண பிரமாராயனும் திரு......பண் ........சோ(ஞ)...........

2 முட்டைப்புறத்து சங்கரநாராயண பட்டனும் இவ்மூவோம் இருபத்தொன்ருவதும் இருபத்திரண்டாவதும் வரை....[கொ]ற்றவாயில் புவனயர் நிற்கையில் இந்த இ[ராசநார]ாயணபிரமா[ரா]யன் நிலை நின்று கடமை இருமல் ஓடிப்போகையில் இருபத்திரண்டாவது வரை சிகைக்கு நாட்டுக்கணக்கு கீழ் முத்தூருடையார் பேராயிரமுடையார் கணக்குப்படி இவர்பேரால் வந்த....இராசநாராயண பிரம்மராயற்கு [பு]ணைப்பட்ட கவுசியன் அழகிய திருச்சிற்றம் பல முடையான்......இராசநாராயண பிரமராயற்கு [பு]ணைப்பட்ட எங்களை இறுக்கவேணும் என்கையில் இந்த இராச நாராயண பிரமராயன் ......க்ஷேத்ரமான மனைகளும் நிலங்களும் இன்னுய...பாம்புர முடையார்........

3 க நாங்கள் புணைவிலையாக விற்றுக் குடுத்தோம் விற்றுக்குடுத்த மனைகளும் நிலங்களுமான இவ்வூர் நத்த[த்*]து இவர்மனைகளுக்கு கீழ்பாற்கெல்லை இன்னுயனூர் திருமடை விளாகத்து எல்லைக்கு மேற்கு தென்பாற்கெல்லை இன்ன[யன*]ர் திருக்குளத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லைவிழா வரு வீதிக்கும் சேலூர் சோலை அரசு பட்டன் மனைக்கும் திருவரங்கமுடையான் பட்டன் மனைக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை விழா வரு வீதிக்கு தெற்க்கு ஆக [இ]சைந்த இன்னன் கெல்லையுள் நடுவுபட்ட மனைகளும்....................ஆற்றுக்கு தெற்க்குபட்ட வீளைநிலத்தில் உய்ய வந்த விளாகம் என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை பாம்பூர்க் கிழார் நிலத்துக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை ஓடை வாய்க்கா[லுக்கு] வடக்கும் மேல் [பாற்கெல்லை]..........

4 ..................................கீழ்பாற்கெல்லை பெருமருதூர் திருசெ ...பலவூர்சதிர பட்டண் நிலத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்லை... உடையான் பட்டன் நிலத்துக்கு மேல்பாற்கெல்லை ....... பட்ட ரூ இரண்டு மாவும்*......[வ]டக் கடை......என்று பேர்கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை வீற்றிருந்தான் பட்டன் நிலத்துக்கு மேற்கும்

5 கெல்லை..........மாதேவபட்டன் உள்ளிட்டார் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை கவுணியன் செம்பியன் மாராயந்பட்டன் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை கோன்நிலத்துக்கு இசைந்த இன்னன் கெல்லையுள் நடுவுபட்ட ரூ இரண்டு மாவும் தத்தமான்னுற்றுக்கு வடக்கு....ம் பற்றூருடையான் உய்ய கொண்டான்....இவன்........[நத்த]த்துக்கு கீழ்பா

6 ற்கெல்லை...ற்றூர் நத்தத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை உடையார் பாம்புரமுடையார் திருநாமத்துக்காணி[1] ...

---

1. இத்துடன் கல்வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

* இரண்டுமா என்பது குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 35-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1213 |
| ஊர் : | திருப்பாம்புரம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 92 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் கருவறையின் வடக்கு மேற்குப்புறச் சுவரில் உள்ள பட்டிகையிலும் வடபுறத்திலுள்ள பத்மத்திலும் ஜகதியிலும் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழனின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. திருப்பாம்புரமுடையார் கோயில் தேவரடியார் பெண்களில் உடையவளான நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம் என்பவள் எழுந்தருளுவித்த பெரிய தேவற்கும் நாச்சியார்க்கும் பாம்புரமான குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்கலத்து மகாசபையோர், ஊர்க்கணக்கு உட்பட பன்னிருவரும், ஆயிரத்து எழுநூற்று ஐம்பது காசு கைக்கொண்டு, மும்மாவரை நிலம் இறையிலி செய்து கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் மதுரையுமீழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளி வீராபிஷேகமும் விசையாபிஷேகமும் பண்ணியருளின திரிபுவன வீரதேவற்க்கு யாண்டு முப்பத்தஞ்சா[வது] [கற்கட]கஞாயற்று பூவ-பக்ஷத்து த்ரிதியையும் திங்கள்கிழமை[யும்*] பெற்ற மூலத்துநாள் உய்ய கொண்டார் வளநாட்டு பாம்பூர் ந

2 ட்டு உடையார் திருப்பாம்புரமுடையார் கோயில் ஆதிச(ண்)டே ஸ்வரதேவர் கன்மிக(ள்)ளுக்கு இந்நாட்டு பாம்புரமாந குலோத் துங்கசோழ சதுவே-திமங்கலத்து மஹாஸபையோம் ஊர்க் கீழ் இறைஇலி ப்ரமாண இசை[ச]வு தீட்டு குடுத்த பரிசாவது இவ்வூர் கோயில் தேவரடியாரில் உடையவளான நாற்பத் தெண்ணாஇரமாணிக்கம் எழுந்தருளி

(திரும்பவும்)

3 வித்த பெரிய தேவர்(ற்)க்கும் நாச்சியாற்கும் அமுதுபடி உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு ஸ்ரீபண்டாரத்து கருசுதைக் கொண்டு இறையிலி செய்து குடுத்த காஸ்யபன் ராஜஜராஜன் ப்ரஹ்மாராயந் நிலம் காணியும் காஸ்யபன் [நிலம்]......பட்ட நிலம் காணியும் காஸ்யபன் பெரியநம்பி திருச்[சி]ற்றம்பல நம்பி நிலம் முக்காணியும் கவுணியந் கு

4 லோத்துங்க சோழச் செம்பியன் பிரம்மராயந் நிலம் காணியும் உலோச்சியந் பெருமாளான வளவாதராயந் நிலம் அரை மாவும் உலோச்சியந் தேவபிரான் பட்டந் நிலம் காணியும் கவுணியந் சொக்கனுன் தே[வனும்].......... தேவனப்பெருமானும் திருச்சிற்றம்பலமுடை (முடை)யானும் நிலம் காணியும் உலோச்சியன் ஆளுடையான் பட்ட

5 ன் நிலம் அரை மாவும் உலோச்சியந் திருவிடைமருதுடையான் பட்டந் நிலம் காணியும் ஊற்கணக்கு முன்னூற்றுவப் பிரியந் நிலம் காணியும் ஆக பொத்தகபடி நிலம் மும்மாவரையும் இறையிலி செய்து குடுத்து ஸ்ரீ................ ஆயிரத்து எழு நூற்று ஐம்பதும் கை[க்]கொண்டு இறைஇலி செய்து குடுத்தோம் இக்கோ

6 இல் ஆதிசண்டேஸ்வர தேவர்கன்மிகளுக்கு இம்மஹாஸ[பை]யோம் இன்னிலம் மும்மாவரைக்கும் ஒருதடியாக செ[ப்]பிட வேணும் என்று சொன்னமையில் உடை......துடைய[ரசி]க்கு இவ்வூரில் தேவதானம் இ[ந்நி]லத்து இவூரில் சிறுவேளூருடையான் ஒற்

7 றிக்கொண்டான் காணியா[க*] வருகிற நூல்வாய் ஆற்றுக்கு வடகரை[ப்பட்ட] நிலத்து இறையாந்சேரி எல்லேக்கு மேற்கும் செம்பியன் சிறைக்காலூர் எல்லேக்கு வடக்கும் உடைய திரு... முடையார் ஊர்க்கீழ் இறையிலி பசலேயான வேலி நில......... மக்கும்......இக்கோயில் திருவாதலூர் பெருமாள்

8 ஊற்கீழ் இறையிலிக்கு தெற்க்கும் நடுவுபட்ட இராயகெம்பீர..... நிலம் மும்மாவரை இந்நிலம் மும்மாவரையும் உடையார் திருவிடைமருதுடையார்......த்தஞ்சாவது கார்முதல் சந்திராதித்த வரை பெரியதே[வர்]...அமுதுபடிக்கு உடலாக ஊற்கீ

9 ழ் இறையிலிக்கு கடமை குடிமை இறுக்கவும் இந்நிலத்து....... உடையார் திருவிடைமருதுடையார் தேவதானத்து நாங்கள் இறுத்து வருகிற.......குடிமை இறுக்க கடவோமாகவும் இறுக்கும் யிடத்து நாங்கள்....நில....றையிலாபம் மான[டி]களில் பூ

10 ண்ட காஸ்யப*ன் இராசநாராயண மகாராயன் பொத்தகப்படி நிலம் காணிக்கு தம்பிறித்த உய்யவந்த விளாகம் என்று பேர் கூவபட்ட நடியில் நிலம் அரைக்காணி முந்திரிகைக்கு [சி]று வேளூருடையான் ஒற்றிகொண்டான் பக்கல் கைக்கொண்ட.... காஸ்யபன் சோ... அரைசு*

---

* கல்வெட்டு இத்துடன் நின்று விட்டது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 15-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1261 |
| ஊர் : | திருப்பாம்புரம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 88 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்குப்புற குமுதத்தில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் இராஜேந்திரசோழனின் பதினேந்தாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக் கல்வெட்டு. பெருமருதூர் திருச்சேறை நின்றன் பட்டன் என்பவனே முதுகண்ணுகக் (Guardian) கொண்டு சொக்காண்டாள் சானி என்ற பெண் இரண்டாயிரம் காசுகள் பெற்றுக்கொண்டு ஆறுமா நிலத்தினே, திருப்பாம்புரமுடையார் கோயிலுக்கு விற்றுக்குடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. சொக்காண்டாள்சானி என்ற பெண் திருவிடைமருதுடையான்பட்டன் என்பவனின் பிராமணி [மனைவி] எனக்கூறப்படுகிருள். இவள் தன் மகன் பெருமருதூர் திருச்சேறை பட்டனே முதுகண்ணுகக் கொண்டதால், இவள் கணவன் திருவிடைமருதுடையான் பட்டன் இறந்திருக்கவேண்டும் எனத்தெரிகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவநச்

2 சக்கரவத்திகள் ஸ்ரீரா

3 ஜேந்த்ர சோழதேவர்க்கு

4 யாண்டு ௰ரு [ஆ]வது ஶநு நாயற்று பூவபக்ஷத்து தஶமியும் அஸ்வதியு[ம்*] பெற்ற திங்கள்கிழமை நாளு[ய்*]யக்கொண்டா[ர்*] நாட்டு பாம்புரமான குலோத்துங்க சோழச் சது[ப்பேதிமங்கலத்து]............குடிகிழ

5 என் மகன் பெருமருதூர் திருச்சே[ற]ற நின்ருன் பட்டனே முதுகண்ணுகக்கொண்டு நிலவிலே வ்யவஸ்தை இசை[சவு] தீட்டு உடையார் திருப்பாம்புரமுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வரதேவகன்மிகளுக்கு நான் இவ்வூரில் கவுணியன்.......த்த

( திருப்பவும் )

6 உள்சிறு வாய்க்காலுக்கு மேற்க்கும் வடபாலெல்லை முன்னூற்று வன் வாய்க்காலுக்கு தெற்குமாக என்னுதான ரூ பப இந் நிலம் ஆறு மாவும் விற்றுக்குடுத்துக் கொள்வதான காசு ௨௲ இரண்டாயிரமு மாவணக்களரிய் நேராக் கைக்கொண்டு விற்று விலை [ப்ரமாணம் பண்ணிக் குடுத்தேன் [சொக்காண்டாள]

7 சாநியேன் இப்படி இவளுக்கு முதுகண்பட்டு இந்நிலம் வபம் விற்றுக் குடுத்தமைக்கு பெருமருதூர் திருச்சேறை நின்[றான்*] பட்டன் எழுத்து இப்படி...[வல]லூர் பாவமதித்தான் பட்ட னேன் இப்படி அறிவேன் வலவூர் பெரிய நம்பி சீத[ர]பட்டன் எழுத்து......

8 திருவுடை மருதுடையான்பட்டன் ப்ராஹ்மணி சொக்காண்டாள் சானியேன்

9 [இ]ற்றை நாளால் நான் விற்றுக்குடுத்த நிலத்துக்குக் கீழ்பா லெல்லை

10 ....திருப்பாம்புரமுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மி களுக்கு சொக்காண்டாள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13-ஆவது* |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாம்பரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | 87 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | | |

**இடம்** . சேடபுரீஸ்வரர் கோயில் கருவறையின் மேற்குப்புற ஜகதியில் உள்ளது.

**குறிப்புரை :** இராஜ இராஜசோழனின் பதின்மூன்றும் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. வாருணவாதீசுரமுடையானை கோசலராயர் என்பவர், திருப்பாம்புரமுடையார் கோயில் இறைவனுக்கு அபிஷேகம் செய்யவும் அமுது படைப்பதற்கு வேண்டும் பால், நெய் முதலியவற்றிற்காகவும், பசுக்கள் பத்தும் கன்றுகள் மூன்றும் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இவர் திருப்பாம்புரமுடையார் கோயில் வாசலுக்கு உள்புறத்தில் பசு-கன்றுகளைக் கட்டுவதற்கு ஒரு கொட்டிலும் கட்டி 'அவை மேய்ப்பதற்கு ஒரு ஆளும் நியமித்து, அவனுக்கு தினம் குறுணி நெல் கூலியாக கொடுப்பதற்கு நிலம் கொடுத்த செய்தியும் கூறப்படுகிறது. இக்கல் வெட்டின் 5-ம் வரியில் 'இருநாழி அரிசிச்சோறு . . . . எனக் கூறப்படுகிறது. அவ்வரிக்குப் பின்னுள்ள எழுத்துக்கள் தெளிவாக இல்லாததால் அதுபற்றிய விவரம் அறிந்து கொள்ள இயலவில்லை.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜ தேவர்[க்கு யாண்டு பதிமூன்றுவது] ஐப்பசி மாஸத்து உடையார் திருப்பாம்புரம் உடையார்க்கு ஆடி அருள்ளவும் அமுது....

2 ள்ளவும் பால் நெய் உள்ளிட்டின..............ற்றுக்கு மணக்குடையார்...னவாருணவாதிசுரமுடையானை கோசலராயர்......வித்த

3 சுரவிபத்தும் நாகுகன்று மூன்றும்............லும் திருவாசலுக்கு உள்ளுச்சுரவிக்கொட்டில் கட்டிபுல்லும்[வை]

4 க்கோலும் கூழும் உள்ளி.........கவும் சுரவி மேக்கிற இவனுக்கு நாள் ஒன்றுக்குக் குறுணிக்கு நிலம்

5 இருநாழி அரிசிச்சோ[று] விற்ற**.............

---

* ஆட்சியாண்டு கூறப்படும் பகுதி கல்வெட்டில் முழுவதும் தற்போது சிதைந்து காணப்படுவதால் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையின்படி ஆட்சியாண்டு தரப்பட்டுள்ளது.

** கல்வெட்டின் பிற்பகுதி காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 2-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாம்புரம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 89 of 1911 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | சுந்தரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில், கருவறையின் மேற்குப்புற ஜகதிப்படையில் உள்ளது.

குறிப்புரை : சுந்தரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் வெம்பற்றூருடையான் ஆலால சுந்தரவேளான் மகன், தன்னுடைய நிலம் கால் வேலியை திருப்பாம்புரமுடையார் கோயிலுக்கு திருநாமத்துக் காணியாக நீர் வார்த்துக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

இம்மன்னன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனாகவோ அல்லது முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனாகவோ இருத்தல்வேண்டும் இருவரில் உறுதியாக யாரெனத் தெரியவில்லை.

கல்வெட்டு :

1 திரிபுவ[ன*]ச்சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு இரண்டாவது ஜேஷ்நாயற்று பூவபக்ஷத்து [து*]வா[த]ஸியும் பெற்ற சனிக்கிழமை நாள் உய்யகொண்டார் வளநாட்டு பாபபூர் நாட்டு வெம்பற்றூருடையான் ஆலாலசுந்தர வேளான் மகன்......மங்கலத்து

2 [ப]ற்றுடையேனாய் என்னுதான ரூ நிலமாவது பாம்புரத்துப் பாம்பூர் வாய்க்காலுக்கும் கிழக்கு தடி இரண்டு விட்டு சிங்கன் காலென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாலெல்லை........ நிலத்துககு மேற்கும் வடபாலெல்லை உள்சிறு வாய்க்கால்க்குத் தெற்குமான ரூ வ இந்நிலம் உடையார்

3 திருநாமத்துக் காணியாக நீர் வார்த்துக் குடுத்தேன் இந்நிலம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 28-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி. பி 1244 |
| ஊர் : | திருப்பாம்புரம் | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 99 of 1911 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றும் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் கருவறையின் மேற்குப் புறச் சுவரிலுள்ள கம்பிலுள்ளது.

குறிப்புரை : இராஜராஜ சோழனின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில், தாமோதரனை சோழிய தரைய வேளான் என்பவன், திருப்பாம்புரமுடையார் கோயில் இரண்டாம் பிரகாரத்தில் ஆத்தான மண்டபம் ஒன்று கட்டிய செய்தி கூறப்படுகிறது. அத்துடன் பாம்புரமான குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்து மஹா சபையோர், மேற்கூறிய ஆத்தான மண்டபத்தை பழுதுபார்த்து சீர்படுத்துவதற்கு அந்தராயம் இறையிலி செய்து திருமண்டபப் புறமாக நிலம் கொடுத்த செய்தியும் கூறப்படுகிறது. கல்வெட்டின் கடைசிப் பகுதி காணப்படவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்க்கு யாண்டு உ௰அ வது உய்யக்கொண்டார் வளநாட்டு உடையார் திருப்பாம்புரமுடையாற்க்கு முந்தகை ஆத்தாந மண்டபம் [இரண்டாம் பிரகாரத்து] ஸமுச்சக்கமது ஊருடையான் தாமோதரனை

2 சோழியதரைய வேளான் செ[ய்*]த திருமண்டபத்துக்கு பாம்புரமான குலோத்துங்க சோழ சதுவேதி மங்கலத்து மஹாஸபையார் இழவு பழுதுகளுக்குடலாக சன்திராதித்தவரை அந்தாராய[மாக இ]றையி[லி] செய்து தந்த உடையார் [திருப்பாம்புரமு]

3 டையாற்க்கு இவ்வூரிலும் பிறிந்த ஊர்களிலும் தேவதான நிலத்து ஏற்றி இறுக்க இந்நுபஙர் தேவதாநத்து விக்கிரம சோழன் பூசங்குடியில் வைகவூறு(ரு)டையான் பொன்னம்பலக் கூத்தன் [இறுத்து] வருகிற நிலத்துக் கழித்து திருமண்டப புறமாக விட்ட*

* கடைசிப் பகுதி காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 22-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 90 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் சேடபுரீஸ்வரர் கோயில் கருவறையின் மேற்குப்புற அதிட்டானப் பட்டிகையில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் இராஜராஜ சோழனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில், பழுவேட்டரையர் என்பவர், திருப்பாம்புரமுடையாருக்கு நித்தம் அரிசிலாற்றிலிருந்து திருமஞ்சனம் எடுத்து வருகிற கலத்துக்கும், ஐம்பத்திரண்டு செங்கழுனித் திருப்பள்ளித் தாமங்களுக்கும், தன்னுடைய காணியான நிலத்தி லிருந்தும் குளத்திலிருந்தும் இறையிலியாக நிலம் கொடுக்கப்பட்ட செய்தி கூறப் பட்டுள்ளது அரிசிலாற்றிலிருந்து திருமஞ்சனம் எடுத்து வருகிறவனுக்கும், செங் கழுனி இடவும் நிலம் கொடுக்கப்பட்டன. பெருளூரைச் சேர்ந்த ஒருவர் திருக் காமக்கோட்டமுடைய மாமலையாட்டியார்க்கு வேண்டும் அமுதுபடிக்காக நிலம் கொடுத்த செய்தியும் தெரிய வருகிறது. கல்வெட்டு முற்றுப் பெறாது இடையில் நிறுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்க்கு யாண்டு உ௰உ வது ரிஷ நாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் புதன் கிழமையும் பெற்ற பூசத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டு உடையார் திருப்பாம்புர முடையார்......ஆன...பாட்டடை......பழுவேட்டரையர் நித்தல் படிக்கு அரிசில்லாற்றில் திருமஞ்சனப் [திரு]கலத்துக்கும் ஐம்பத்திருச்செங்கழனித் திருப்பள்ளித் தாமத்துக்கும் இவ் வூரிலும் பிறிஙு(த) ஊரிலும் இவர் காணியான நிலத் தும் குளத்தும் உட்ப்பட பிடாரி கோயிலுக்கு தெற்க்கு

( திருப்பவும் )

ந[த்]த[ம்] தென்கரையில்க்கொண்டு அரைக்கோல் அகலத்து போகிற சா...வாக்காலுக்கு

2 வடகுளம் சிறுது திருந்து உள்பட நிலம் பஞ்ச இதில் ஊர் நீங்கின இறையிலி நித்தல்ப் படிக்கு திருசெங்கழனி இட அடத்த ரூ ரு...ம் திருமஞ்சனம் எடுப்பானுக்கு அடைத்த ரூ ... ம் வகும் இந்நிலத்து ஒட்டா. இக் கோயிலில பெருளூர் கிழவன [எழுந்]தருளிவித்த திருக்காம கோட்டமுடையமாமலையாட்டி[யா]ர்க்கு அமுதுபடிக்கு உடலாக*

---

இத்துடன் கல்வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 13-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் ஆளவந்தாள் என்ற பெண் தன்னிடம் சில அடியார்களை வைத்திருந்த செய்தியும் தன் அடியார்களில் சிலரை கோயிலுக்குக் கொடுத்தாள் என்ற செய்தியும் தெரிய வருவதுடன், அவ்வாறு கொடுக்கப்பட்ட அடியார்கள், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உறவினர் என்ற செய்தியும் தெரியவருகிறது. இக்கல்வெட்டில் சில வரிகளே கிடைத்துள்ளன. அதுவும் முதல் பகுதி சிதைந்து காணப்படுகிறது. எனவே அடிமைகள் விற்கப்பட்டனரா அல்லது தானமாக கொடுக்கப்பட்டனரா எனத்தெரிந்து கொள்ள இயலவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்[கு*] யாண்டு ௰௩ வது
2 ....ஆளவந்தாள் தன் அடியாரில் திருவுடையாள்
3 ......நாச்சியையும் இவள்
4 ............[கே]ாயில் கொண்டாளையும்
5 ..............................

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 27-ஆவது |
| வட்டம் : | நன்னிலம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1205 |
| ஊர் : | திருப்பாம்புரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 85 of 1911 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| மன்னன் : | மூன்றும் குலோத்துங்கன் | | |

இடம் : சேடபுரீஸ்வரர் கோயில் அர்த்த மண்டப தென்புறச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றும் குலோத்துங்க சோழ தேவரின் இருபத்தேழாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டு. வேசாணலையார் என்பவர் மனைகுழி இருபத்தொன்று விலைக்கு வாங்கியது, திருப்பாம்புரமுடையார் கோயில் இறையிலி மனைக்குழி ஆகையால் அம்மனைக்குப் பதிலாக வேறு இடத்தில் திருவீதியின் நடுவில் இருபத்தோறு குழி இறையிலியாக கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. கல்வெட்டின் இறுதிப் பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும்

2 பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவ

3 ற்கு யாண்டு உ௰எ-வது பாம்புரத்தூர் [நத்த]த்து இறையிலி மனையில் [வே]

4 சாணலையர் விலை கொண்ட இறையிலி மனை குழி [உய கம்] திருப்பாம்புரமு[டை]

5 யாருடன் பாவத்திது இது[க்*] குதலைமாறு இன்னுயனர் திருமடைவிளாகத்து......ல

6 திருவீதியில் நடுவடைய்இன குழி உ௰௧ம் இறையிலியாக*.........

* கல்வெட்டின் பிற்பகுதி காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சை | ஆட்சி ஆண்டு : | 28-ஆவது |
